Registered as Newspaper

# உதயன்

பக்கங்கள் - 24 | விலை 30 செய்தி: 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

சுடர் :35 கதிர் :224 ஆனி 26ஆம் நாள் வெள்ளிக்கிழமை 10 ஜூலை 2020 வள்ளுவர் ஆண்டு 2051

## முகக் கவசம் அணியாதோருக்கு வடக்கில் ஆப்பு

எச்சரிக்கிறார் பணிப்பாளர்

யாழ்ப்பாணம், ஜூலை 10

முகக்கவசம்அணியாதுநடமாடு பவர்களுக்குஎதிராகசட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் 14 நாள்கள் கட்டாய தனிமைப்ப டுத்தலுக்கும் உட்படுத் 21 >

## இலங்கையில் மீண்டும்

# விஸ்வரூபமெடுக்கும் கொரோனா இரண்டாவது அலையா?

### 57 பேருக்கு நேற்றுத் தொற்று

கொழும்பு, ஜூலை 10

இலங்கையில் மேலும் 57 பேருக்கு கொரோனாத் தொற்று உள்ளமை நேற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்றுசுகாதாரசேவைகள்பணிப் பாளர் நாயகம் மருத்துவர் அனில் ஜாசிங்க தெரிவித்துள்ளார். கந்தக்காடு தனிமைப்படுத்தல்நிலையத்தில்தடுத்துவைக்கப்பட்டிருந்தவெலிக்கடை சிறைச்சாலை கைதிகள் மற்றும் ஊழியர்கள் என்று 450 பேருக்கு மேற் கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் 56 பேருக்கு கொரோனாத் தொற்று கண்டறியப்பட்டுள்ளது. 21 >

## லட்சத்தை தொட்டது பவுண்

கொழும்பு, ஜூலை 10

உலக சந்தையில் தங்கத்தின் விலையில் ஏற்படும் மாற்றங்களால், நாட்டிலும் விலை அதிகரித்துள்ளது என்று கொழும்பு செட்டியார் 23 >

## கொரோனா தொற்றாளி பேருந்தில் பயணம்

கொழும்பு, ஜூலை 10

கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்ட பொலனறுவை, கந்தக்காடு புனர்வாழ்வு மையத்தின் ஆலோசகர் பேருந்துகளில் பயணித்துள்ளார் என்று தொற்று நோய் பிரிவு தலைவர் தெரிவித்துள்ளார். 23 >

## கோணேச்சரத்தை தாரைவார்க்கோம்

எல்லாவலமேதானந்ததேரரின் பிதற்றலுக்கு சம்பந்தர் பதிலடி

கொழும்பு, ஜூலை 10

தமிழர்களின்தலைநகரானதிருகோணமலையையும், திருக்கோணேச்சரம் ஆலயத்தையும் எவருக்கும் தாரைவார்க்கவேமாட்டோம். இவ்வாறுதமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் தலைவரும் 21 >

## மேதானந்ததேரரின் கூற்று பொருத்தமற்றது

சக்திகிரீவன் காட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 10

யாழ்ப்பாணம் நல்லூர் ஆலயம் சபுமல் குமார என்ற சிங்கள இளவரசனால்கட்டப்பட்டதுஎன்றுஎல்லாவெல மேதானந்ததேரர்கூறுவது 21 >

## யாழ். நகரில் பட்டப்பகலில் கத்திக் குத்து

யாழ்ப்பாணம், ஜூலை 10

யாழ்ப்பாண நகர இரண்டாம் குறுக்குத்தெருவில்நேற்றுபகல் ஒருவர்மீதுகத்திக்குத்துத்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இந்தச் சம்பவத்தில்மோட் 21 >

## வட, கிழக்கு மக்கள் தேர்தல் தொடர்பில் அக்கறையில்லை

*தவிசாளர் தேசப்பிரிய கவலை*

கொழும்பு, ஜூலை 10

வடக்கு, கிழக்கு மக்களிடம் தேர்தல் தொடர்பில்அக்கறையின்மைஏற்பட்டுள்ளதாக தேர்தல் ஆணைக்குழுவின் தவிசாளர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார். 24 >

## கோணேச்சரம் இஸ்லாமியருடையது உலமா கட்சி புரளி கிளப்புகிறது

இலங்கைக்கு வந்தது ராமர் அல்ல ரஹ்மானாம்

கொழும்பு, ஜூலை 10

திருக்கோணேச்சரத்தில் பௌத்த விகாரை இருந்தது என்ற மேதானந்ததேரரின் கருத்தை ஏற்கமுடியாது. இராவணன் முஸ்லிம் மன்னன். அதனால் அவர் காலத்தில் கேணேச்சரம்இஸ்லாமியர்களுக்குரியஇடமாகவேஅதுஇருந்திருக்கும். இவ்வாறு உலமாக்கட்சியின் தலைவர் மௌலவி முபாறக் அப்துல் மஜீத் தெரிவித்துள்ளார். கோகண்ண விகாரை 21 >

## மாத்தளன் மீனவர்கள் மீது கடற்படையினர் தாக்குதல்!



24 >

## சுமந்திரனுக்கு எஸ்.ரி.எவ். பாதுகாப்பு அதிகரிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 10

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான 21 >

## தமிழரின் மனதை புண்படுத்தாதீர்கள்

பௌத்த கடும்போக்குவாத தேரர்கள் மீது சீறிப் பாய்கின்றார் மங்கள

கொழும்பு, ஜூலை 10

தமிழ், இந்து மக்களைக் குறிவைத்து இனவாத, மதவாதக் கருத்துக்களைக் கக்கி அவர்களின் மனதை பௌத்த தேரர்கள் சிலர் புண்படுத்தி வருகின் 21 >

## நவாலி நினைவேந்தலைத் தடுக்க பொலிஸார்பகீரதப்பிரயத்தனம்

தடைகளைத் தாண்டி உணர்வுபூர்வமான அஞ்சலி

யாழ்ப்பாணம், ஜூலை 10

யாழ்ப்பாணம், நவாலி சென். பீற்றர்ஸ் தேவாலயம் மற்றும் நவாலி சிறி கதிர்காம முருகன் ஆலயம் மீதான சிறிலங்கா விமானப் படையின் தாக்குதலின்25ஆம்ஆண்டு நினைவேந்தல் நேற்று மாலை 4.15 24 >

## தமிழர்களை அடிமைப்படுத்தவா சிங்களவர்களுடன் செயலணி?

கோத்தாவிடம் ரணில் கேள்விக்கணை

கொழும்பு, ஜூலை 10

கிழக்கு மாகாணத்தில் காணப்படும் தொல்பொருள் சின்னங்களைப் பாதுகாக்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ள ஜனாதிபதி செயலணியில் தமிழ், முஸ்லிம் மக்களின் சார்பில் பிரதிநிதிகள் எவரும் இணைத்துக்கொள்ளாமை தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவ 21 >




மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# த.தே.கூட்டமைப்பு உறுப்பினர்கள் சபையில் இருந்து வெளியேறினர்

யாழ்ப்பாணம், ஜூலை 10

யாழ்ப்பாணம் மாநகர சபையின் மாதாந்த அமர்வுக்கு அறிவிக்கப்பட்ட அறிவித்தல் சட்டபூர்வமான கால எல்லையை கொண்டிருக்கவில்லை என மாநகர சபையின் செயலாளர் அ.சீராளன் தெரிவித்ததை அடுத்து, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் அனைவரும் சபையில் இருந்து வெளியேறினர்.

மாநகர சபையின் மாதாந்த கூட்டம் நேற்று இடம்பெறும் என்று கடந்த 6ஆம் திகதி இடப்பட்டு அறிவித்தல் வழங்கப்பட்டது. இது மாநகர கட்டளைச் சட்டத்துக்கு அமைவான போதுமான காலப் பகுதியா என மாநகர சபை உறுப்பினர் ம.அருள்குமரன் கேள்வி எழுப்பினார். இதற்குப் பதிலளிக்கும்போதே செயலாளர் மேற்கண்டவாறு பதிலளித்தார்.

இது தொடர்பில் செயலாளர் மேலும் தெரிவித்ததாவது:

மாநகர கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் போதுமான காலப் பகுதி இல்லை என்பதை நான் ஏற்றுக்கொள்கின்றேன். இருப்பினும் 10ஆம் திகதியே கூட்டம் இடம்பெறுவதாக இருந்த நிலையில் ஓர் உறுப்பினரின் வேண்டுகோளின் பெயரில் மாற்றம் செய்யப்பட்டது. இருப்பினும் சபை ஏற்றுக்கொண்டால் கூட்டத்தை நடத்தலாம் - என்றார்.

கட்டளைச் சட்டத்துக்கு முரணாகவே அறிவித்தல் அமைகின்றது எனச் செயலாளரே கூறுவதனால் இன்றைய (நேற்றைய) தீர்மானங்களும் கேள்விக்கு உட்பட்டது என்றதன் அடிப்படையிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் அனைவரும் சபையில் இருந்து வெளியேறினர். பதில் முதல்வர் உட்பட 18 பேர் சபையில் இருந்த நிலையில் தொடர்ந்தும் கூட்டம் இடம்பெற்றது. (எ)

## குருதிக்கொடை

யாழ்ப்பாணம், ஜூலை 10

நோர்வே பமிலி மார்ட் அனுசரணையுடன் அக்னி இளைஞர் அணியால் குருதிக்கொடை முகாமொன்று நடத்தப்படவுள்ளது.

ஜெ/110 கிராம அலுவலர் முன் மண்டபத்தில் நாளையதினம் இந்தக் குருதிக்கொடை முகாம் இடம்பெறவுள்ளது. காலை 9 மணிமுதல் மாலை 3 மணிவரை இந்த குருதிக்கொடை முகாம் இடம்பெறும் என்று ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ம)

## ஐ.நா.சபையின் செயற்பாடுகள் அரசியல் ஆதாயத்துக்கானது!

### இலங்கை குற்றச்சாட்டு

மனித உரிமைகளைப் பின்பற்றுவதையும் பாதுகாப்பதையும் ஊக்குவிக்கும் நிறுவனங்களின் நம்பகத்தன்மையானது, தேவையற்ற முறையில் அரசியல் மயமாக்கப்படும்போது கணிசமாகக் குறைமதிப்பிற்கு உட்படுத்தப்படலாம் இவ்வாறு குற்றம்சுமத்தியுள்ளது இலங்கை.

ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையில் 'சமாதான நடவடிக்கைகள் மற்றும் மனித உரிமைகள்' குறித்த உயர் மட்ட திறந்த விவாதம் நேற்று இடம்பெற்றது. அதில் இலங்கைக் குழுவால் முன்வைக்கப்பட்ட அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:

மனித உரிமைகளைப் பின்பற்றுவதையும் பாதுகாப்பதையும் ஊக்குவிக்கும் நிறுவனங்களின் நம்பகத்தன்மையானது, தேவையற்ற முறையில் அரசியல்மயமாக்கப்படும்போது கணிசமாகக் குறைமதிப்பிற்கு உட்படுத்தப்படலாம் என்பதைக் குறிப்பிடுவது பொருத்தமானது. தேவையற்ற அரசியல் ஆதாயங்களுக்காக மனித உரிமை மீறல்கள் நிரூபிக்கப்படாத குற்றச்சாட்டுக்கள் அமைதி காக்கும் பங்காளிப்புக்களுக்கு தேவையற்ற முறையில் அழுத்தம் கொடுப்பதற்கும், கையாளுவதற்குமான கருவிகளாக பயன்படுத்தப்பட்ட சம்பவங்களும் உள்ளன. ஒவ்வொரு மனிதனின் உரிமைகளையும் உறுதி செய்ய உறுதிபூண்டுள்ள மிகப்பெரிய உலகளாவிய அமைப்பாக ஐக்கிய நாடுகள் சபை எப்போதும் பாரபட்சமின்றி இருக்க வேண்டிய அதே நேரத்தில், உறுப்பு நாடுகளுடனான அனைத்து தொடர்புகளிலும் இறையாண்மை சமத்துவத்தின் கொள்கையை முறைமையாக மதிக்கின்றது என இலங்கை உறுதியாக நம்புகின்றது - என்றுள்ளது. (ம)



# உழைக்கும் வர்க்கத்திடம் இருந்து தலைவர்கள் உருவாகல் வேண்டும்

### செந்தில்வேல் இப்படித் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 10

முதலாளித்துவத்தில் இருந்து தொழிலாளர்களுக்கும் அரசியலில் வாய்ப்புகளும் சந்தர்ப்பங்களும் வழங்கி அடிப்படை மக்களின் தேவைகள் நிறைவேற்றப்பட வேண்டும். உழைக்கும் வர்க்கத்தில் இருந்து தலைவர்கள் உருவாக வேண்டும் இவ்வாறு தெரிவித்தார் மார்க்சிச லெனினிய கட்சியின் செயலாளரும் மக்கள் மேம்பாட்டு ஐக்கிய முன்னணியின் வேட்பாளருமான சி.க.செந்தில்வேல்.

நேற்றுக் காலை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

நீண்டகாலமாக தமிழ்த் தேசியம் பேசிக்கொண்டு இருக்கின்ற ஒவ்வொரு கட்சிகளும் முதலாளித்துவத்தை அடிப்படையாகக் கொண்டும், மேட்டுக்குடியில் உள்ளவர்களை அங்கத்தவர்களாக கொண்டும் அரசியல் பயணத்தை முன்னெடுத்து வருகின்றன. தொழில் புரிகின்ற விவசாயம் செய்கின்ற அடிப்படை வேலைகளில் ஈடுபடுகின்ற தொழிலாளர் வர்க்கத்திடமிருந்து தலைவர்களை உருவாக்குவதில் முட்டுக்கட்டைபோட்டு வருகின்ற நிலைமையையும் காணக்கூடியதாக இருக்கின்றது. உழைக்கும் வர்க்கத்தினருக்கு நாடாளுமன்றத்தில் முன்னுரிமை வழங்க வேண்டும்.

அத்துடன் அடிப்படை மக்களின் தேவைகளை பூர்த்தி செய்யாத எந்த ஒரு அரசியல் தலைமைகளும் நாடாளுமன்ற கதிரைகளை அலங்கரிப்பதற்கு இனிவரும் காலங்களில் தமிழ் மக்கள் இடமளிக்கக் கூடாது - என்றார். (ம)

## ஹெரோய்னுடன் பெண்கள் கைது

ஹெரோய்னுடன் மூன்று பெண்கள் ஹுங்கம பகுதியில் வைத்து நேற்றுமுன்தினம் மாலை 4.30 மணியளவில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஹுங்கம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போதே இந்தப் பெண்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது, குறித்த பெண்களிடம் இருந்து 52 கிராம் 615 மில்லிகிராம் ஹெரோய்ன், 9 மில்லி மீற்றர் துப்பாக்கிகளுக்கு பயன்படுத்தும் தோட்டாக்கள் இரண்டு, மெகசின் ஒன்று, செட்லைட் தொலைபேசி ஒன்று மற்றும் நான்கு கையடக்கத் தொலைபேசிகள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது. 32, 28 மற்றும் 33 வயதுடைய பெண்கள் மூவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர். சம்பவம் தொடர்பில் ஹுங்கம பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ரி2)

## தொற்று நீக்கி தயாரித்தவர் கைது

காலாவதியான இரசாயன பொருள் களைப் பயன்படுத்தி கைகளைச் சுத்தப் படுத்தும் தொற்றுநீக்கியைத் தயாரித்து வந்த நபர் ஒருவரை தலங்கம பகுதியில் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அவரிடம் இருந்து 50 இலட்சத்துக்கும் அதிகமான பெறுமதியுடைய இரசாயன பொருள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இதன்போது இரசாயனப் பொருட்கள் உள்ளடங்கிய போத்தல்கள், கைகளைச் சுத்தப்படுத்தும் கிருமிநாசினி மற்றும் 17 கலன்கள் கைப்பற்றப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ரி1)

# உயிர்த்தஞாயிறு தாக்குதல் தொடர்பில் ரிசாத்திடம் 10 மணிநேரம் விசாரணை!!

கொழும்பு, ஜூலை 10

உயிர்த்த ஞாயிறு பயங்கரவாத தாக்குதல் தொடர்பில் நேற்று சிஐடியில் ஆஜராகிய ரிஷாட் பதியுதீனிடம் 10 மணி நேரம் வாக்குமூலம் பெறப்பட்டது. உயிர்த்தஞாயிறுதினத் தாக்குதல்கள் தொடர்பில் தற்போது வாக்குமூலம் பெறப்பட்டு வருகின்றது. ரிசாத் பதியுதீனிடம் வாக்குமூலம் பெறுவதற்காக நேற்று அவருக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. அவரிடம் 10 மணிநேரம் விசாரணைகள் நடத்தப்பட்டன. (ம)

# தென்மராட்சியில் காலபோக பதிவுகள் ஆரம்பம்

சாவகச்சேரி, ஜூலை 10

தென்மராட்சி தெற்கு, மறவன்புலவு கமக்கார அமைப்புக்குட்பட்ட அங்கத்தவர்களுக்கு இந்த வருட காலபோக நெற்செய்கைக்கான உரமானியப் பதிவுகள் இன்று வெள்ளிக்கிழமை ஆரம்பமாகவுள்ளன என்று கமக்கார அமைப்பின் தலைவர் சி.திருஞான சம்பந்தர் தெரிவித்துள்ளார்.

அத்துடன், இன்றும் நாளையும் சாவகச்சேரியில் உள்ள தனது வீட்டிலும், எதிர்வரும் 12ஆம் மற்றும் 13 ஆம் திகதிகளில் மறவன்புலவில் உள்ள செயலாளரின் இல்லத்திலும் பதிவுகள் நடைபெறும் எனவும், பதிவுசெய்ய வருவோர் தமது தேசிய அடையாள அட்டை மற்றும் இவ்வருடத்துக்கான ஏக்கர் வரி, சந்தா என்பன செலுத்திய பற்றுச்சீட்டுக்களுடன் பதிவுகளை மேற்கொள்ள வருகைதருமாறும் அறிவித்துள்ளார். (ரி3-9)

# இலங்கையில் மீண்டும் இன, மத மோதலுக்கு தூபமிடும் தேரர்கள்

## ஐ.தே.க. கடும் விசனம்

கொழும்பு, ஜூலை 10

'ராஜபக்ச அரசின் ஆதரவுடன் இயங்கும் ஒருசில பௌத்த தேரர்கள் நாட்டில் மீண்டும் இன, மத மோதலை ஏற்படுத்தும் வகையில் கருத்துக்களை வெளியிட்டு வருகின்றார்கள்' இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச்செயலாளர் அகிலவிராஜ் காரியவசம் விசனம் தெரிவித்தார்.

கிழக்கு தொல்பொருள் மரபுரிமைகளைப் பாதுகாக்கும் ஜனாதிபதி செயலணியின் உறுப்பினர் எல்லாவல மேதானந்த தேரரின் சர்ச்சைக்குரிய கருத்துக்கள் தொடர்பில் வினவியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

'பௌத்த மதத்தின் புனிதத்தன்மையை வணக்கத்துக்குரிய தேரர்களே பாதுகாக்க வேண்டும். எனினும், ஒருசில தேரர்களின் இனவாத, மதவாதக் கருத்துக்களினால் ஒட்டுமொத்த பௌத்த மதத்துக்கும் இழுக்கு ஏற்படுகின்றது.

ராஜபக்ச அரசின் ஆதரவுடன் இயங்கும் ஒருசில பௌத்த தேரர்கள் நாட்டில் மீண்டும் இன, மத மோதலை ஏற்படுத்தும் வகையில் கருத்துக்களை வெளியிட்டு வருகின்றார்கள். இவர்களின் இந்தச் சர்ச்சைக்குரிய கருத்துக்கள் தொடர்பில் அரசு மௌனமாக இருக்கின்றது.

ஜனாதிபதி செயலணியில் அங்கம் வகிக்கும் தேரரின் கருத்துக்கள் சிறுபான்மை மக்களின் மனதைப் பெரிதும் பாதிக்கும் வகையில் அமைந்துள்ளது. இந்த நிலைமை தொடரக்கூடாது. அதற்குரிய நடவடிக்கைகளை ஆட்சியில் உள்ளவர்கள் எடுக்க வேண்டும்' - என்றார். (ம-22)

# போதைப் பாவனையிலிருந்து இலங்கையை விடுவியுங்கள்!

*ஜனாதிபதியிடம் மட்டக்குளி மக்கள் கோரினரென அவரின் ஊடகப் பிரிவு தெரிவிப்பு*

கொழும்பு, ஜூலை 10

போதைப் பாவனையால் பல உயிர்கள் பலியாகின்றன. இலங்கையில் இருந்து போதைப்பொருளை அகற்றுவதற்கு விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஜனாதிபதியிடம் மட்டக்குளி மக்கள் கேட்டுக் கொண்டனர் என்று அவரது ஊடகப்பிரிவு குறிப்பிட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

மட்டக்குளி காக்கைத்தீவில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் ஜனாதிபதி நேற்றுக் கலந்துகொண்டார். குடிசை வாழ்க்கையினால் அவதியுற்றிருந்த தமக்கு தொடர்மாடி வீடு களை பெற்றுத் தந்தது போல் போதைப்பொருளையும் நாட்டிலிருந்து முற்றாக ஒழித்து, பிள்ளைகளின் எதிர்காலத்தை காப்பாற்றித் தருமாறு மக்கள் ஜனாதிபதியிடம் வேண்டுகோள் விடுத்தனர்.

போதைப்பொருள் பாவனையின் காரணமாக பாடசாலை மாணவர்கள் முதல் பெரியோர்கள் வரை பல உயிர்கள் பலியாகின்றன. இது தாம் முகங்கொடுக்கும் பாரிய பிரச்சினையாக உள்ளதென மட்டக்குளி பிரதேச மக்கள் தெரிவித்தனர்.

மீதமுள்ள குடிசைகளையும் அகற்றி வீடுகளை கட்டித் தருமாறு மக்கள் ஜனாதிபதியிடம் வேண்டுகோள் விடுத்தனர். 2015ஆம் ஆண்டில் இடை நிறுத்தப்பட்ட அபிவிருத்தியை மீண்டும் ஆரம்பிப்பதற்கு பலமான அரசாங்கம் ஒன்றை பெற்றுத்தருமாறு ஜனாதிபதி மக்களிடம் கேட்டுக் கொண்டார். அமைச்சர் தினேஷ் குணவர்தனவும் இந்த நிகழ்வில் பங்கேற்றிருந்தார். (ம)

# தமிழரசுக் கட்சியைப் பாதுகாக்க தாய்க்குலம் ஓரணியில் உள்ளது

*முன்னாள் மகளிர் அணிச் செயலர் விமலேஸ்வரி ஸ்ரீகாந்தரூபன் தெரிவிப்பு*

யாழ்ப்பாணம், ஜூலை 10

இலங்கைத் தமிழரசுக்கட்சியையும், அதன் சின்னத்தையும் பாதுகாப்பதற்காக தாய்குலம் ஓரணியில் திரண்டுள்ளது என்று அந்தக் கட்சியின் உறுப்புரிமையில் இருந்து அண்மையில் நீக்கப்பட்ட முன்னாள் யாழ். மாவட்ட மகளிர் அணிச் செயலாளர் விமலேஸ்வரி ஸ்ரீகாந்தரூபன் தெரிவித்தார்.

யாழில் அமைந்துள்ள தந்தை செல்வா நினைவுத்தூபியில் நேற்று வியாழக்கிழமை மலரஞ்சலி செலுத்திய பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழரசுக் கட்சி தமிழ் மக்களுக்கான கட்சி, இந்தக் கட்சி ஒருபோதும் தனது நிலையிலிருந்து மாறக்கூடாது. நாங்கள் இருக்கின்ற இடம் தூய்மையாக இருக்க வேண்டும். நாங்கள் வளர்க்கின்ற மரம் செழிப்பானதாக இருக்க வேண்டும். எங்களுடைய கொள்கைகள் நேர்மையானதாக இருக்க வேண்டும். நாங்கள் எடுக்கின்ற முடிவுகள் சரியானதாக இருக்க வேண்டும் என்பதற்காகவே நாங்கள் போராட்டத்தினை முன்னெடுத்துள்ளோம் - என்றார்.

தமிழ் அரசு கட்சியில் இருந்து நீக்கப்பட்ட விமலேஸ்வரி உள்ளிட்டவர்களின் செய்தியாளர் சந்திப்பை, முழுமையாக கண்காணிக்க தேர்தல்கள் திணைக்கள அதிகாரிகள் நடவடிக்கை எடுத்திருந்தனர். யாழ் ஊடக மையத்தில் செய்தியாளர் சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்த நிலையில், தமிழ் அரசுக் கட்சியின் முறைப்பாட்டையடுத்து, ஊடக மையத்திற்கு சென்ற தேர்தல்கள் திணைக்கள அதிகாரிகள், எந்தவொரு வேட்பாளரையும் தாக்கிப் பேசக்கூடாது என்றும், அவரது சந்திப்பை முழுமையாக கண்காணிப்போம் என்றும் தெரிவித்திருந்தனர். (ம)

# பிரதமராக வருவதற்கு மஹிந்தவுக்கு வாய்ப்பு

*சித்தார்த்தன் சொல்கிறார்*

மன்னார், ஜூலை 10

வரவுள்ள பொதுத்தேர்தல் மிகமிக நெருக்கடியான நிலைக்குள் இடம்பெறுகின்றது. ஜனாதிபதியாக கோத்தாபய உள்ள நிலையில் அவரது சகோதரரான மஹிந்ததான் அடுத்த பிரதமராக வருவதற்கு வாய்ப்புக்கள் உள்ளன - என்று தெரிவித்துள்ளார் புளொட் அமைப்பின் தலைவரும் வேட்பாளருமான தர்மலிங்கம் சித்தார்த்தன்.

மன்னார் பனங்கட்டுக்கொட்டுப் பகுதியில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

பிரதமராக மஹிந்த வருவதற்கே அதிக வாய்ப்புள்ளது. தமக்கு 120 - 130 ஆசனங்கள் கிடைக்கும் என்று அவர்கள் நம்புகின்றனர். 19ஆவது திருத்தத்தை இல்லாமல் செய்வது, 13ஆவது திருத்தத்தை இல்லாமல் செய்வது போன்றன அவர்களுடைய பெரும் இலக்குகளாக உள்ளன. விமல் வீரவன்ச, உதய கம்மன்பில போன்றவர்கள் இந்தத் திருத்தங்களை நீக்குவதற்கு அதிகம் ஈடுபாட்டுடன் செயற்படுவார்கள்.

ஆனாலும் இந்தியா ஒருபோதும் அனுமதிக்காது. இப்படியான சூழலில் தமிழ் பிரதிநிதித்துவத்தை குறைத்துவிட வேண்டும் என்ற நோக்கில் பல கட்சிகள் வடக்கு கிழக்கில் இறக்கி விடப்பட்டுள்ளன. மக்கள் இதை மனதில்வைத்து சிந்தித்துச் செயலாற்ற வேண்டும் - என்றார். (ம-56)




சபையில்
சரவணபவன்

"காணாமற்போனோர் தொடர்பான அலுவலகம் பற்றிய பிரேரணை 2020ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் சமர்ப்பிக்கப்பட்டது. அது பல இழுபறிகளின் பின்பு 2017ஆம் ஆண்டு ஓகஸ்டில் திருத்தங்களுடன் நிறைவேற்றப்பட்டது. 2018 மார்ச் மாதமே இதற்கான ஆணைக்குழு நியமிக்கப்பட்டுள்ளது.

இவ்வளவு கால இழுத்தடிப்பின் பின் உருவாக்கப்பட்டுள்ள இச்செயலகம் எப்போது இயங்க ஆரம்பிக்கும் என்பதையும் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும். அதுமட்டுமன்றி இவ் அலுவலகம் தொடர்பான ஆதாரங்கள் காணாமற்போனோர் தொடர்பாக ஆக்கபூர்வமான பரிகாரங்களைக் கொண்டுவருமா என்பதும் நிச்சயமற்ற நிலையிலேயே உள்ளது.

இக்காணாமல்போனோர் தொடர்பான அலுவலகமானது காணாமற்போனோர் இருக்கிறார்களா இல்லையா என்பதைக் கண்டறியும் என்றும், உயிருடன் இருந்தால் அவர்கள் எங்குள்ளனர் என்பது வெளிப்படுத்தவேண்டுமெனவும், உயிருடன் இல்லையெனில் அவர்களின் உறவினர்களுக்கு நிவாரணங்கள் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் தெரிவிக்கப்படுகிறது. அதேவேளையில் இந்த அலுவலகம் நீதிமன்ற அதிகாரம் இல்லாத எனவும் இதன் ஆலோசனைகளின் அடிப்படையில் நீதிமன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாதெனவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையில் இச்சட்டமூலத்தின் மூலம் நியாயபூர்வமான தீர்வுகள் எட்டப்பட முடியுமா என்ற கேள்வியே எழுகிறது."

– மார்ச் 2018

1 2 3 4 5 6 7 8 9 10

இது ஒரு கட்டணம் செலுத்தப்பட்ட விளம்பரம்

# கஞ்சா கடத்தலின் மையமாக வடக்கு

## இந்த ஆண்டில் இதுவரையில் 2,327 கிலோ கஞ்சா பறிமுதல்

**யாழ்ப்பாணம், ஜூலை 10**

**வடக்கு மாகாணத்தில் இதுவரையான காலப்பகுதியில் 2 ஆயிரத்து 327 கிலோ கஞ்சா கடற்படையின ரால் கைப்பற்றப்பட்டுள்ளது என்று வடக்குக் கடற்படைக் கட்டளைத் தலைமையகம் தெரிவித்துள்ளது. கடந்த ஆண் டுடன் ஒப்பிடும்போது இந்த ஆண்டு போதைப்பொருள் கடத்தல் அதிகரித்துள்ளது என்றும் சுட்டிக்காட்டப்பட் டுள்ளது.**

இது தொடர்பில் வடக்கு கடற்படைக் கட்டளைத் தலைமையகம் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த ஆண்டு முழுவதும் 2 ஆயிரத்து 96 கிலோ கஞ்சா கடற்படையினரால் கைப்பற் றப்பட்டிருந்தது. இந்த ஆண்டின் 6 மாதகா லப் பகுதியில் அதைவிடக் கூடிய தொகை கஞ்சா கடற்படையினரால் பறிமுதல் செய்யப் பட்டுள்ளது. இந்த விடயம் தொடர்பாக சமூக மட்ட விழிப்புணர்வு அவசியம். சிவில் அமைப் புக்கள், மதகுருக்கள், சமூக ஆர்வலர்கள் வடக்கு மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்ப டுத்த வேண்டும். ஏனெனில் இளம்பராயத்த வர்கள் முக்கியமாக கல்வி கற்கும் வயதினர் போதைப்பொருளுக்கு அடிமையாகியுள்ள மையை அவதானிக்க முடிகின்றது - என்றுள் ளது. (எ-111)

# மகள் மீது கத்திவெட்டு

## தந்தையார் கைது

முல்லைத்தீவு, ஜூன் 10

5 வயதுச் சிறுமி ஒருவர் தந்தையின் கத்தி வெட்டுக்கு இலக்காகிப் படுகாயம டைந்துள்ளார். படுகாயமடைந்த சிறுமி முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனை யின் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க் கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் முள் ளியவளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கேப்பாபிலவில் நடந்துள்ளது. குடும்பத் தகராறைத் தொடர்ந்து தனது மகள் மீது தந்தை சரமாரியாகக் கத்தியால் வெட் டியுள்ளார் என்று கூறப்படுகின்றது. சிறுமியின் தந்தையான 28 வயது டைய நபர் பொலிஸாரால் கைது செய் யப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் தொடர் பான மேலதிக விசாரணைகளையும் பொலிஸார் முன்னெடுத்து வருகின்ற னர். (எ-19)




# வட்டியை குறைத்தது மத்திய வங்கி

கொழும்பு, ஜூலை 10

இலங்கை மத்திய வங்கி கொள்கை வட்டி வீதத்தை மீண்டும் குறைத்துள்ளது. நிலையான வைப்புக்கு ரிய வட்டி 4.5 வீதத்தா லும் நிலையான வைப் புக்கான கடனுக்குரிய வட்டி 5.5 வீதத்தாலும் குறைவடைந்துள்ளது. மத்திய வங்கியின் நிதிச் சபை கூடி மேற்கொண்ட தீர்மானத்திற்கு அமைய கொள்கை வட்டி வீதம் குறைவடைந்துள்ளது என்று தெரிவிக்கப்பட் டது. (எ)

# மின்சாரக் கட்டணத்தில் 25 சதவீதம் குறையும்

மார்ச் மற்றும் ஏப்ரல் மாதம் மின்சார கட்டணங்களில் 25 வீதத்தைக் குறைப்பதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் சந் திப்பு நேற்று நடைபெற்றது. அதில் கருத்துத் தெரிவித்த போதே அமைச்சரவை இணைப் பேச்சாளர் பந்துல குணவர்த்தன மேற்கண்ட வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ள தாவது:

இந்த நிவாரணங்கள் குறை யாது. 25 வீதம் விலைப்பட்டி யல் குறையும். மின் துண்டிக் கப்படாது. நிலுவைப் பணம் அறவிடப்படமாட்டாது. இத னால் எவ்வளவு நட்டம் ஏற்பட் டாலும் இலங்கை மின்சார சபை அதனை ஏற்றுக்கொள் ளும். ஜனாதிபதி ஆலோசனை வழங்கியுள்ளார். விடயத்துக்கு பொறுப்பான அமைச்சர் அது தொடர்பில் தமது அதிகாரிக ளுடன் இணைந்து நடவடிக் கைகளை முன்னெடுப்பார். எவ்வாறாயினும் எதிர்காலத் தில் விலைப்பட்டியல் குறை யுமே தவிர அதிகரிக்காது- என்றார். (எ)

# போருக்கு பின்னர் 3 தடவைகள் புலிகள் தலைதூக்க முனைப்பு!

## சமஷ்டி முறைமை வேண்டாம் என்கிறார் சரத்வீரசேகர

கொழும்பு, ஜூலை 10

'போர் முடிவடைந்த பின்னர்கூட புலிகள் அமைப்பு மூன்று தடவை கள் மீண்டும் தலைதூக்குவதற்கு முயற்சித்தது. புலனாய்வு அமைப் புகள் பலமாக இருந்ததாலேயே அவற்றை தடுத்துநிறுத்தக்கூடிய தாக இருந்தது' என்று பொதுமக் கள் முன்னணியின் கொழும்பு மாவட்ட வேட்பாளரான ரியர் அட் மிரல் சரத் வீரசேகர தெரிவித்தார். உயிர்த்தியாகம் செய்து பாதுகாத்த நாட்டை அரசியலமைப்பு ரீதியாக பிரித்துகொடுக்க முடியாது. சமஷ்டி கட்டமைப்பை முழுமையாக நிராக ரிக்கின்றோம் எனவும் அவர் கூறி னார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

'நாட்டின் ஒருமைப்பாட்டை பாது காப்பதற்காகவே மன்னர் காலத் தில் இருந்து போராடி வருகின் றோம். போர்காலத்தில் 29 ஆயி ரம் பேர் உயிர்த்தியாகம் செய்த னர். அதுவும் நாட்டின் ஒருமைப் பாட்டுக்காகவே. இது சமஷ்டி நாடு கிடையாது. இங்கு அனைவருக் கும் ஒரு சட்டம்தான் இருக்கவேண் டும்.

நாட்டின் ஒருமைப்பாட்டை பாது காப்பதற்கு தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்தவேண்டும். ஒரு மைப்பாடு இருந்தால்தான் சக வாழ்வு ஏற்படும். எனவேதான் நாட்டில் ஒரு சட்டம் அமுலில் இருக்கவேண்டும் என மீண்டும், மீண்டும் கூறிவருகின்றேன்.

குறிப்பாக தேசிய பாதுகாப்பு உறு தியாக இருக்கவேண்டுமெனில் புலனாய்வு அமைப்புகள் பலமாக இருக்கவேண்டும். மஹிந்த ராஜ பக்ச அரசாங்கத்தின்கீழ் நாம் போரை வெற்றிகொள்ளும்போது 3 புலனாய்வுப் பிரிவுகளே இருந் தன. போருக்கு பிறகு அந்த எண் ணிக்கை 7ஆக அதிகரிக்கப்பட் டது. இதன்காரணமாகவே புலிகள் அமைப்பு மூன்று தடவைகள் தலைதூக்க முயற்சித்தும் அதனை தடுத்துநிறுத்தக்கூடியதாக இருந் தது. அதேபோல் மதரசாக்களில் அடிப்படைவாதத்தைப் பரப்பும் வகையில் போதனை வழங்கிய 160 அடிப்படைவாதிகளை நாட்டை விட்டு வெளியேற்ற முடிந்தது.

ஆனால், நல்லாட்சியின்போது புலனாய்வுத்துறை பலவீனப்படுத் தப்பட்டது. சாட்சிகள் இன்றி புல னாய்வு அதிகாரிகள் சிறைகளில் அடைக்கப்பட்டனர். மேற்குல நாடு களையும், தமிழ் டயஸ்போராக்க ளையும் திருப்திப்படுத்தவே இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. உயிரைக்கொடுத்து பாதுகாத்த நாட்டை அரசியலமைப்பு ஊடாக பிரித்துக்கொடுக்கமுடியாது. நாட் டில் சமஷ்டி முறைமை அமுலுக்கு வந்தால் ஒவ்வொரு பகுதிக்கும் வெவ்வேறான சட்டங்கள் உருவா கும். ஜனாதிபதி கோத்தாபய ராஜ பக்ச ஆட்சிக்குவந்த பின்னர் புல னாய்வுத்துறை மீண்டும் பலப்படுத் தப்பட்டது. ஒருமைப்பாட்டை பாது காக்க தேவையான நடவடிக்கை கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன'- என்றார். (ம-44)

# இளைஞரின் உடல் மீட்பு

தென்மராட்சி, ஜூலை 10

தவறான முடிவெடுத்து தூக்கில் தொங்கிய நிலையில் 27 வயது இளைஞரின் உடல் கொடிகாமம் பொலி ஸாரால் மீட்கப்பட்டுள் ளது. இந்தச் சம்பவம் நேற்று கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட் பட்ட தாவளை, இயற் றாலையில் நடந்துள் ளது.

நல்லூர், கல்வியங் காடு, புதிய செம்மணி வீதியைச் சேர்ந்த யோ. மோகன்தாஸ் என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார். இவர் இயற்றாலையில் உள்ள தாயின் வீட் டுக்கு வந்து செல்பவர் என்றும், இன்று வீட் டில் ஆள்கள் இல்லாத நிலையில் வீட்டின் சுவாமி அறைக்குள் தூக்கிட்டு உயிர் மாய்த் துள்ளார் என்றும் தெரி விக்கப்பட்டது.

சடலம் சாவகச்சேரி மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டுள் ளது. கொடிகாமம் பொலிஸார் விசார ணைகளை மேற் கொண்டு வருகின்ற னர். (எ-9.153)

# பாலியல் வன்கொடுமை: 17 வயதுச் சிறுமி சாவு

கொழும்பு, ஜூலை 10

லாங்கொடை, ராவணாகந்த, வலகொடவில் பாலியல் வன் கொடுமைக்கு உட்படுத்தப்பட்ட 17 வயதுப் பாடசாலை மாணவி ஒருவர் உயிரிழந்துள்ளார். பலாங்கொட ஆதார மருத்துவ மனையின் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டிருந்த அவர் சிகிச்சை பயனின்றி உயி ரிழந்துள்ளார் என்று தெரிவிக் கப்பட்டது.

உயர்தரத்தில் கற்கும் இந்தச் சிறுமி கடந்த 5ஆம் திகதி பாட சாலைச் சீருடை வாங்குவதற் காக வீட்டில் இருந்து புறப்பட்டுள்ளார். அவர் அதன் பின்னர் வீடு திரும்பவில்லை. அதையடுத்துப் பெற்றோர் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்துள்ளனர்.

விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார், இளைஞர் ஒருவர் மீது சந்தேகம் கொண்டு அந்த இளைஞரின் வீட்டைச் சோத னையிட்டுள்ளனர். அந்த வீட் டில் மயக்கமடைந்த நிலையில் மீட்கப்பட்ட சிறுமி, மருத்துவம னையில் சேர்க்கப்பட்டிருந்தார். அவர் சிகிச்சை பயனின்றி நேற்று உயிரிழந்தார். மாண வின் உடல் உடற்கூற்றுச் சோத னையின் பின்னர் நேற்றுமுன் தினம் பெற்றோரிடம் ஒப்படைக் கப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசார ணைகள் முன்னெடுக்கப்பட் டுள்ளன. (ம)

## விழிப்புணர்வு செயலமர்வு

முல்லைத்தீவு, ஜூலை 10

கொரோனா வைரஸ் தொற்று தொடர்பான விழிப்புணர்வு செயலமர்வு ஒட்டுசுட்டான் அறிவக மாணவர்களுக்கு நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

இச் செயலமர்வு ஒட்டுசுட்டான் பிரதேச சுகாதாரத்துறை வைத்திய அதிகாரியினால் ஒழுங்கு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(ரி2-222)

# தனிமைப்படுத்தல் நிலையங்களில் மலேரியா பாதிப்பு!

கொழும்பு, ஜூலை 10

ஆபிரிக்க நாடுகளில் இருந்து வருகை தந்த இலங்கையர்கள் 8 பேர் மலேரியா காய்ச்சலினால் பாதிக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

தனிமைப்படுத்தல் நிலையங்களில் உள்ளவர்களே மலேரியாவால் பாதிக்கப்பட்டுள்ளதாக மலேரியா ஒழிப்புப்பிரிவின் பணிப்பாளர் வைத்தியர் பிரசாத் ரணவீர தெரிவித்தார்.

பெல்வெஹர தனிமைப்படுத்தல் முகாமில் 5பேரும், நீர்கொழும்பு வைக்கால பகுதியில் உள்ள தனிமைப்படுத்தல் முகாமில் 3 பேரும் உள்ளடங்குகின்றனர்.

2012 ஆண்டு முதல் இலங்கையில் எவரும் மலேரியா காய்ச்சலால் பாதிக்கப்படவில்லை. வெளிநாடுகளிலிருந்து வருகை தந்தவர்களே பாதிக்கப்பட்டிருந்தனர் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ரி1)

## 'பாண்ட்' வாத்தியக் கருவிகள் கையளிப்பு

நீர்வேலி, ஜூலை 10

நீர்வேலி, கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயத்துக்கு பாண்ட் வாத்திய இசைக்கருவிகள் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளன.

இந்த அன்பளிப்பை பாடசாலையின் நலன்விரும்பி தேவகி கிருபாகரன் வழங்கியுள்ளார்.

(ரி2)





வவுனியாவில்

# இ.போ.ச. ஊழியர்கள் பணிப்புறக்கணிப்பு

### சில மணிநேரத்தில் முடிவுக்கு வந்தது

**வவுனியா, ஜூலை 10**
**இலங்கை போக்குவரத்துச் சபையின் வவுனியா சாலை ஊழியர்கள் நடத்துநரின் இடமாற்றத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்று காலை 5.30 மணி தொடக்கம் முன்னெடுத்திருந்த பணிப்புறக்கணிப்பு போராட்டம் சில மணிநேரங்களில் முடிவுக்கு கொண்டுவரப்பட்டது.**

இலங்கைப் போக்குவரத்து சபையின் வவுனியாசாலையில்கடமையாற்றும் நடத்துநர் கடந்த 3ஆம் திகதி பருத்தித்துறைசாலைக்கு இடமாற்றப்பட்டிருந்தார். இந்த இடமாற்றம் நடத்துநரை பழிவாங்கும் செயற்பாடு எனத் தெரிவித்து இ.போ.ச வவுனியா சாலைஊழியர்கள்நேற்று காலை 5.30 மணி தொடக்கம் பணிப்புறக் கணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இந்த இடமாற்றம் தொடர்பில் 10 நாள்களுக்குள் தீர்வைப் பெற்றுத்தருவேன் என இ.போ.ச. வவுனியா சாலை முகாமையாளர் ஷாகீர் உத்தரவாதம் அளித்த மையை அடுத்து போராட்டம் காலை 8.30 மணியுடன் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டதால், இ.போ.ச வவுனியா சாலையின் போக்குவரத்துச் சேவைகள் வழமைக்குத் திரும்பின.

இந்தப் பணிப்புறக்கணிப்பு காரணமாகப் பயணிகள் சிரமத்தை எதிர்கொண்ட போதிலும், வெளிமாவட்ட இ.போ.ச. பேருந்துகள் மற்றும் தனியார் பேருந்துகள் சேவையில் ஈடுபட்டமையால் பயணிகளுக்கு பெரிதளவில் பாதிப்புக்கள் ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ரி3-18)

# தாயை இழந்த யானைக்குட்டி மீட்பு

வவுனியா, ஜூலை 10
வவுனியா, பூவரசன்குளம் பகுதியில் தாயை இழந்து பரிதவித்த யானைக்குட்டி ஒன்று நேற்றுமுன்தினம் இரவு மீட்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரி வித்துள்ளனர் . வவுனியா பூவரசன்குளம் வேலன் குளம் பகுதியில் மூன்று மாதம் நிறைந்த யானைக்குட்டி ஒன்று நேற்று தனிமையில் நின்றதைக் கண்ட சிலர் இது குறித்து பூவரசங்குளம் பொலிஸாருக்குத் தகவல் வழங்கினர்.

இந்த நிலையில் வனஜீவராசிகள் திணைக்கள உத்தியோகத்தர்கள் அங்கு சென்று யானைக்குட்டியை மீட்டுள்ளதுடன் மருத்துவ பரிசோதனைகளின் பின்னர் கிரிந்தலை யானைகள் சரணாலயத்துக்கு அதனைக் கொண்டு செல்வதற்கான நடவடிக்கையையும் மேற்கொண்டு வருகின்றனர் என்று மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ரி2-110)

# கை கழுவும் இயந்திரம் பாடசாலைக்கு கையளிப்பு

கொடிகாமம், ஜூலை 10
தென்மராட்சி, கொடிகாமம், நாவலடிப் பகுதியைச் சேர்ந்த ந.நவரட்ணராஜா என்ற பெயருடைய ஓய்வுநிலை அதிபர் கழிவுப் பொருள்களைப் பயன்படுத்தி காலால் இயக்கும் கைகழுவும் இயந்திரமொன்றை சுயமாக உருவாக்கியுள்ளார்.

இந்த இயந்திரத்தை கொடிகாமம் அரசினர் வித்தியாலயத்தின் மாணவர்கள், ஆசிரியர்களின் சுகாதார நலன் கருதி அப் பாடசாலை அதிபரிடம் அவர் கையளித்துள்ளார். (ரி2-159)

# புதையல் அகழ்ந்த பெண்கள் கைது!

வெயாங்கொடை, ஜூலை 10
வெயாங்கொடைப் பகுதியில் பெண்கள் இருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். இந்தப் பகுதியில் புதையல் அகழ்வு நடவடிக்கையில் ஈடுபட்ட மீரிகம பிரதேசத்தைச் சேர்ந்த பெண்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர். இந்தப் பெண்களின் பிறந்த வீடு பல்லேவெல போருக்கமுவ பிரதேசத்தில் அமைந்துள்ளது. அந்த வீட்டுக்குப் பின்னால் புதையல் உள்ளது எனவும் உயிரிழந்த தந்தை கனவில் வந்து அதனைக் கூறினார் எனவும் கைது செய்யப்பட்ட பெண்கள் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளனர்.

தந்தை சொன்ன தகவலுக்கமைய இருவரின் உதவியுடன் புதையல் தோண்டும் நடவடிக்கையில் ஈடுபட்டோம் என்றும் தெரிவித்தனர். வெயாங்கொடைப் பொலிஸ் பரிசோதகருக்கு கிடைத்த தகவலுக்கமையவே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். மற்றைய இருவரும் தப்பிச் சென்றுள்ளனர் எனப் பொலிஸார் மேலும் தெரிவிக்கின்றனர். (ரி2)



# இந்திய பிரஜை ஒருவர் கைது

கொழும்பு, ஜூலை 10
**இந்தியப் பிரஜை ஒருவர் பம்பலப்பிட்டியில் வைத்து கைது** செய்யப்பட்டுள்ளார்.

கனடாவில் வேலைவாய்ப்பைப் பெற்றுத் தருவதாகத் தெரிவித்து ஒரு கோடி ரூபாவுக்கும் அதிக பணத்தை மோசடி செய்த குற்றச்சாட்டிலேயே அந்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ரி2)

# அரச சொத்து முறைகேடு தொடர்பில் அறிக்கை

கொழும்பு, ஜூலை 10
உள்ளூராட்சிச் சபைகளில் அரசசொத்துக்கள் தேவையற்ற விதத்தில் பயன்படுத்துகின்றமையைத் தடுப்பது தொடர்பாக தேர்தல்கள் ஆணைக்குழு அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

உள்ளூராட்சிச் சபைத் தலைவர்கள் தங்களது எல்லைகளுக்கு அப்பாற்பட்ட இடங்களில் இடம்பெறும் அரசியல் கூட்டங்களில் கலந்து கொள்வதுடன் பரப்புரை நடவடிக்கைகளுக்காக தங்களது உத்தியோகபூர்வ வாகனங்களைப் பயன்படுத்துகின்றனர் எனவும் முறையிடப்பட்டுள்ளது. அது அரச சொத்துக்களைத் தவறான முறையில் பயன்படுத்துவதாக கணிக்கப்படும்.

எனவே இவ்விதம் இத்தகைய செயற்பாடுகளைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு தேர்தல்கள் ஆணைக்குழு அனைத்து உள்ளூராட்சி சபை தலைவர்களுக்கும் அறிவுறுத்தியுள்ளது.

ஏதாவது ஒரு சந்தர்ப்பத்தில் இந்த ஆலோசனைகள் மீறப்பட்டால் குறிப்பிட்ட உள்ளூராட்சி சபை தலைவர் மற்றும் அதன் அதிகாரிகளுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் - என்று மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ரி2)

## சாவகச்சேரியில் விஷமிகளால் எம்.ஜி.ஆரின் சிலை உடைப்பு

சாவகச்சேரி, ஜூலை 10
சாவகச்சேரி உதயசூரியன் கிராமத்தில் வைக்கப்பட்டிருந்த தமிழக முன்னாள் முதல்வர் எம்.ஜி.ஆரின் சிலை நேற்றுமுன்தினம் இரவு விஷமிகளால் உடைக்கப்பட்டுள்ளது. எம்.ஜி.ஆர். மரணமடைந்த வேளையில் அவரது ரசிகர்களால் அமைக்கப்பட்ட சிலை கடந்த 2000ஆம் ஆண்டு போர்க் காலத்தில் எறிகணை வீச்சினால் சேதமடைந்தது. பின்னர் அப்பகுதியில் மீளக்குடியமர்ந்த மக்கள் சிலையைப் புதுப்பித்து வருடாவருடம் அவரது பிறந்த தினம் மற்றும் இறந்த தினங்களில் அஞ்சலி செலுத்தி வந்தனர்.

இந்நிலையில் நேற்று முன்தினம் இனந்தெரியாதோரால் அந்தச் சிலை உடைக்கப்பட்டுள்ளது. (ரி1-9)

## கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன

வவுனியா, ஜூலை 10
வவுனியா, வீரபுரம் மணிவாசகர் மகா வித்தியாலயத்தில் கல்வி கற்கின்ற 10 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் நேற்று வழங்கப்பட்டன. கொரனாத் தொற்றால் தொழிலின்றி, வருமானமின்றி இருக்கும் குடும்பங்களைச் சேர்ந்த வர்களுக்கே பாடசாலை அதிபரின் சிபாரிசின் அடிப்படையில் இந்த உதவிகள் வழங்கப்பட்டன. லண்டனில் வசிக்கும் கந்தப்பிள்ளை திலீபனினுடைய நிதி அனுசரணையுடன் கல்விக்கு கரம் கொடுப்போம் எனும் திட்டத்தின் கீழ் குறித்த உதவிகள் வழங்கப்பட்டன. (ரி1-222)

# சுற்றுநிருபத்துக்கு எதிராகச் செயற்படும் அதிபர்கள்

## கல்வி அமைச்சு சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜூலை 10
கல்வி அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள சுற்றுநிருபத்துக்கு எதிராக சில அதிபர்கள் செயற்படுகின்றனர் என கல்வி அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, தமது சுற்றுநிருபத்துக்கு மாறாக மாகாணக்கல்வி பணிப்பாளர்களால் வேறு சுற்றுநிருபம் வெளியிடப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ள கல்வி அமைச்சின் செயலாளர் என்.எச்.எம். சித்ரானந்த, இதனால் பிரச்சினைகள் ஏற்படாத வகையில் செயற்படுமாறு சுட்டிக்காட்டி, மாகாண ஆளுநர்களுக்கு எழுத்துமூலமாக அறிவிக்கவுள்ளேன் என்றும் தெரிவித்துள்ளார். மேலும், சில அதிபர்கள், ஆசிரியர்களை சேவைக்கு மீள அழைக்கும் செயற்பாட்டில் தான்தோன்றித்தனமாக செயற்பட்டுள்ளனர் என்றும், 24 ஆம் திகதி வரையான காலப் பகுதிக்குள் பாடசாலை வளாகத்தில் ஒன்று கூடுவதைத் தவிர்ப்பதற்காக சில ஆலோசனைகள் வெளியிடப்பட்டுள்ளன எனவும் அமைச்சு குறிப்பிட்டுள்ளது. அத்துடன், எதிர்வரும் 27 ஆம் திகதி முதல் சகல ஆசிரியர்களும் கடமைக்குத் திரும்ப வேண்டும் எனவும் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ரி3)

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## கோணேச்சரமும் கோகண்ணவும்

என்ன நோக்கத்துக்காக கிழக்கு மாகாண தொல்லியல் மரபுரிமைகளைப் பாதுகாக்கும் ஜனாதிபதி செயலணி உருவாக்கப்பட்டதோ, அந்த நோக்கத்தை இவ்வளவு விரைவாக அந்தச் செயலணியின் உறுப்பினரான எல்லாவல மேதானந்த தேரர் போட்டுடைப்பார் என எவரும் எதிர்பார்த்திருக்கவில்லை. 'திருகோணமலையில் உள்ள திருக்கோணேச்சரம் உண்மையில் இந்துக் கோயிலல்ல. அது கோகண்ண என்ற விகாரைதான். ஆனால் தமிழர்கள் அதனைக் கோயிலாக மாற்றிவிட்டார்கள்' என்ற வெடிகுண்டை முதலில் தூக்கிப் போட்டார்.

தமிழர்களின் தலைநகரமான திருகோணமலை மிகத் தொன்மையான வரலாற்றை உடையது. இராமாயணத்தில் வருகின்ற இராவணனின் இராசதானி திருகோணமலை எனவும் ஐதீகமுண்டு. அதைவிட குளக்கோட்ட மன்னனால் கட்டப்பட்ட கந்தாய்க்குளம் தமிழர்களின் தொன்மையான கட்டடக்கலையின் சிறப்பை எடுத்துரைக்கின்றது. தவிர திருகோணமலைக் காடுகளில் இன்னமும் ஆய்வு செய்யப்படாத தமிழர்களின் பாரம்பரியத்தை வெளிப்படுத்தும் பல தொல்லியல் சிதைவுகள் தாராளமாக உள்ளன. இவற்றைவிட திருகோணமலையின் அடையாளமாகக் கொள்ளப்படும் கோணேச்சரம் ஆலயமும் நெடிதுயர்ந்த வரலாற்றுப் பின்னணியைக் கொண்டது. இலங்கையில் உள்ள பஞ்ச ஈச்சரங்களில் முதன்மையானது. நாயன்மார்களால் தேவாரம் பாடப்பெற்ற தலங்களில் ஒன்றென்ற சிறப்பும் இதற்குண்டு. அப்படிப்பட்ட ஆலயத்தை ஒரேகணத்தில் விகாரை என்று கதையைத் திருப்பிப் போட்டு, அதற்கு ஆதாரம்வேறு இருப்பதாகக் கூறியிருக்கிறார் மேதானந்த தேரர்.

திருகோணமலையை முற்றுமுழுதாகச் சிங்களமயப்படுத்தும் திட்டத்தின் தொடர்ச்சியே தேரரின் இந்தக் கூற்று. மகாவலித் திட்டத்தின் கீழ் சிங்களமயமாகத் தொடங்கிய திருகோணமலையின் முக்கிய பகுதிகளை தமதாக்க பேரினவாதம் படாதபாடுபடுகின்றது. கன்னியா வெந்நீரூற்றின் அருகிலும் விகாரையைக் கட்டி, பௌத்த மயமாக்கி, தமிழர்களின் ஆச்சரியத்துக்குரியதும் வழிபாட்டுக்குரியதுமான இடத்தைக் கைப்பற்றும் முயற்சிகள் தொடர்கின்றன. அதே வேளை திருகோணமலை என்றாலே உடனே நினைவுக்கு வருகின்ற கோணேச்சரத்தையும் தங்கள் பிடிக்குள் கொண்டுவர பேரினவாதம் நாக்கைத் தொங்கப் போட்டபடி காத்திருக்கிறது. எப்படிக் கதிர்காமக் கந்தனை சிங்களத்து கதிர்காமத் தெய்யோ என்று முழுதாக மாற்றினார்களோ, அதேபாணியில் கோணேச்சரத்தையும் கோகண்ண விகாரையாக மாற்ற எத்தனிக்கிறார்கள்.

மேதானந்த தேரரின் கருத்தை தனியே ஒரு இனவாத பிக்குவின் கருத்தாக மட்டும் எண்ணிக்கொண்டு, கடந்துவிடமுடியாது. அவர் இப்போது கோத்தாபய அரசால் வர்த்தமானி மூலம் பிரகடனப்படுத்தப்பட்ட கிழக்கு மாகாண தொல்லியல் மரபுரிமைகளைப் பாதுகாக்கும் ஜனாதிபதி செயலணியின் முக்கிய உறுப்பினர். போதாக்குறைக்கு தன்னைத்தானே வரலாற்றாய்வாளர் என்று பீற்றிக்கொள்பவர். இப்படிப்பட்டவரின் கூற்று இனவாத அரசின் கூற்றாகவே பார்க்கப்பட வேண்டியுள்ளது. வேறெந்த மாகாணத்துக்கும் இல்லாத வகையில் கிழக்குக்கு மட்டும், எந்தவொரு தமிழரும் உள்ளடக்கப்படாமல் விசேடமாக இந்தச் செயலணி உருவாக்கப்பட்டபோதே பலத்த சந்தேகங்கள் எழுந்திருந்தன. இப்போது அந்தச் சந்தேகங்களை உறுதிசெய்வதுபோல மேதானந்ததேரர் 'கோணேச்சரம் அல்ல கோகண்ண விகாரை' என்றும், 'நல்லூரும் சிங்களவர்களுக்கே உரித்தானது' என்றும் உளறத் தொடங்கிவிட்டார். இந்த உளறல்களை உண்மையென நம்ப வைக்க புதிய புனைவுகளோடு நவீன மகாவம்சத்தை பேரினவாதிகள் எழுதவும் கூடும். அதற்கு முன்னர் நாம் விழித்தெழவேண்டும். அதற்கான நல்லசந்தர்ப்பமாக பொதுத்தேர்தல் வாய்த்திருக்கிறது. இந்தச் சந்தர்ப்பத்தைச் சரியாகப் பயன்படுத்தி, நம்முடைய பலத்தை காட்டுவதன் மூலமே பேரினவாதம் நினைப்பதொன்றும் இங்கு நடக்கப்போவதில்லை என்பதை நாம் உணர்த்தவேண்டும். வாக்குகளை நம் ஆயுதமாக்குவோம்.

# ஆசிரியர்களின் வருகை வெளியேறுகை தொடர்பில் புதிய சுற்றறிக்கை வெளியீடு

யாழ்ப்பாணம், ஜூலை 10

**ஆசிரியர்களின் வருகை மற்றும் வெளியேறுகை தொடர்பான புதிய சுற்றறிக்கை ஒன்றை கல்வி அமைச்சு வெளியிட்டுள்ளது. இதை சகல தரப்பினரும் கடைப்பிடிக்கவேண்டும் என்று வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார் அறிவுறுத்தி உள்ளார்.**

பாடசாலைகளை மீள ஆரம்பித்து நடத்தும் போது ஏற்பட்ட நிர்வாக முரண்பாடுகள் அனைத்துக்கும் பதிலளிக்கும் வகையில் இந்த சுற்றறிக்கையை கல்வி அமைச்சு வெளியிட்டுள்ளது.

கடந்த 7ஆம் திகதியிடப்பட்ட அந்த சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

கொவிட் 19 இன் பின்னர் பாடசாலைகளையும் அரச அனுமதிபெற்ற பாடசாலைகளையும் மீள ஆரம்பிப்பதற்கான செயற்றிட்டத்துக்கு சமாந்தரமாக கடந்த மாதம் 10 மற்றும் கடந்த மாதம் 22 ஆகிய திகதிகளில் வெளியிடப்பட்ட வழிகாட்டல்களுக்கு மேலதிகமாக கொரோனா தொற்றுநிலை காரணமாக பாடசாலைகளை ஆரம்பிப்பதற்கான முதலாவது மற்றும் இரண்டாவது கட்டங்களில் (ஜூலை 06 - ஜூலை 17 மற்றும் ஜூலை 20 ஜூலை 24) பாடசாலையினுள் ஆள்கள் ஒன்றுகூடுவதை தவிர்க்கும் நோக்கோடு பாடசாலைக்கு வரவழைக்கப்பட வேண்டியவர்கள், கற்றல் கற்பித்தல் செயற்பாட்டுக்கான நேரசூசி வழங்கப்பட்ட மற்றும் நிர்வாக, சுகாதாரம் முதலான பொறுப்புக்கள் வழங்கப்பட்டுள்ள ஆசிரியர்களே.

அதற்காக கீழ் காணும் வழிமுறையைப் பேண வேண்டும்.

1. எந்தப் பொறுப்பும் ஒப்படைக்கப்படாத, கற்பித்தலுக்கான நேரசூசி இல்லாத ஆசிரியர்களை இந்தக் கட்டங்களில் பாடசாலைக்கு வரவழைக்கக் கூடாது. அவ்வாறே பொறுப்பு ஒப்படைக்கப்பட்ட ஆசிரியர்கள் காலை 7.30 க்கு வருகை தரவேண்டும். குறிப்பிட்ட பொறுப்புக்கள் முடிவடைந்ததன் பின்னர் பாடசாலையை விட்டுச் செல்ல சந்தர்ப்பம் வழங்கப்படல் வேண்டும்.
2. மூன்றாம் கட்டத்தில் (ஜூலை 27 முதல்) அனைத்து ஆசிரியர்களும் காலை 7.30 க்கு பாடசாலைக்கு வருகை தர வேண்டும். பிற்பகல் 1.30 வரை பாடசாலையில் தரிக்க வேண்டும். அவ்வாறே பி.ப 3.30 வரை நேரசூசி வழங்கப்பட்டுள்ள ஆசிரியர்கள் அதற்கான நேரம் வரை பாடசாலையில் நிற்க வேண்டும்.
3. மூன்றாம் கட்டத்தில் (ஜூலை 27 முதல்) கடமைக்குச் சமுகளிக்கும் அனைத்து ஆசிரியர்களும் பொது 18 படிவத்தில் வழமை போன்று வருகை வெளியேறுகை ஒப்பங்களை இடவேண்டும்.

குறித்த ஆலோசனைகளை நடைமுறைப்படுத்துவது அனைத்துத் தரப்பினரதும் பொறுப்பாகும் என்று கல்வி அமைச்சின் செயலாளர் என்.எச்.எம். சித்திரானந்த குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, இதன் பிரதிகள் சகல மாகாணங்களினதும் பிரதம செயலாளர்கள், கல்வி அமைச்சின் செயலர்கள், கல்விப் பணிப்பாளர்கள் , வலயக் கல்விப் பணிப்பாளர்கள் மற்றும் அதிபர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன என்றும் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (த)

## ரணிலும், சகாக்களும் தப்பிக்கவே முடியாது

*சுசில் பிரேமஜயந்த தெரிவிப்பு*

கொழும்பு, ஜூலை 10



பிணைமுறி மோசடியில் இருந்து முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் அவரது சகாக்கள் ஒருபோதும் தப்பிக்க முடியாது என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

பொதுஜன பெரமுனவின் காரியாலயத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

பிணைமுறி கொடுக்கல் வாங்கல், விநியோக மோசடி தொடர்பில் முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரம சிங்க பொறுப்பற்றவிதத்தில் கருத்துரைக்கிறார். மோசடி தொடர்பில் பொறுப்புக்கூறலில் இருந்து இவரும், மோசடி இடம்பெறவில்லை என்று குறிப்பிட்டு ஐக்கிய மக்கள் சக்தியினரும் விலக முடியாது.

பிணைமுறிகள் விநியோகத்தில் மோசடி இடம்பெற்றது என எதிர் தரப்பினர் குறிப்பிட்டபோது அதை அப்போதைய ஆளும் தரப்பினர் எதிர்த்தார்கள். குற்றச்சாட்டு தொடர்பில் ஆராய்வதற்கு ரணில் விக்கிரமசிங்க நீதியரசர்கள் மூவரை உள்ளடக்கிய குழுவை நியமித்தார். மோசடிகள் இடம்பெறவில்லை என்றே அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. பின்னர் அறிக்கையின் உள்ளடக்கங்களும் பொய்யாக்கப்பட்டன.

தற்போது ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் ஊடாக பல விடயங்கள் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன. - என்றார். (எ)

## சகல அதிபர்களும் ஒத்துழையுங்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 10

சுற்றறிக்கைகள் அனுப்பப்பட்டாலும் மாணவர்கள் நலன்கருதி அதிபர் எடுக்கும் முடிவுகளுக்கு ஆசிரியர்கள் ஒத்துழைக்க வேண்டும் என்று வடமராட்சி வலயக் கல்வி பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

கொரோனாத் தொற்று ஏற்பட்டு நீண்ட நாள்களின் பின்னர் பாடசாலைகள் மீள ஆரம்பிக்கப்பட்டு கட்டம் கட்டமாக கற்பித்தல்கள் ஆரம்பிக்கப்படுகின்றன. இந்தநிலையில் கல்வி அமைச்சு வெளியிட்ட சுற்றறிக்கை தொடர்பாக இலங்கை ஆசிரியர் சேவைச் சங்கத்தின் வடமராட்சி கல்வி வலயச் செயலாளர் சு.யசீலன் வடமராட்சி வலயக் கல்வி பணிப்பாளரைதொடர்புகொண்டுகேட்டபோதே அவர் இவ்வாறு கூறியுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. (த-422)

## பி.சி.ஆர் பரிசோதனை ஆய்வுகூடம் திறப்பு

கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் நாட்டுக்கு வரும் பயணிகளுக்கு இலவசமாக பி.சி.ஆர் பரிசோதனை மேற்கொண்டு அறிக்கையை பெற்றுக் கொள்வதற்கான சிறப்பு ஆய்வுகூடம் நேற்று திறந்துவைக்கப்பட்டது. இதனூடாக தினமும் 500 பயணிகளுக்கு பி.சி.ஆர் பரிசோதனை மேற்கொள்ளப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# இலங்கையில் தமிழரைக் காக்க பாரததேசம் தலையிடவேண்டும்

## சத்தியலிங்கம் கோரிக்கை

**வவுனியா, ஜூலை 10**

**தமிழர் தாயகமான வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அண்மைக்காலமாக சிங்கள பௌத்த ஆக்கிரமிப்பு மேலும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. இதற்காகவே ஜனாதிபதியால் தமிழர் பிரதிநிதித்துவம் இல்லாத தனிச் சிங்களவர்களை உள்ளடக்கிய தொல்பொருள் மரபுரிமைகளைப் பாதுகாக்கும் செயலணி ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.**

எனவே தமிழர் தாயகத்தின் தனித்துவத்தைப் பாதுகாக்க வரலாற்று ரீதியாக மத, கலாசார, மொழி, பண்பாட்டு விடயங்களில் எமக்குத் தாய் நாடாக இருக்கும் பாரத தேசம் தலையீடு செய்யவேண்டும் என்று வடக்கு மாகாண முன்னாள் சுகாதார அமைச்சர் மருத்துவர் எஸ் சத்தியலிங்கம் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

மாகாண தொல்பொருள் மரபுரிமைகளைப் பாதுகாக்கும் செயலணியின் உறுப்பினரான எல்லாவல மேதானந்த தேரர் தெரிவித்து வருகின்ற கருத்துக்களானவை இலங்கையில் வாழுகின்ற தமிழ்மக்களுக்கு பெரும் அச்சத்தை ஏற்படுத்துவதாக உள்ளது. இதுவரை தமிழ் மக்களுக்கு எதிராக இனரீதியிலானஆக்கிரமிப்புகளைச் செய்தவர்கள் தற்போது மதரீதியிலான ஆக்கிரமிப்பையும் செய்வதற்கான வேலைகளை ஆரம்பித்துள்ளார்கள். நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலுக்குப் பின்னர் தமிழர்களின் தாயகத்தில் சிங்கள பௌத்த ஆக்கிரமிப்பு மேலும் தீவிரமடைவதற்கான சாத்தியங்கள் உள்ளன. இலங்கையின் மிகத் தொன்மையான பஞ்ச ஈஸ்வரங்களில் ஒன்றான திருக்கோணேஸ்வரம் திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார், சுந்தரமூர்த்தி நாயனார் ஆகியோரினால் பதிகம் பாடப்பெற்ற புராதன சிவத்தலமாகும். இலங்கையில் பௌத்த மதம் வருவதற்கு முன்னரேயே இருந்த புனித சிவத் தலத்தை கோகண்ண விகாரை என்றும், யாழ்ப்பாணத்தின் தொன்மையான நல்லூர் கந்தசுவாமி கோவில் சப்புமல்குமார என்ற சிங்கள இளவரசனால் கட்டப்பட்டதாகவும், அனுராதபுர ஆட்சிக்காலத்தில் கட்டப்பட்ட கோகண்ண விகாரைக்கு மேலாகவே கோணேஸ்வரம் கட்டப்பட்டதாகவும் வரலாற்றைத் திரிபுபடுத்திக் கருத்துக்களை முன்வைக்கின்றார். இதுமிகவும் ஆபத்தானது. அடுத்து வரும் நாள்களில் திருக்கேதீஸ்வரம், மடுத்தேவாலயம் போன்றவற்றை பற்றியும் திடுக்கிடும் வரலாறுகளை முன்வைத்தால் ஆச்சரியப்படுவதற்கில்லை. இவ்வாறான வரலாற்றை திரிபுபடுத்தும் கருத்துக்கள் ஈழத் தமிழ்மக்களை மட்டுமல்ல பாரததேசத்தையும் குறிப்பாக எமது தொப்புள் கொடிஉறவுகள்வாழும் தமிழ் நாட்டையும் சீண்டுவதாகஉள்ளது -என்றார். (ப-110)

# ஒற்றையாட்சியை ஏற்றுக்கொண்டோரை நிராகரியுங்கள்

## த.தே.ம.முவின் பொதுச் செயலர்

யாழ்ப்பாணம், ஜூலை 10

ஒற்றையாட்சியை ஏற்றுக் கொண்டு அதற்குள் தமிழ் மக்களின் அபிலாசைகளை முடக்குவதற்கு ஆணை கேட்கின்ற தரப்புக்களை நிராகரித்து தமிழ் மக்களின் அபிலாசைகளை வென்றெடுக்க தடம்மாறாது பயணிக்கின்ற தமிழ்த்தேசிய மக்கள் முன்னணிக்கு அனைத்து மக்களும் ஆதரவை வழங்க வேண்டும். இதனூடாகவே தமிழ் மக்களின் இருப்பைத் தக்க வைத்துக் கொண்டு அபிலாசைகளையும் வென்றெடுக்கக் கூடியதாக அமையுமென முன்னணியின் பொதுச் செயலாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வராசா கஜேந்திரன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழ் மக்கள் தமது அபிலாசைகளை வென்றெடுப்பதற்கு நீண்ட காலமாகப் போராடி வருகின்றனர். ஆனால் அந்த அபிலாசைகளை ஒற்றையாட்சிக்குள் முடக்குவதற்கு தமிழ்த் தரப்புக்களே இன்றைக்கு முன்வந்திருக்கின்றன. இதனால் மிகப் பெரிய ஆபத்து ஏற்பட்டிருக்கின்றது. குறிப்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அதனை ஏற்றுக் கொண்டுள்ளது. அதே போன்று விக்னேஸ்வரன் ஐயா தலைமையிலான கட்சியும் அதனை நிராகரிக்க முடியாது என்று கூறி அவர்களும் ஏற்றுக் கொள்கின்றனர். தமிழ்த் தரப்பினர்களே ஒற்றையாட்சிக்குள் தமிழர் அரசியலை முடக்குகின்ற மிகப் பெரிய ஆபத்து தமிழ் மக்களுக்கு ஏற்பட்டுள்ளது. ஆகவே இப்படியான தரப்புக்களுக்கு மீண்டும் தமிழ் மக்கள் தமது ஆதரவை வழங்குவார்களாயின் அது ஒட்டுமொத்த தமிழினத்துக்கே ஆபத்தாக அமையும். இத்தகைய பாதிப்புக்களை ஒவ்வொரு மக்களும் உணர்ந்து கொள்ள வேண்டியது அவசியம். ஆகையினால் கொள்கையில் உறுதியாகவும் நேர்மையாகவும் தடம்மாறாது பயணிக்கின்ற கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான கட்சிக்கு ஆதரவை வழங்க வேண்டும். அதுவே தமிழ்த் தேசத்தின் பாதுகாப்புக்கும் தமிழ் மக்களின் அபிலாசைகளை வென்றெடுப்பதற்கும் சிறந்த செயற்பாடாக அமையும். இதனையே கடந்த பல வருடங்களாக நாங்கள் மக்களுக்கு தொடர்ந்தும் கூறி வருகின்ற நிலையில் இத் தேர்தலில் அதனை ஒவ்வொருவரும் உணர்ந்து கொள்ள வேண்டியது மிகமிக அவசியமானது - என்றார். (ப-20)

# சகல சமூகங்களுக்கும் அரசியல் அந்தஸ்து

## ரிஷாத் பதியுதீன் தெரிவிப்பு

மன்னார், ஜூலை 10

இனங்களுக்கிடையே மிகக் குறுகிய காலத்தில் நல்லுறவைக் கட்டியெழுப்பியதனாலேயே இந்துக்களும், கிறிஸ்தவர்களும், பௌத்தர்களும், முஸ்லிம்களும் எமது கட்சியின் ஊடாக, அரசியலில் அதிகாரமுள்ள பிரதிநிதிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர் என்று முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

கத்தோலிக்க சகோதரரான செல்லத்தம்பு அண்ணன் மன்னார் மாந்தை மேற்கு பிரதேச சபைத் தவிசாளராகவும், இந்து சகோதரர் நந்தன் முல்லைத்தீவு மாந்தை கிழக்குப் பிரதேச சபைத் தவிசாளராகவும், சிங்களச் சகோதரர் ஜயதிலக்க வடக்கு மாகாண சபை உறுப்பினராகவும், இந்தப் பிரதேசத்தின் உள்ளூராட்சி சபை உறுப்பினரான குணம் போன்ற இன்னும் பலர், உள்ளூராட்சி சபைகளில் பிரதித் தலைவர்களாகவும் உறுப்பினர்களாகவும் எமது கட்சியிலிருந்து தெரிவுசெய்யப்பட்டனர். இதன்மூலம், வடக்கிலே பிரிந்துகிடந்த தமிழ், முஸ்லிம், சிங்கள உறவை அகில இலங்கை மக்கள் காங்கிரஸ்கட்டியெழுப்பியிருக்கின்றது என்ற உண்மை புலப்படுகின்றது. எமது கட்சி அனைத்து இனங்களையும் அரவணைக்கின்றது என்பதையும் இது கட்டியங்கூறி நிற்கின்றது. அரசியலில்எதையெதை எல்லாமோ செய்ய சக்தி இருந்ததோ, அத்தனையையும் இந்தப் பிரதேசத்துக்குச் செய்துள்ளோம். மீண்டும்இந்தப்பிரதேசத்துக்கு நீங்கள் வந்து சுவாசிப்பதற்கான சூழலை ஏற்படுத்தித் தந்ததோடு, வாழ்க்கைக்குத் தேவையான கட்டமைப்புக்களை அமைத்துக் கொடுத்தோம். இன்று இந்தப் பிரதேசத்தின் பாதை சீரமைப்பு வேலைத்திட்டங்கள் இடம்பெறத் தொடங்கியமை, எமது பணிக்குக் கிடைத்த வெற்றியாகக் கருதுகிறோம் - என்றார். (ப-56)

# உளவுத்துறையை முடக்கியதாலேயே மீண்டும் பயங்கரவாதம் முளைத்தது

## பிரதமர் மஹிந்த கூறும் காரணம்

குருநாகல், ஜூலை 10

நல்லாட்சி அரசாங்கம் உளவுத்துறையை முடக்கி தகவல்களை மறைப்பதன் மூலம் நாட்டில் மீண்டும் பயங்கரவாதம் தோற்றம் பெறுவதற்கு வழி ஏற்படுத்தியுள்ளதாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைவர், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

பயங்கரவாதத்தை முற்றாக ஒழித்து நாட்டை பயங்கரவாதத்திலிருந்து மீட்டிருந்த போதிலும் கடந்த நல்லாட்சி அரசாங்கம் நாட்டில் மீண்டும் பயங்கரவாதம் தோற்றம் பெறுவதற்கு இடமளித்துள்ளது. நல்லாட்சி அரசாங்கத்தின் தலைவர்களுக்குத் தகவல் கிடைத்திருந்த போதிலும் உளவுத்துறை அதிகாரிகளை வீட்டுக்கு அனுப்பி உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பில் கிடைத்த முன்கூட்டிய எச்சரிக்கையை மறைத்ததன் மூலம் அப்பாவி மக்கள் பலர் உயிரிழக்க நேரிட்டது- என்றார். (ப)

# தேர்தலை தாமதிக்க அரசாங்கம் மும்முரம்

## குற்றஞ்சாட்டுகிறார் அஸாத் சாலி

கொழும்பு, ஜூலை 10

தேர்தலில் அரசாங்கத்துக்குப் பின்னடைவு ஏற்படப்போவதாகப் புலனாய்வுத் தகவல்கள் வெளிவந்திருக்கின்றன. அதனால் சுகாதார வழிகாட்டல்களைப் பின்பற்றாமல் பிரசாரக் கூட்டங்களை நடத்தி தேர்தலைப் தாமதப்படுத்த அரசாங்கம் திட்டமிட்டு வருகின்றது என தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தேசியப் பட்டியல் உறுப்பினருமான அஸாத் சாலி தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

பொதுத் தேர்தலில் அரசாங்கத்துக்கு 90ஆசனங்களைவிட அதிக ஆசனங்கள் கிடைக்கப்பெற மாட்டா என புலனாய்வுத் தகவல் வெளியானதைத் தொடர்ந்து, ஜனாதிபதி உடனடியாகச் செயற்பட்டு புத்தளம் மாவட்டத்துக்குத் தேர்தல் பிரசாரத்துக்குச் சென்றிருந்தார். அதே போன்று தேர்தல் அறிவிக்கப்பட்டு இதுவரை ஊடகங்களுக்கு முன் வராத பஸில் ராஜபக் ஷ நேற்று பொதுஜன பெரமுன கட்சிக் காரியாலயத்தில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டார். மஹிந்த ராஜபக்ஷ கலந்துகொண்டு வரும் குருநாகல் கூட்டங்களில் ஆயிரக்கணக்கான மக்கள் கலந்து கொள்வதுடன் எந்தவிதமான சுகாதார வழிகாட்டலும் பின்பற்றப்படுவதும் இல்லை. இதுதொடர்பாக பொலிஸார், தேர்தல் கண்காணிப்பு அமைப்புக்கள் கண்டுகொள்வதாகத் தெரியவில்லை. ஆனால் கொரோனாத் தொற்று அச்சுறுத்தல் இருப்பதை அறிந்தும் மஹிந்த ராஜபக்ஷ திட்டமிட்டே இவ்வாறு செயற்படுகின்றார். ஏனெனில் அரசாங்கத்துக்குத் தேர்தலில் பின்னடைவு ஏற்பட்டிருப்பதை அறியக் கிடைத்ததும், கொரோனாத் தொற்றுப் பரவலை ஏற்படுத்தி, தேர்தலை பிற் போடுவதே இவர்களின் திட்டமாகும் - என்றார். (ப)

# கிராமிய மீள் எழுச்சிக்கு உதவியவர் சரவணபவன்

## வலி. தென்மேற்கு ஹேமலதா ஞாபகார்த்த சனசமூக நிலைய செயலாளர் எடுத்துரைப்பு

யாழ்ப்பாணம், ஜுலை 10

**பன்முகப்படுத்தப்பட்ட வரவு–செலவுத் திட்ட நிதி ஊடாகவும் சொந்த நிதியிலும் மாவட்ட மட்டத்தில் கிராம மட்ட அமைப்புக்களுக்கும் பொது நிறுவனங்களுக்கும் முழுமையாக அர்ப்பணித்து உதவியவர் உதயன் குழுமத் தலைவரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான ஈ.சரவணபவனே என்று வலி. தென்மேற்கு ஹேமலதா ஞாபகார்த்த சனசமூக நிலைய செயலாளர் தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

இவ்வாறான உதவித் திட்டம் மூலம் பொது நோக்கு மண்டபங்கள், சிறிய வீதிகள். புதிய சனசமூகக் கட்டடங்கள், கிராம அபிவிருத்திச் சங்கக் கட்டடங்கள், மற்றும் சிறிய நடுத்தர கைத்தொழில்கள் உருவாக்கப்பட்டு கிராமிய மீள் எழுச்சிக்கு வித்திட்ட சரவணபவனை நாம் என்றும் மறந்திடலாகாது. கடந்த காலங்களில் எண்ணற்ற சனசமூக நிலையங்கள் மறுசீரமைப் பின்றி, புதிய உட்கட்டமான வசதியின்றி, தளபாடங்கள் மற்றும் மின்னிணைப் பின்றி அவலங்களுடன் கிடந்தன. இன்று அவை புனரமைக்கப்பட்டு புத்துயிர் பெற்றுள்ளன. அதே சமயம் நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவன் பன்முகப்படுத்தப்பபட்ட நிதியிலும், தனது சொந்த நிதியிலும் பல உட்கட்டுமான அபிவிருத்திக்கு மாவட்ட மட்டத்தில் உள்ள 17 உள்ளூராட்சி சபைக்குட்பட்ட பொது அமைப்புக்களின் கோரிகைக்கு உதவியுள்ளார். இவர் எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி சார்பில் நாடாளுமன்ற வேட்பாளராகக் களமிறங்கியுள்ளார். எனவே வலி .தென்மேற்கு மக்கள் அபிவிருத்தியின் பங்காளியான சரவணபவனுக்கு எதிர்வரும் ஓகஸ்ட் 5 ஆம் திகதியன்று வாக்களித்து தமிழ்த் தேசியம் நாடாளுமன்றத்தில் தொடர்ந்து ஓங்கி ஒலிக்க ஒத்துழைப்பு வழங்குவதுடன் ஏனைய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். கிளிநொச்சி வீட்டுக்கட்சிவேட்பாளர்களுக்கும் வெற்றி வாய்ப்பை அள்ளி வழங்குமாறு மானிப்பாய் மக்கள் சார்பில் கேட்டுக் கொள்கின்றேன் - என்றார். (ப-50)

# மக்களின் மேம்பாட்டுகான குரலாக ஒலிப்போம்

## வடக்கு மாகாண முன்னாள் உறுப்பினர் நடராஜா கூறுகிறார்

வவுனியா, ஜுலை 10

நிலையான அரசியல் பொருளாதார சமூக அபிவிருத்தியைப் பெற்றுக்கொடுக்கும் மக்களின் குரலாக ஒலிப்போம் என அகத்தேசியமுற்போக்குக் கழகத்தின் தலைவரும், வடக்கு மாகாணசபையின் முன்னாள் உறுப்பினருமான எம்.பி.நடராஜா தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

நாம் தனித்துவமான முறையில் அகதேசியமுற்போக்குக் கழகத்தில் சுயேச்சைக் குழுவாகப் போட்டியிடுகின்றோம். வன்னிமாவட்டத்திலே பரந்து வாழ்கின்ற மலையக மக்கள் மற்றும் ஏனைய மக்கள் சார்பாகக் களம் இறங்கியிருக்கின்றோம். தமிழ்த் தேசியக் கட்சிகள் பல இருக்கின்ற நிலையில் எம்மையும் இணைத்துப் போட்டியிடுவதற்கு எந்தக் கட்சிகளும் உத்தியோகபூர்வமான முறையில் அழைப்பு விடுக்கவில்லை. அதனால் தனித்துக் களம் இறங்கியிருக்கின்றோம். அந்த வகையில் மக்களின் மேம்பாட்டுக்கான குரலாக நாடாளு மன்றில் ஒலித்து. நம்மவர்களுக்கு மறுக்கப்பட்ட நிலையான அரசியல் பொருளாதார, கல்வி, சமூக அபிவிருத்தியைப் பெற்றுக்கொடுப்பதற்கு வெற்றிபெறும் அரசுடன் நிபந்தனை அடிப்படையில் இணைந்து செயற்படுவோம். பலம்மிக்க மறுக்கப்படமுடியாத சமூகம் நாம் என்பதை உறுதிப்படுத்தி நமது தனித்துவத்தைக் கட்டிக்காத்து அடுத்த தலைமுறைக்கு ஒப்படைப்பதுடன். நிலையான அரசியல் சக்தியாக எம்மைத் தக்கவைத்துப் பலப்படுத்துவோம். -என்றார். (ப-110)




# மாற்று அரசியல் தலைமையை தமிழ் மக்கள் ஆதரிக்கவேண்டும்

## முன்னாள் எம்.பி. சிவசக்தி ஆனந்தன்

மன்னார், ஜுலை 10

தமிழ் மக்கள் எங்களுக்கு வழங்குகின்ற ஆதரவின் ஊடாக நிச்சயமாக நாங்கள் இந்தத் தேர்தலில் அதிக பட்சமான ஆசனங்களைப் பெற்று தேர்தலுக்குப் பிற்பாடு நீண்ட காலமாகத் தீர்க்கப்படாமல் இருக்கின்ற எமது மக்களுக்கான பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுகின்ற அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்வோம் என்று தமிழ் மக்கள் கூட்டணியின் வன்னி மாவட்ட வேட்பாளரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சிவசக்தி ஆனந்தன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

நாடாளுமன்றத் தேர்தலுடன் ஒட்டி தமிழ் மக்கள் நூற்றுக்கு நூறு வீதம் இந்தத் தேர்தலில் வாக்களிக்க வேண்டும். நீண்ட காலமாக தமிழ் மக்கள் மத்தியில் தீர்க்கப்படாமல் இருக்கக்கூடிய இந்தப் பிரச்சினையை எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலைத் தொடர்ந்து நாம் தீர்த்து வைப்போம் தமிழ் மக்களுக்கு உறுதியான, ஒரு நேர்மையான அரசியல் தலைமையும், அரசியல் வெற்றிடமும் நீண்ட காலமாக ஏற்பட்டுள்ளது. நீண்ட காலமாக ஏற்பட்டுள்ள அரசியல் வெற்றிடத்தை நிவர்த்தி செய்யும் வகையில் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி அதனுடைய தலைவராக இருக்கக் கூடிய விக்னேஸ்வரன் தலைமையில் நடைபெற இருக்கின்ற நாடாளுமன்றத் தேர்தலில் வடக்கு கிழக்கில் போட்டியிடுகிறது. இதன் மூலம் 'தமிழ் மக்கள் தேசிய கூட்டணி ஆகிய நாம் அதிக ஆசனங்களைப் பெற்றுக் கொள்வோம். பொது மக்கள் சுயேச்சைக் குழுக்களுக்கும், அரசாங்கத்துக்கும், அரசு சார்பாக இருக்கின்றவர்களுக்கும் எதிர் வருகின்ற நாடாளுமன்றத் தேர்தலின் போது வாக்களிப்பதைத் தவிர்த்து எதிர் காலத்தில் தமிழ் மக்களுக்கான உறுதி மிக்க தலைமைத்துவத்தைக் கொண்டு வரும் வகையில் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் மீன் சின்னத்தை ஆதரிக்கும் படி மக்களுக்கு நாங்கள் தொடர்ச்சியான கோரிக்கையை முன் வைத்துள்ளோம். தமிழ் மக்கள் நிச்சயமாக ஆணையை எமக்கு வழங்குவார்கள் என்பதில் சந்தேகம் இல்லை - என்றார். (ப-56)

# சேவைகளைத் தொடர எனக்கு வாக்களியுங்கள்

## ஐ.தே.க வேட்பாளர் பஸ்மி கோரிக்கை

மன்னார் மாவட்டத்தில் கடந்த 20 வருடங்களுக்கு மேலாக உங்களில் ஒருவனாக உங்கள் இன்ப துன்பங்களில் பங்கெடுத்து பல்வேறு விதமான சேவைகளை நான் உங்களுக்குச் செய்துள்ளேன். எனவே எதிர்வரும் நாடாளுடன்றத் தேர்தலில் மன்னார் மாவட்டம் மற்றும் வன்னி மாவட்ட மக்கள் என்னை ஆதரித்து எனது சேவைகளைத் தொடர்ந்து நான் மேற்கொள்ள சந்தர்ப்பம் வழங்க வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சியின் வன்னி மாவட்ட வேட்பாளர் ஏ.சமியூ முகம்மது பஸ்மி தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் நான் போட்டியிடுகிறேன். சுமார் 20 வருடங்களுக்குப் பின்னர் வன்னியில் வேறு கட்சிகளுடன் இணையாமல் ஐக்கிய தேசியக் கட்சி தனித்துப் போட்டியிடும் நிலையில் அதன் சார்பில் வேட்பாளராக நான் களமிறங்கியுள்ளதை உங்களுக்குப் பணிவுடன் தெரிவிக்கின்றேன். நாட்டில் போர் மும்முரமாக இருந்த வேளை பலத்த இராணுவக் கெடுபிடிகளுக்கு மத்தியில் முழு நேர ஊடகவியலாளராகப் பணியாற்றி, மன்னார் மாவட்ட தமிழ் பேசும் மக்களான உங்களின் பல அவலங்களையும், நீங்கள் தினமும் எதிர்நோக்கிய இராணுவக் கெடுபிடிகள், மற்றும் பல்வேறு பிரச்சினைகளையும் தேசிய ரீதியிலும், சர்வதேச ரீதியிலும் ஊடகங்கள் மூலமாக வெளிவரச் செய்து அதற்கான தீர்வை நான் பெற்றுத்தந்தேன். பத்திரிகையாளராக நான் உங்களுக்காகக் குரல் எழுப்பிய அச்சந்தர்ப்பங்களில் பல்வேறு கொலை மிரட் டல்கள், ஆயுதக்குழுக்களின் அச்சுறுத்தல்களுக்கு நான் முகம் கொடுத்தேன். சர்வதேச மன்னிப்புச் சபை இலங்கை அரசுக்கு எனது பாதுகாப்புத் தொடர்பில் விசனம் தெரிவிக்கும் அளவுக்கு நான் கடும் உயிர் அச்சுறுத்தலை அச்சமயம் எதிர்நோக்கினேன். எனினும் அதற்கெல்லாம் தளர்வடையாமல் உங்களுக்காக நான் தொடர்ந்தும் பணியாற்றினேன். என்னை நீங்கள் யாவரும் ஆதரித்து எனது சேவைகளைத் தொடர்ந்து நான் மேற்கொள்ள சந்தர்ப்பம் வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன் - என்றார். (ப-56)

# ரிஷாத்துக்கு வாக்களிக்காதீர்!

## ஜனக்க நந்தகுமார் தெரிவிப்பு

முல்லைத்தீவு, ஜுலை 10

ரிஷாத் பதியுதீன் கேட்டால் எல்லாவற்றையும் கொடுங்கள் ஆனால் வாக்கை மட்டும் கொடுத்து விடாதீர்கள் என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் வன்னி வேட்பாளர் ஜனக்க நந்தகுமார் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

ரிஷாத் பதியூதீனும் காதர் மஸ்தானும் தமிழ் மக்களையும் சிங்கள மக்களையும் ஏமாற்றிவிட்டு நாடாளுமன்றம் சென்று அவர்கள் சமூகத்திற்கே அபிவிருத்தி செய்வார்கள். வன்னி மாவட்டத்துக்கு வெளிமாவட்டத்திலிருந்து அரச ஊழியர்களை ஏற்றிக்கொண்டு எத்தனை பேருந்துகள் நாள்தோறும் வருகின்றன. அவர்களில் அதிகமாக வருபவர்கள் ரிஷாத் பதீயுதீனால் நியமிக்கப்பட்ட புத்தளம் மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள். வன்னியில் சாதாரணதரத்தில் சித்தியடைந்து, உயர்தரத்தில் சித்தியடைந்து, பல்கலைக்கழகம் சென்று பட்டம் பெற்ற மாணவர்கள் வேலையில்லாமல் இருக்கின்றார்கள். வன்னியில் இளைஞர் யுவதிகள் வேலைவாய்ப்பின்றி தவித்து வருகின்றார்கள். முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் வீதிகளில் இளநீர் விற்றவரும், பெட்டிக்கடை வைத்திருந்தவர்களும்தான் இப்போது அரச திணைக்களங்களில் வேலைசெய்கின்றார்கள். முஸ்லிம் கிராமங்கள் அபிவிருத்தியாக இருக்கின்றன. ரிஷாத் பதியுதின் என்ன கேட்டாலும் நீங்கள் கொடுங்கள். ஆனால் உங்கள் வாக்கை மட்டும் கொடுக்காதீர்கள். ரிஷாத் பதியுதீன் கடந்த 10 ஆண்டுகளாகச் செய்த பாவம் அநியாயம் தான் பத்து ஆண்டுகளாக இந்த வன்னி மக்கள் கஷ்டப்படுவதற்கும் துன்பப்படுவதற்குக் காரணம். இந்தப் பிரச்சினையிலிருந்து அனைத்து மக்களையும் மீட்போம். எனக்கு ஒரேயொரு கனவுதான் வன்னியில் கஷ்டப்படும் மக்களின் வாழ்க்கையை முன்னேற்றவேண்டும் - என்றார் (ப-19)

# இராணுவக் கண்காணிப்பிலும் கோவில் உண்டியல் உடைப்பு

### சாவகச்சேரி நகரில் சம்பவம்

சாவகச்சேரி, ஜூலை 10

இராணுவக் கண்காணிப்பு இருந்தும், சாவகச்சேரி பொதுச் சந்தை வளாகத்தில் உள்ள குபேர கணபதி கோவிலின் உண்டியல் உடைக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

நேற்றுமுன்தினம் இரவு இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. சந்தைக்கு வரும் மக்களால் உண்டியலில் காணிக்கையாகச் செலுத்தப்படும் பணம் வாரத்தில் ஒருநாள் (வெள்ளிக்கிழமைகளில் ) கோவில் நிர்வாகத்தினரால் திறக்கப்பட்டு சேர்ந்துள்ள தொகை எடுக்கப்பட்டு கோவில் தேவைகளுக்குப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. நேற்றுக் காலை கோவிலுக்குள் சென்றவர்கள் உண்டியலின் பூட்டு. உடைக்கப்பட்டிருப்பது கண்டு நிர்வாகத்தினருக்கு அறிவித்துள்ளனர். ஈஸ்டர் தாக்குதலின் பின்னர். படையினர் தினமும் இரவு வேளையில் சந்தை வளாகத்தில் உள்ள நவீனசந்தை மேல்மாடியில் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர். அந்துடன் கீழ்ப்பகுதியில் நகரசபையின் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் இரவுக் கடமையில் உள்ளனர். இவ்வளவு பாதுகாப்பின். மத்தியில் உண்டியல் உடைக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. உண்டியல் உடைக்கப்பட்ட போதும், அதில் பணம் இருந்தது என்றும் தெரி விக்கப்படுகிறது. சந்தைச் சுற்றாடலின் நவீன சந்தையினூடாகப் பிரவேசிக்கும் சுருக்குக் கதவுகள் நீண்டகாலமாக பழுதடைந்து காணப்படுகின்றன. அதனைத் திருத்தித் தருமாறு பலதடவைகள் நகரசபைக்கு அறிவிக்கப்பட்டிருந்தன. ஆனால் அவை இன்னமும் திருத்தப்பட்டவில்லை, என்று சந்தை வியாபாரிகள் தெரிவித்தனர். (ப-9)

# உரமானியத்தை 17 ஆம் திகதிக்கு முன்னர் பெறவும்

கொடிகாமம்,ஜூலை 10

சாவகச்சேரி கமநல சேவைகள் நிலையத்தில் சிறுபோக செய்கைக்கான மேலதிக உரமானியத்துக்கு விண்ணப்பித்து இதுவரை பெற்றுக் கொள்ளாதவர்கள் எதிர்வரும் 17 ஆம் திகதிக்கு முன்னர் அதனைப் பெற்றுக்கொள்ளுமாறு சாவகச்சேரி கமநல சேவைகள் நிலையத்தின் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் அறிவித்துள்ளார். (ஜ-159)



கலாசார அலுவல்கள் அமைச்சினால் வழங்கப்படும் கலைஞர் அடயாள அட்டைகள் காரைநகர் பிரதேசத்தைச் சேர்ந்த கலைஞர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. இந்த நிகழ்வு, நேற்று காரைநகர் கலாசார மத்திய நிலையத்தில் இடம்பெற்றது. (ப)

# மணல் ஏற்றிய உழவு இயந்திரம் பொலிஸாரால் மீட்பு

கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பாலாவி கடற்கரைப் பகுதியில் சட்டவிரோதமாக மணல் ஏற்றியதாகத் தெரிவித்து உழவு இயந்திரம் ஒன்றை கொடிகாமம் பொலிஸார் நேற்றுமுன்தினம் கைப்பற்றியுள்ளனர்.

தமக்கு கிடைத்த இரகசிய தகவலுக்கமைய பொலிஸார் அங்கு சென்றனர். மணல் ஏற்றிக்கொண்டு நின்ற சாரதியும் உதவியாளரும் தப்பியோடியுள்ளனர். அதனால் உழவுஇயந்திரத்தை மீட்டு பொலிஸ் நிலையத்துக்கு கொண்டுவந்தோம் என்று பொலிஸார் தெரிவித்தனர். (து-159)

# தீயணைப்பு வாகனங்கள் யாழ்.குடாவுக்கு அவசியம்

## மஹிந்தவை வலியுறுத்திய யாழ். வணிகர் கழகம்

யாழ்ப்பாணம், ஜூலை 10

குடாநாட்டைச் சேர்ந்த 15 பிரதேச செயலக மக்களும், பயன்படக்கூடியதாக குறைந்தது 3 தீயணைப்பு வாகனங்களையாவது வழங்குவதுடன் அதற்குரிய பொறிமுறைகளையும், ஏற்படுத்தித் தருமாறு யாழ்ப்பாணம் வணிகர் கழகத்தினர் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவைக் கோரியுள்ளனர்.

இது தொடர்பில் பிரதமருக்கு அவர்கள் அனுப்பிவைத்த கடிதத்தில் மேலும் உள்ளதாவது;

யாழ். மாநகர சபைக்குச் சொந்தமான தீயணைப்பு வாகனம் சேவைக்காகச் சென்றபோது, ஏற்பட்ட விபத்தால், முற்றாகச் சேதமடைந்துள்ளது. அந்த வாகனத்தில் சென்ற தீயணைப்பு வீரர் ஒருவரும் இறந்துள்ளார். இந்தத் தீயணைப்பு வாகனம் சேதமடைந்ததன் காரணமாக யாழ்ப்பாணக் குடாநாட்டில், தீயணைப்பு வாகனம் இல்லாத நிலை காணப்படுகிறது. யாழ்ப்பாணக் குடாநாடு முழுவதுமாகச் சேவையாற்றி வந்த ஒரேயொரு தீயணைப்பு வாகனம் விபத்துக்குள்ளானதை அடுத்து இன்று யாழ். குடாநாட்டைச் சேர்ந்த 15 பிரதேச செயலகத்துக்கும், எந்தவொரு தீயணைப்பு வாகனமும் இல்லாத நிலை காணப்படுகிறது. இதனால் இந்தப் பிரதேசங்களில் அனர்த்தங்கள் இடம்பெறும்போது, அழிவுகளும் உயிர்ச் சேதங்களும் ஏற்பட வாய்ப்புள்ளது. ஆகவே தாங்கள் இந்த நாட்டின் பிரதமர் என்ற வகையில் குடாநாட்டைச் சேர்ந்த 15 பிரதேச செயலக மக்களும், பயன்படக் கூடியதாக குறைந்தது 3 தீயணைப்பு வாகனங்களையாவது வழங்குவதுடன் அதற்குரிய பொறிமுறைகளையும், ஏற்படுத்தி தருமாறு கேட்டுக்கொள்கிறோம் - என்றுள்ளது. (ப)

# ஒருவேளை மட்டும் மணல்ஏற்றிச்செல்ல நடவடிக்கை எடுக்குக

### மக்கள் கோரிக்கை


கிளிநொச்சி, ஜூலை 10

இரவு அல்லது பகல் என ஒரு வேளை மாத்திரம், மணல் அகழ்ந்து செல்வதற்கான அனுமதியை சம்பந்தப்பட்டவர்கள் வழங்கவேண்டும் என்று கிளிநொச்சி, ஏ-32வீதியிலுள்ள மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவித்ததாவது;

ஊரடங்குச் சட்டம் தற்போது முழுமையாகத் தளர்த்தப்பட்டதையடுத்து இரவு, பகலாக மணல் அகழப்பட்டு, பாரவூர்தி மற்றும் டிப்பர் வாகனங்களில் கொண்டுசெல்லப்படுகின்றன. இரவு, பகலாக மணல் ஏற்றிச் செல்வதன் காரணமாக டிப்பர் வாகனச் சாரதிகளின் நித்திரைத் தூக்கத்தால், விபத்துக்கள் அதிகம் ஏற்படுகின்றன.

இதனால் உயிரிழப்புக்கள் ஏற்படும் அபாயமும் உள்ளது. தற்போது பாடசாலைகளில் கல்வி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் வேகமாகச் செல்லும் இவ்வாறான டிப்பர் வாகனங்களால், மாணவர்களுக்கு ஏதும் ஆகிவிடுமோ என்ற அச்சம் ஏற்பட்டுள்ளது. எனவே இதுதொடர்பில், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்கள் தெரிவிக்கின்றனர். (ஜ-113)



# மரத் தடிகளுடன் ஒருவர் கைது

முல்லைத்தீவு, ஜூலை 10

சட்டவிரோதமான முறையில் காட்டில் வெட்டிய 850 மரத் தடிகளை வைத்திருந்த குற்றச் சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவரிடமிருந்து மரத்தடிகள் ஏற்றப்பட்ட கூலர் வாகனமும் கைப்பற்றப்பட்டதாக புதுக்குடியிருப்புப் பொலிஸார் தெரிவித்தனர்.

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு மரங்கள் கடத்தப்படுகின்ற என கிடைத்த தகவலை அடுத்து நேற்றுமுன்தினம் இரவு சந்தேகநபர் கைது செய்யப்பட்டார். என்று பொலிஸார் தெரிவித்தனர். (ஜ-19)

# கடற்படையால் வடக்கில் கொரோனா விழிப்புணர்வு

யாழ்ப்பாணம், ஜூலை 10

வடக்கு கடற்படைத் தலைமையகத்தின் ஏற்பாட்டில் கடற்கரையை அண்டி வாழும் மக்களுக்கு கொரோனா நோய்த்தாக்கம் பற்றிய விழிப்புணர்வுச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. வடக்கின் முக்கியமான கடற்கரையை அண்டிய பகுதிகளில் இந்த விழிப்புணர்வுச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்தியாவிலிருந்து சட்டவிரோதமான முறையில் இலங்கைக்கு வருகை தருவோர் மூலம் வடக்கில் கொரோனாத் தொற்று ஏற்படுவதற்கான சாத்தியக் கூறுகள் அதிகளவில் காணப்படுவதன் காரணமாக அதனைத் தடுக்கும் முகமாக விழிப்புணர்வுச் செயற்பாடுகள் கடற்கரையை அண்டிய பகுதிகளில் முன்னெடுக்கப்படுகின்றன என்று தெரிவிக்கப்பட்டது. மண்டைதீவு ,அல்லைப்பிட்டி, மயிலிட்டி, வடமராட்சி கிழக்கு போன்ற இடங்களில் உள்ள மக்களுக்கு கடற்படையினர் இவ்வாறு விழிப்புணர்வுகளை ஏற்படுத்திவருகின்றனர். இந்தியாவில் கொரோனாத் தாக்கம் அதிகளவில் காணப்படுவதன் காரணமாக இந்தியாவிலிருந்து கடல் வழியாக சட்டவிரோதமாக இலங்கைக் கடற்பரப்புக்குள் வருபவர்கள் தொடர்பில் அவதானமாக இருக்குமாறும் இதுதொடர்பான தகவல்களைப் பொதுமக்கள் கடற்படையினருக்கு வழங்கவேண்டும் எனவும் இதன்போது கடற்படையினர் மக்களுக்கு அறிவுறுத்துகின்றனர். (ப)



# பெருந்திருவிழா

கொடிகாமம்,ஜூலை 10

மீசாலை காட்டுவளவு நெல்லியடி கந்தசாமி ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா நாளை சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்து நாள்கள் நடைபெறும்.

எதிர்வரும் 19 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தேர்த் திருவிழாவும், மறுநாள் திங்கட்கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும் என்று ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (ஜ-159)

# நவம்பரில் சபைக்கு வருகிறது 2021 ஆம் ஆண்டுக்கான பட்ஜட்

கொழும்பு, ஜுலை 10

**கோத்தாபய ராஜபக்ஷ தலைமையிலான புதிய அரசின் முதலாவது வரவு– செலவுத்திட்டம் 2020 நவம்பரில் முன்வைக்கப்படும் என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான கூட்டணியின் பொதுச்செயலாளர் பஸில் ராஜபக்ஷ தெரிவித்தார்.**



ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன வின் ஊடகவியலாளர் மாநாடு அந்தக் கட்சியின் தலைமை அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. அதில் உரையாற்றுகையிலேயே அவர் இந்த தகவலை வெளியிட்டார்.

"பொதுத்தேர்தலில் வெற்றிபெற்று புதிய ஆட்சி அமையப்பெற்ற பின்னர் இடைக்கால கணக்கறிக்கையே முன்வைக்கப்படும். 2020 ஆம் ஆண்டுக்காக பட்ஜட் சமர்ப்பிக்கப்படாது. ஏனெனில் இந்த ஆண்டு முடிவடைவதற்கு குறுகிய காலப்பகுதியே உள்ளது. 2021 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் 2020நவம்பரில்முன்வைக்கப்படும். நாட்டு மக்களின் பொருளாதாரத்தை பலப்படுத்துவதே எமது இலக்கு. அதனை அடிப்படையாகக்கொண்டு அடுத்த நான்கு வருடங்களுக்கு திட்டங்கள் முன்னெடுக்கப்படும்.

அதேவேளை, புதிய அரசமைப்பு இயற்றப்படும். ஆனால், எந்தவொரு தரப்பினதும் நிபந்தனைகளை ஏற்காதிருக்கும் வகையில் பலம்மிக்க நாடாளுமன்ற ஆணையை மக்கள் எமக்கு வழங்கவேண்டும்" - என்றும் அவர் கூறினார். (த-44)

## மூன்றிலிரண்டு பெரும்பான்மை பெரமுன கட்சிக்கு கிடைக்காது

*அதே கட்சியைச் சேர்ந்தவரே தெரிவிப்பு*

கொழும்பு, ஜுலை 10

பொதுஜன பெரமுன மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆசனங்களை பெறுவது சாத்தியமற்றது. விகிதாசார தேர்தல் முறைமையின் கீழ் எந்தக் கட்சியும் தனித்து பெரும்பான்மை ஆசனங்களை ஒருபோதும் பெறாது. இருப்பினும் பொதுஜன பெரமுனவே அரசை அமைக்கும்.

இவ்வாறு கூறியுள்ளார், பொதுஜன பெரமுனவின் உறுப்பினர் மஹிந்த யாப்பா அபேவர்தன.

தற்போது நடைமுறையில் உள்ள தேர்தல் முறைமை ஆளும் தரப்பினருக்கு மாத்திரமல்ல, எதிர்த் தரப்பினருக்கும் நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது.

விருப்பு வாக்கு முறைமை கட்சிகளின் உறுப்பினர்களுக்கிடையில் முரண்பாடுகளை தோற்றுவித்துள்ளது. அரசியல் கட்சிகளில் தற்போது எழுந்துள்ள முரண்பாடுகளுக்கு விருப்பு வாக்கு முறைமை பிரதான காரணியாக உள்ளது.

விகிதாசார தேர்தல் முறைமையின் கீழ் பொதுஜன பெரமுன மூன்றில் இரண்டு பெரும்பான்மையான ஆசனங்களைப் பெறுவது சாத்தியமற்றது. அதாவது மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆசனங்களை கைப்பற்ற 150க்கும் அதிகமான ஆசனங்களை தனித்துப் பெறவேண்டும். அவ்வாறாயின் 94 சதவீதமான வாக்குகளைப் பெறவேண்டும். இது சாத்தியமற்றது.

எவ்வாறு இருப்பினும், பொதுஜன பெரமுன 130 தொடக்கம் 135 வரையான ஆசனங்ளை கைப்பற்றும். புதிய அரசை ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவே அமைக்கும் என்பதில் எவ்வித மாற்றமும் கிடையாது. ஒரு கட்சி நாடாளுமன்றில் தனித்து ஆட்சியமைக்க வேண்டுமாயின் முதலில் நடைமுறையிலுள்ள தேர்தல் முறைமை மாற்றியமைக்கப்பட வேண்டும்-என்றார். (த)

## நாடளாவிய ரீதியில் 176 துப்பாக்கிகள் மீட்பு

கொழும்பு, ஜுலை 10

நாடளாவிய ரீதியில் பல்வேறு இடங்களில் மேற்கொள்ளப்பட்ட சுற்றி வளைப்பின் போது 176 துப்பாக்கிகள் கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த ஜுன் மாதம் 6 ஆம் திகதி தொடக்கம் நேற்றுமுன்தினம் 8 ஆம் திகதி வரையான காலப்பகுதியிலேயே இந்தத் துப்பாக்கிகள் கைப்பற்றப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அதனடிப்படையில் ரி 56 துப்பாக்கிகள் 11, ரி 81 ரக துப்பாக்கி ஒன்று, போரா 12 வகை துப்பாக்கிகள் 42, பிஸ்டல் 4, கல்கடஸ் 29, ரிபீட்ர் 74 மற்றும் வேறு வகை துப்பாக்கிகள் 15 ஆகியன கைப்பற்றப்பட்டன.

இந்தத் துப்பாக்கிகளுடன் 89 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## சுருக்குவலையில் மீன்பிடி: கொக்கிளாயில் 8பேர் கைது

முல்லைத்தீவு, ஜுலை 10



தடைசெய்யப்பட்ட தொழில்முறையான சுருக்கு வலையைப் பயன்படுத்தி முல்லைத்தீவின் கொக்கிளாய் மற்றும் மாத்தளனில் மீன்பிடியில் ஈடுபட்டனரென்ற குற்றச்சாட்டில் கொக்கிளாயில் சிங்கள மீனவர்கள் 8 பேர் நேற்று வியாழக்கிழமை அதிகாலை கைதுசெய்யப்பட்டனர். அவர்களின் 2 படகுகளும் சுருக்கு வலையும் கைப்பற்றப்பட்டன.

அவர்களை கடற்படையினர் முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழில் நீரியல்வளத்துறைத் திணைக்களத்திடம் நேற்று முற்பகல் ஒப்படைத்திருந்தனர்.

அவர்களுக்கு எதிராக முல்லைத்தீவு நீதிமன்றில் திணைக்களத்தினர் குற்றச்சாட்டுப் பத்திரம் தாக்கல்செய்துள்ளனர்.

இதேவேளை, மாத்தளனிலும் இவ்வாறு சட்டவிரோத தொழில் முறையில் ஈடுபட்ட மீனவர்களைக் கைதுசெய்ய கடற்படையினர் சென்றபோது மீனவர்கள் படகுகளைவிட்டுத் தப்பியோடிவிட்டனர். அவர்களின் 2 படகுகளை கடற்படையினரால் மீட்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. (த)

## சட்டவிரோத மின்பாவனை 10.5 கோடி ரூபா தண்டம்

கொழும்பு, ஜுலை 10

சட்டவிரோதமாக மின்சார இணைப்புகளை பெற்றவர்களிடம் 10 கோடியே 50 லட்சம் ரூபா தண்டம் அறவிடப்பட்டுள்ளதாக இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

கடந்த வருடம் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புகளின் போதே பலரும் சிக்கியிருந்தனர். அவர்களிடமே இந்த தண்டம் அறவிடப்பட்டது என்று மின்சக்தி அமைச்சின் ஊடகப் பேச்சாளர் சுலக்ஷன ஜயவர்தன தெரிவித்தார்.

சட்டவிரோத மின் இணைப்புகள் பெற்றமை தொடர்பில் ஆயிரத்து 930 சுற்றிவளைப்புகள் கடந்த வருடத்தில் முன்னெடுக்கப்பட்டன என்றும் அவர் கூறியுள்ளார்.

மீற்றர்களை மாற்றி அமைத்தல், சட்டவிரோதமாக பிரதான மின்கம்பியிலிருந்து மின் இணைப்பை பெற்றுக் கொள்ளுதல் உள்ளிட்ட பல்வேறு சம்பவங்கள் தொடர்பில் சுற்றிவளைப்புகள் மேற்கொள்ளப்பட்டன என்று சுலக்ஷன ஜயவர்தன தெரிவித்தார்.

இலங்கை மின்சார சபையின் விசேட விசாரணை பிரிவினரால் இந்த சுற்றிவளைப்புகள் முன்னெடுக்கப்பட்டன.

சுற்றிவளைப்புகளின்போது கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்களிடமிருந்து, வழக்கு கட்டணமாக 60 லட்சம் ரூபாவுக்கும் அதிக பணம் அறிவிடப்பட்டுள்ளதாகவும் சுலக்ஷன ஜயவர்தன தெரிவித்தார்.

சட்டவிரோதமாக மின் இணைப்புகளைப் பெற்றுக் கொள்பவர்கள் காணப்படும் பட்சத்தில் உடனடியாக இலங்கை மின்சார சபையின் விசேட விசாரணை பிரிவுக்கு அறிவிக்குமாறும் மின்சக்தி அமைச்சின் ஊடகப் பேச்சாளர் சுலக்ஷன ஜயவர்தன மேலும் தெரிவித்தார். (த)

## நாடு திரும்பியோருக்கு உள்ளூரில் சுயதொழில்

*ஜனாதிபதி கூறுகின்றார்*

கொழும்பு, ஜுலை 10

வெளிநாடுகளில் தொழில் புரியும் இலங்கையர்கள் மற்றும் வெளிநாடுகளிலிருந்து நாடு திரும்பிய இலங்கையர்களுக்கு உள்நாட்டில் சுய தொழிலில் ஈடுபடுவதற்கு அரசால் முடிந்த உதவிகள் செய்யப்படும் என்று ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

கொரோனா அச்சுறுத்தல் காரணமாக வெளிநாடுகளில் தங்கியிருந்த இலங்கையர்கள் திரும்பவும் நாட்டுக்குள் அழைத்து வரப்பட்டனர்.

தொழில் வாய்ப்புகளுக்காக வெளிநாடு சென்று நாடு திரும்பியவர்கள் நாட்டில் தமக்கு விருப்பமான தொழிலில் ஈடுபட அரசால் முடிந்த உதவிகள் செய்து தரப்படும் என்றும் ஜனாதிபதி கூறியுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற கலந்துரையாடல் ஒன்றிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார் என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (த)

## பிறப்பு ,இறப்புச் சான்றிதழ் ஆவணங்களைப் பெற பதிவு மேற்கொள்ளவும்

சாவகச்சேரி . ஜுலை 10

தென்மராட்சி பிரதேசத்தில் இதுவரை பிறப்பு ,இறப்பு ,விவாகப்பதிவுச் சான்றிதழ் பதிவு செய்யாதவர்களுக்கும் ,தேசிய அடையாள அட்டை இல்லாதவர்களுக்குமான நடமாடும் சேவைகள் விரைவில் பிரதேச செயலகத்தில் நடத்தப்படவுள்ளன.

இதற்கான ஆவணங்களைத் தயார்படுத்துவதற்கான பதிவுகள் எதிர்வரும் 16 ,17 ஆம் திகதிகளில் பிரதேச செயலகத்தினரால் மேற்கொள்ளப்படவுள்ளன.

16 ஆம் திகதி வியாழக்கிழமை. சாவகச்சேரி கோயிற் குடியிருப்பு , அல்லாரை,கச்சாய், பாலாவிஆகிய பிரிவுகளுக்கான பதிவுகள் சாவகச்சேரி கச்சாய் வீதி புனித லிகோரியார் தேவாலயத்திற்கு அருகில் உள்ள கடற்றொழிலாளர் இளைப்பாறு மண்டபத்திலும்,17 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மறவன்புலவு, தனங்களப்பு பிரிவுகளுக்கான பதிவுகள் மறவன்புலவு பிரிவு கிராம அலுவலர் அலுவலகத்திலும் நடத்தப்படவுள்ளன.

பதிவுகளை மேற்கொள்ளும் மக்கள் தமது குடும்ப அட்டை தேவைப்படும் சான்றிதழின் தன்மை போன்ற விவரங்களை கொண்டு வருமாறும் பிரதேச செயலர் அறிவித்துள்ளார். (ஐ-9)



சிங்களமொழி மூலம்:
மேஞ்ஞநாத (மவ்பிம)
தமிழில்: வி.எஸ்.ரீ.

புதுடில்லித் தேர்தல் தோல்வியை அடுத்து தமது அரசின் போக்குக் குறித்து பிரதமர் மோடி சிந்திக்கத் தலைப்பட்டார். அதற்காகஅவர் குழப்பமடையவில்லை. தாம் மேற் கொண்டு வந்த நிர்வாகக் கட்டமைப் புப் பணிகளைத் தொடர்ந்தும் முன்னெடுத்ததுடன் அதுவரை தாம் கவனம் மேற்கொள்ளத் தவறிய நாட்டின் சாதாரண பொது மக்களது தேவைகள் குறித்து உடனடிக்கவனம் செலுத்திச் செயற்பட ஆரம்பித்தார். நாட்டு ம க்களது தேவைகளை இனங்கண்டு நிறைவேற்றும் புதிய திட்டங்களை மிக வேகமாக மேற்கொள்ளத் தொடங்கினார்.

# இன்னமும் காலமிருக்கிறது!



தொடர்ச்சியாக நீண்ட காலம் இந்தியாவை ஆட்சிசெய்த இந்திய காங்கிரஸ் கட்சி அரசுக்கு எதிராக 2014ஆம் ஆண்டுப் பொதுத்தேர்தலில் பாரதிய ஜனதாக்கட்சிக்குத் தலைமைதாங்கிப் போட்டியிட்ட நரேந்திர மோடி, தமது தேர்தல் பரப்புரையின் போது மிகச் சுருக்கமாகவே பொது மக்களிடம் தமது கருத்துக்களை முன்வைப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தார். "காங்கிரஸ் கட்சிக்கு நாட்டை நிர்வகிக்க அறுபது ஆண்டுகள் கால அவகாசம் வழங்கினீர்கள். பரவாயில்லை; எனக்கு அறுபது மாதங்கள் வாய்ப்பு வழங்கிப் பாருங்கள். இந்தியாவை கட்டியெழுப்பிக் காட்டுகிறேன்" என்று மட்டுமே அவர் சுருக்கமாகக் கோரிக்கை முன்வைத்து வந்தார். அதேவேளை இந்திய காங்கிரஸ்கட்சித் தலைவர்களோ நரேந்திரமோடியைக் கீழ்த்தரமாக விமர்சித்து வந்தனர். சிறு வயதில் மோடி தேநீர் விற்றுப் பிழைப்பு நடத்தியவர் எனவும் விமர்சித்தனர். அவர்களது அத்தகைய சீண்டுதல்களுக்கெல்லாம் "நான் தேநீர் விற்று வாழ்க்கை நடத்தியது உண்மையே; ஆனால் நான் இந்திய நாட்டை ஒரு போதும் விற்றதில்லை" என மோடி பதிலுக்கு காங்கிரஸ் கட்சியினரைக் குத்திக்காட்டி பதிலடி கொடுத்து வந்தார். மாறாக காங்கிரஸ் அரசு மேற்குலக நாடுகளுக்கு ஆதரவாகச் செயற்பட்டதாகவோ, காங்கிரஸ் கட்சித் தலைவி சோனியா காந்தி இத்தாலி நாட்டுப் பிரஜை என்றோ எதிர்த் தரப்பினர்மீதுதனிப்பட்ட குற்றச்சாட்டுக்களை மோடி முன்வைத்ததில்லை. அதேவேளை உத்தரப் பிரதேச மற்றும் மேற்கு வங்காள மாநில முதலமைச்சர்கள் கூட மோடிக்கு எதிராக பல்வேறு குற்றச்சாட்டுக்களை முன்வைத்து விமர்சிக்கத் தவறவில்லை. இத்தகைய கடும் எதிர்ப்புக்களையெல்லாம் முறியடித்து கடைசியில் பொதுத்தேர்தலில் பாரதிய ஜனதாக் கட்சியின் தலைமையிலான கூட்டணி பெரும்பான்மையுடன் வெற்றியீட்டி மோடி இந்தியாவின் பிரதமராகப் பதவியேற்றார்.

### ஊழல் ஒழிப்புக்கு முக்கியத்துவம்

தமது தலைமையிலான புதிய அரசில் முதலிரண்டு ஆண்டுகளிலும் மோடியால் நாட்டுக்கு புதுமை எதனையும் நிகழ்த்திக் காட்டிட முடியவில்லை. லஞ்சம், ஊழல்களால் சீரழிந்து போயிருந்த நாட்டை நிர்வாக ரீதியில் புனர்நிர்மாணம் செய்வதிலேயே அவரால் கவனம் செலுத்த முடிந்தது. பசி பட்டினியால் வாடும் மக்களுக்கு நிவாரணம் பெற்றுத்தராது நிர்வாகக் கட்டமைப்பைச் சீர்செய்வதிலேயே முனைப்புக் காட்டுகிறாரே என எதிரணியினர் மோடியை விமர்சிக்கத் தலைப்பட்டனர். மடமைத்தனமான இவரது இத்தகைய போக்கு புதுடில்லித் தேர்தலில் பாரதிய ஜனதாக் கட்சிக்கு தோல்வியளிக்கப் போகிறது என காங்கிரஸ் கட்சியினர் விமர்சித்தனர். 2013ஆம் ஆண்டில் இடம்பெற்ற தேர்தலில் புதுடில்லியில் பாரதிய ஜனதாக்கட்சியே குறைந்த அளவிலான பெரும்பான்மையுடன் வெற்றி பெற்று அதிகாரத்தைக் கைப்பற்றியிருந்தது. 2015ஆம் ஆண்டு அதே புதுடில்லித் தேர்தலில் பாரதிய ஜனதாக் கட்சி பெரும் தோல்வியைச் சந்திக்க நேர்ந்ததால் மோடியின் தலைமையிலான மத்திய அரசு மீதான காங்கிரஸ் கட்சியின் விமர்சனங்கள் மீண்டும் வலுப்பெற்றன.

### நிர்வாக நடைமுறையில் மாற்றம்

குறித்த அந்த புதுடில்லித் தேர்தல் தோல்வியையடுத்தே தமது அரசின் போக்குக் குறித்து பிரதமர் மோடி சிந்திக்கத் தலைப்பட்டார். அதற்காகஅவர் குழப்பமடையவில்லை. தாம் மேற்கொண்டு வந்த நிர்வாகக் கட்டமைப்புப் பணிகளைத் தொடர்ந்தும் முன்னெடுத்தமையுடன் அதுவரை தாம் கவனம் மேற்கொள்ளத் தவறிய நாட்டின் சாதாரண பொது மக்களது தேவைகள் குறித்து உடனடிக் கவனம் செலுத்திச் செயற்பட ஆரம்பித்தார். நாட்டு மக்களது தேவைகளை இனங்கண்டு நிறைவேற்றும் புதிய திட்டங்களை மிக வேகமாக மேற்கொள்ளத் தொடங்கினார். மக்கள் நலத் திட்டங்கள் பலவற்றைச் செயற்படுத்தி அடுத்து இடம்பெற்ற குஜராத் மாநிலத் தேர்தலை நம்பிக்கையுடன் எதிர்கொண்டார். பாரம்பரியம் மிக்க இந்திய காங்கிரஸ் கட்சியைத் தோற்கடித்து மோடியின் பாரதிய ஜனதாக் கட்சி அந்தத்தேர்தலில் சாதனை படைத்துக்காட்டியது. மோடி அலைக்குள் அகப்பட்டு காங்கிரஸ் கட்சியால் தலைநிமிர இயலாது போயிற்று. ஐந்து ஆண்டு காலத்துக்கு மட்டுமே ஆட்சி அதிகாரத்தை வகித்த மோடியால் மீண்டும் இடம்பெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் தமது வெற்றியை இரட்டிப்பாக்கி மீண்டும் ஒருமுறை நாட்டின் பிரதமர் பதவியைக் கையேற்க முடிந்தது.

அரசியல் வரலாற்றை அறிந்தவர்கள் "உண்மையில் நரேந்திரமோடி, இலங்கையின் முன்னாள் தலைவர் பிரேமதாசவைப் போன்றவர்" எனக் குறிப்பிடத் தவறவில்லை. அந்தக் கூற்றிலும் உண்மை இல்லாமலில்லை. முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசவை அறியாத இலங்கையர்கள் எவருமிருக்க வாய்ப்பில்லை. தமது வாழ்க்கையை பூச்சியத்தில் ஆரம்பித்து நாட்டின் உயர்பதவியான ஜனாதிபதிப் பதவியை வகித்த பிரேமதாச நாட்டின் வறிய மக்களுக்கென ஆற்றிய சேவைகள் பெறுமதி மிக்கவை.

1977ஆம் ஆண்டில் பிரேமதாச முதன்முதலில் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்ட சமயம் சுதந்திரக் கட்சித் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்க போன்றே அவரது மகன் அனுரபண்டாரநாயக்கவும் பிரேமதாசவை இழிவுபடுத்தும் வகையில் விமர்சித்து வந்தார். "வாழைத்தோட்டம் பகுதியில் 'லவரியா"என்ற தின்பண்டம் விற்ற நபர்" என பிரேமதாசவை சுதந்திரக் கட்சியைத் சேர்ந்த பலர் கேலி செய்யத் தவறவில்லை. ஆயினும் குறித்த அந்தப் பொதுத் தேர்தலில் கொழும்பு மாவட்டத்தில் அதிகூடிய விருப்பு வாக்குகளை வழங்கி மக்கள் அவரை நாடாளுமன்றத்துக்கு அனுப்பி வைத்தனர். அவரை இழிவுபடுத்தி விமர்சித்த அனுர பண்டாரநாயக்க நுவரெலியா - மஸ்கெலியா தொகுதியின் இரண்டாவது நாடாளுமன்ற உறுப்பினராகவே தெரிவு செய்யப்பட நேர்ந்தது.

### தக்க தருணம் பார்த்துப் பதிலடி

அனுர பண்டாரநாயக்க, மற்றும் சிறிமாவோ குறித்த தமது அதிருப்தியை பிரேமதாச தக்க தருணம் பார்த்து வெளிப்படுத்தத் தவறவில்லை. நாடாளுமன்றத்தில் ஒரு சமயம் உரையாற்றும்போது, "இந்தியப் பிரதமர் இந்திரா காந்தியை அரசியல் ரீதியில் வழிதவற வைத்தவர் சிறிமாவோவே. இந்திரா காந்தி இந்தியாவின் பிரதமராகப் பதவியேற்றபோது இந்தியாவில் புதிய யுகமொன்று ஆரம்பமாகியுள்ளதாக நாமெல்லோரும் நம்பினோம். அவர் இலங்கைக்கு மூன்று நான்கு தடவைகள் பயணம் மேற்கொண்டபோதே அவர் குறித்த எமது நம்பிக்கை கை நழுவப் போகிறது என்பதைப்

(தொடர்ச்சி)

புரிந்து கொண்டேன். சிறிமாவோ அரசு நாடாளுமன்றத்தின் ஆயுள்காலத்தை நீடித்தமை போன்றே இந்திரா காந்தியும் இந்தியாவில் செயற்பட்டார். அதே போன்று அவசரகாலச் சட்டத்தின் கீழ் நாட்டை நிர்வகிக்க இந்திராகாந்திக்கு வழி காட்டிக்கொடுத்ததும் சிறிமாவோவே. தமது மகன் அனுராவை அரசியலுக்குள் சிறிமாவோ இணைத்துக் கொண்டமை போன்றே இந்திராகாந்தியும் மகன் ராஜீவ் காந்திக்கு அரசியல் ஈடுபாட்டை ஏற்படுத்தி பயிற்றுவித்தார். சிறிமாவோ தாம் திரித்த கயிற்றை இந்திராவுக்கும் வழங்கி அவரது போக்கை மாற்றி அவரது அரசியல் பின்னடைவுக்கு வழிவகுத்து வைத்தார்" எனத் தெரிவித்திருந்தார். நாளாவட்டத்தில்சுதந்திரக்கட்சிக்கும் சிறிமாவோவுக்கும் மக்கள் மத்தியிலிருந்த ஆதரவை நலிவுபடுத்தி வைப்பதில் பிரேமதாச வெற்றி கண்டார். அந்த வகையில் கடைசியில் இந்த நாட்டின் அரசியல் மற்றும் ஐ.தே.கட்சியின் வரலாறுகளை பிரேமதாச மாற்றியமைத்தார் எனக்கொள்வது தவறல்ல.



**குற்றச்சாட்டுக்களுக்கு முகம்கொடுத்த மோடியும் பிரேமதாசவும்**

அந்த வகையான அரசியல் அணுகுமுறையையே மோடியும் கைக்கொண்டு அதில் வெற்றியும் கண்டார் எனக் கூறுவது நியாயமானதே. பிரேமதாச வீடற்றோருக்கு வீடுகள் அமைத்துக் கொடுத்த போது பலர் எள்ளி நகையாடினர். 'ஜனசவிய' திட்டத்தைக் கொண்டு வந்தபோது மக்களை வெறுமனே சோம்பேறிகளாக இருக்க விட்டு உண்ணக் குடிக்க வழிசெய்கிறார் எனக் கூறி நகைத்தனர். ஆடைத் தொழிற்சாலைகளை உருவாக்கியபோது வெள்ளைக்காரர்களுக்கு உள்ளங்கிகள் தைக்கச் செய்கிறார் எனக் கேலி செய்தனர். பிரேமதாச போன்றே மோடியும் இத்தகைய பல்வேறு குற்றச்சாட்டுக்களைச் சந்திக்க நேர்ந்தது.

"நாம் வணக்கஸ்தலங்களை உருவாக்குவதற்கு முன்னர் நாட்டின் ஏழை மக்களின் பாவனைக்காக கழிவறைகளைக் கட்டிக்கொடுப்பதே இன்றைய தேவை" என மோடி ஒரு தடவை கருத்து வெளியிட்டமை குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

1988ஆம் ஆண்டில் ஜே.ஆர்.ஜெயவர்த்தன ,பிரேமதாசவை அரசியலில் முன்னிலைப்படுத்தியமை போன்றே பாரதிய ஜனதாக் கட்சியின் மூத்த தலைவர் அத்வானி, இந்திய அரசியலில் மோடியை முன்னிலைப்படுத்தி ஜனதாக்கட்சியின் நிர்வாகத்தை ஏற்க வழிவகுத்துக்கொடுத்தார். 2014ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் இந்திய மக்களால் நன்கறியப்படாதிருந்த மோடி தமது அரசியல் செயற்பாடுகள் காரணமாக 2019ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் இந்திய நாட்டு மக்களது அபிமானத்துக்கும் மதிப்புக்கும் பாத்திரமான பிரதமராக மாற்றம் கண்டார். இலங்கையிலும் அதேபோன்று அரசியல் களநிலையே நிலவி வந்துள்ளது. பொதுத் தேர்தலில் ஐ.தே.கட்சி வெற்றியீட்டிய அதேவேளை சில ஆண்டுகளின் பின்னர் இடம்பெற்ற உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலில் தாமரைமொட்டுத் தரப்பு வெற்றியீட்டியது. புதுடில்லி தேர்தல் தோல்வியால் பாடம் கற்றுக்கொண்ட மோடி தமது அரசியல் நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டமையால் நாடாளுமன்றத் தேர்தலில் இரண்டாவது தடவையும் வெற்றிவாகை சூடிக்கொண்டார்.

இன்று உலகளாவிய ரீதியில் அரசியலில் இளம்தலைமுறையினருக்கும் புதிய கட்சிகளுக்கும் மக்கள் மத்தியில் ஆதரவு பெருகி வருகிறது. உலகின் பல நாடுகளில் இன்று இளம் தலைமுறையினர் வயதிலும் அனுபவத்திலும் குறைந்தவர்கள் அரசியல் தலைமைத்துவங்களைக் கைப்பற்றிச் சாதனை புரிந்துவருகின்றனர்.

இன்று இலங்கையில் பாரம்பரிய சிறிலங்கா சுதந்திரக்கட்சி தேய்ந்து போய் தாமரை மொட்டுத் தரப்புக்குள் ஐக்கியமாகி விட்டது.ஐ.தே.கட்சியும் சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும் ஏற்பட்ட நலிவு நிலை போன்ற நிலைக்கு உட்பட்டு சிதறிச் சின்னாபின்னமாகும் நிலையை அடைந்துள்ளது. தற்போது அது யானையாகவும், தொலைபேசியாகவும்(ஐக்கிய மக்கள் சக்தியாக) பிளவுற்று நிற்கிறது.

> இன்று இலங்கையில் பாரம்பரிய சிறிலங்கா சுதந்திரக்கட்சி தேய்ந்து போய் தாமரை மொட்டுத் தரப்புக்குள் ஐக்கியமாகி விட்டது. ஐ.தே. கட்சியும் சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்கும் ஏற்பட்ட நலிவு நிலை போன்ற நிலைக்கு உட்பட்டு சிதறிச் சின்னாபின்னமாகும் நிலையை அடைந்துள்ளது. தற்போது அது யானையாகவும், தொலைபேசியாகவும்(ஐக்கிய மக்கள் சக்தியாக) பிளவுற்று நிற்கிறது. தவறான பாதையை மாற்றிச் சரியான பாதையில் பயணத்தைத் தொடர்வதற்கான வாய்ப்பு இன்னமும் அற்றுப்போய் விடவில்லை. தவறான பாதையை விலக்கி சரியான பாதையைத் தெரிவுசெய்து பயணிக்க மீதமுள்ள சிறுகால அவகாசம் போதுமானது.

தவறான பாதையை மாற்றிச் சரியான பாதையில் பயணத்தைத் தொடர்வதற்கான வாய்ப்பு இன்னமும் அற்றுப்போய் விடவில்லை. தவறான பாதையை விலக்கி சரியான பாதையைத் தெரிவு செய்து பயணிக்க மீதமுள்ள சிறுகால அவகாசம் போதுமானது.

அரசியலரங்கில் ஒருவாரம் என்பது மிக நீண்டகாலமாகக் கருதத்தக்கது என 1964ஆம் ஆண்டிலேயே அப்போதைய பிரிட்டன் பிரதமர் வின்சன்ட் சேர்ச்சில் தெரிவித்திருந்தமை இங்கு நினைவூட்டத்தக்கது. புதிய அரசியல் பயணத்தை ஆரம்பித்துள்ள ஐக்கிய மக்கள் சக்தி தரப்பு சேர்ச்சிலின் இந்தக் கூற்றை நல்லதொரு பாடமாகக்கொண்டு செயற்பட இயலும்.




# யாழ்.பல்கலைக்கழகமும் துணைவேந்தர் பதவியும்

லயன் மு.தர்மலிங்கம் ஜே.பி.

16.05.2020 வெளியான ஈழத்தின் பல பத்திரிகைகளில் யாழ்.பல்கலைக் கழகத் துணைவேந்தர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டமை சம்பந்தமாக நியாயமானதும் முக்கியமானதுமான சில கருத்துக்களை முன்வைப்பது பொருத்தமாகும்.

பல்கலைக்கழகங்களில் துணைவேந்தர் பதவிக்கு மேலாக வேந்தர் என்ற மேலான மதிப்பார்ந்த பதவி பெயரளவில் உண்டு. இலங்கையின் குறிப்பிடத்தக்க வரலாற்றுப் பேராசிரியரும் கல்வெட்டு ஆய்வாளருமான பேராசிரியர் பத்மநாதன் யாழ்.பல்கலைக்கழக வேந்தர் பதவியை அலங்கரிப்பது பெருமையானதும் மிகப் பொருத்தமானதுமாகும்.

இருந்தும் துணைவேந்தரே பல்கலைக்கழகத்தை நிர்வகிப்பதில் பொறுப்புவாய்ந்த அதிகாரியாகச் செயற்படவேண்டியவராக உள்ளார். வேந்தரைப் போலவே துணைவேந்தரும் உயர் கல்வித் தகைமையும் அனுபவமும் உடையவராக இருப்பதோடு பல்கலைக்கழகத்தை சிறந்த முறையில் நிர்வகித்து உயர்வடையச் செய்வதில் வல்லவராகவும் இருக்க வேண்டும்.

அந்த வகையில் இலங்கைப் பல்கலைக்கழகமே இலங்கையின் தனியொரு பல்கலைக்கழகமாக இருந்தபோது அதன் முதலாவது துணைவேந்தராக பெரும் பணியாற்றிய இங்கிலாந்து நாட்டின் கல்விசார்,நிர்வாகம் சார் மேதாவியான சேர்.ஐவர் ஜென்னிங்ஸ் என்பவரும் அவரைத் தொடர்ந்து பதவி வகித்த இலங்கையரான புகழ்பூத்த மகப்பேற்று சத்திரசிகிச்சை நிபுணரும் தலைசிறந்த நிர்வாகியுமான சேர்.நிக்கலஸ் ஆட்டிகல என்பவரும் துணைவேந்தர்களாக ஆற்றிய அரும்பெரும் சேவைகள் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியவை.

யாழ்.பல்கலைக்கழகம் உருவாவதற்கு முன்னர் யாழ்.பல்கலைக்கழகக் கல்லூரியாக இருந்தபோது அதன் பணிப்பாளராகப் பணியாற்றிய பேராசிரியரும் மிகச் சிறந்த இலக்கியத் திறனாய்வாளருமான பேராசிரியர் கைலாசபதி யாழ்.பல்கலைக்கழகத்தின் தோற்ற வளர்ச்சியில் அளப்பரிய பங்காற்றிய பெருமகனாவார்.

யாழ்.பல்கலைக்கழகம் தோற்றம் பெற்ற பின் பல பெரியார்கள் துணைவேந்தர்களாக சேவையாற்றி உள்ளார்கள். அவர்களில் முதல் துணைவேந்தராகப் பெருந்தோற்றமும் பெருமனதும் கொண்ட தமிழ்ப் பேராசிரியர் சு.வித்தியானந்தனும், பொறியியல் பேராசிரியர் அ.துரைராசாவும் துணைவேந்தர்களாகக் கடமையாற்றிய காலம் சிறப்பானதாகும். அவ்வாறே இன்னும் சிலர் சிறப்பாகவே பணியாற்றியுள்ளனர். இருந்தும் பல நியமனங்கள் அறிவியலைப் புறந்தள்ளி அரசியல் சார்ந்து கல்விப் புலத்தைக் கொச்சைப்படுத்தியமை வெளிப்படையானதும் கவலைக்குரியதுமாகும்.

துணைவேந்தர் பதவிப் போட்டியாளர்களுக்குப் பல்கலைக்கழகப் பேரவையினர் முதலில் வாக்களிக்கின்றனர். ஆகக் கூடுதல் வாக்குகள் பெறும் மூன்று வேட்பாளர்களின் பெயர்களும் பெற்ற வாக்குகளும் பேரவையினால் மானியங்கள் ஆணைக்குழுவுக்கு அனுப்பப்படுகின்றன.

மூவரில் ஒருவரை மானியங்கள் ஆணைக்குழு ஜனாதிபதியின் பரிந்துரையின்படி தேர்ந்தெடுத்து துணைவேந்தராக நியமிக்கப்படுகின்றார். கூடுதல் வாக்குகள் பெற்றவரையே தெரிவுசெய்ய வேண்டியது ஜனாதிபதியின் தலையாய கடமையும் ஜனநாயகமும் ஆகும். ஆனால் அநேக சந்தர்ப்பங்களில் குறைந்த வாக்குப் பெற்றவர்களே துணைவேந்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டமை யாவரும் அறிந்ததே. சிறி. சற்குணராசா என்ற கணிதப் பேராசிரியர் மிகக் கூடுதலான வாக்குகளைப் பெற்றும், ஒரு தடவை அல்ல இரு தடவைகள் துணை வேந்தர் பதவியில் இருந்து புறந்தள்ளப்பட்டமைக்கு என்ன காரணம் என்பது புரியாத புதிராகவே உள்ளது.

தற்போது பேராசிரியர் கந்தசாமி தகுதி வாய்ந்த அதிகாரியாக உள்ளார். இவருக்கு முன்னர் துணைவேந்தராக இருந்த பேராசிரியர் விக்கினேஸ்வரனின் பதவி ஏன் பறிக்கப்பட்டது? துணைவேந்தர் பதவிக்கு பதிலாக தகுதி வாய்ந்த அதிகாரி பதவி ஏன் உருவாக்கப்பட்டது? என்பவற்றுக்கு இன்னும் விடை கிடைத்தபாடில்லை. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பதவியானது குளறுபடியான பதவியாக மாறிவிட்டது. இதனால் பல்கலைக்கல்வியும் பாதிக்கப்பட்டுள்ளது. பல்கலைக்கழகத் துணைவேந்தர் தெரிவானது கபடநாடகமின்றி வாக்குகளின் அடிப்படையில் ஜனநாயக முறையில் இடம்பெறவேண்டும். துணைவேந்தர் நியமனத்தை சீர் செய்வதற்கு யாழ்.பல்கலைக்கழக அதிகாரிகளை ஈடுபடுத்துவது பொருத்தமற்றதாகவே தெரிகிறது.

இந்த இக்கட்டான நிலையில் யாழ்.பல்கலைக்கழகத்துக்கு அப்பால் சர்வமதப் பெரியார்கள்,புத்திஜீவிகள்,கல்வியாளர்கள் இனியாவது சரியானதும் நியாயமானதுமான துணைவேந்தர் நியமனமொன்றை உருவாக்குவதற்கு யாழ்.பல்கலைக்கழக நிர்வாகத்துடனும் மானியங்கள் ஆணைக்குழுவினருடனும் கலந்துரையாடி ஜனாதிபதியிடம் கோரிக்கை வைப்பது சிலவேளைகளில் பயனளிக்கலாம்.

## எம்.சி.சி. உடன்படிக்கை விவகாரம்:

# அமைச்சர்களுக்கு மேலும் இரு வாரங்கள் அவகாசம்

கொழும்பு, ஜூலை 9

எம்.சி.சி. உடன்படிக்கை குறித்து மீளாய்வு செய்வதற்காக நியமிக்கப்பட்ட குழுவின் இறுதி அறிக்கை தொடர்பில் தமது நிலைப் பாட்டை முன்வைப்பதற்கு அமைச்சர்களுக்கு ஜனாதிபதியால் மேலும் இரு வாரங்கள் கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

அமைச்சரவை இணைப்பேச்சாளரான அமைச்சர் பந்துல குணவர்தன அரச தகவல் திணைக்களத்தில் இன்று இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே இதனைத் தெரிவித்தார்.

எம்.சி.சி மீளாய்வுக்குழுவின் அறிக்கை தொடர்பில் அடுத்த அமைச்சரவைக் கூட்டத்தில் அமைச்சர்கள் தமது கருத்துகளை அறிக்கையாக சமர்ப்பிக்கலாம் என்று அமைச்சர் பந்துல குணவர்தன கடந்த 2ஆம் திகதி அறிவித்திருந்தார்.

இந்த நிலையில் நேற்றைய தினம் இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் கருத்துகள் முன்வைக் கப்பட்டனவா என ஊடகவியலாளர் ஒருவர் கேள்வி எழுப்பியிருந்தார்.

அதற்குப் பதிலளித்த அமைச்சர், " எம்.சி.சி. உடன்படிக்கை தொடர்பில் மீளாய்வு செய்வதற்காக நியமிக்கப்பட்ட குழுவின் இறுதி அறிக்கை தொடர்பான எனது நிலைப்பாட்டை அமைச்சரவையின் செயலாளருக்கு வழங்கியுள்ளேன். இது தொடர்பில் மேலும் ஆராயவேண்டியுள்ளது என அமைச்சர்கள் எடுத்துரைத்தனர். இதன்படி இருவாரங்கள் அவகாசம் வழங்குவதற்கு ஜனாதிபதி தீர்மா னித்தார். எது எப்படியிருந்தாலும் நாட்டின் அரசமைப்பை மீறும் வகையில், தேசிய பாதுகாப்பு, பொருளாதாரம் ஆகியவற்றுக்கு அச்சுறுத்தலான எந்தவொரு உடன்படிக்கையிலும் கைச்சாத்திடமாட்டோம் என்ற நிலைப்பாட் டில் அரசாங்கம் உறுதி யாகவே இருக்கின்றது." என்றார். (ரி1-44)

ஆஸ்திரேலியாவுக்கான

## புதிய கொன்சியுலர் பிரதமரால் நியமிப்பு

கொழும்பு, ஜூலை 10

ஆஸ்திரேலியாவின் சிட்னி, நியூ சவுத்வேல்ஸ் மற்றும் குயின்ஸ்லண்ட் ஆகிய மாநிலங்களுக்கான இலங்கையின் கொன்சியுலர் ஜெனரலாக லக்ஷமன் ஹுணுகல்லே நியமிக்கப் பட்டுள்ளார். அவர் கடமையைப் பொறுப்பேற்பதற் காக புறப்பட்டுச் செல்வதற்கு முன்னர் கடந்த செவ்வாய்க்கிழமை பிரதமர் மஹிந்த ராஜபக்சவை சந்தித்தார்.

லக்ஷமன் ஹுலுகல்லே தேசிய பாதுகாப்புக்கான ஊடக மத்திய நிலையத்தின் பணிப்பாளர் நாயகமாகவும், அரச சார்பற்ற நிறுவனங்கள் தொடர்பான செயலாளர் அலுவலகத்தின் பணிப்பாளர் நாயகமாகவும், தேசிய கால்நடை அபிவிருத்தி சபையின் உப தலைவராகவும், இலங்கை கொமர்ஷல் வங்கியின் பணிப்பாளராகவும், வோடர்ஸ் எட்ஜ் ஹோட்டலின் பணிப்பாளராகவும் கடமையாற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ரி1)



## மின்தடை

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக வடக்கின் பல பகுதிகளில் மின்சாரம் தடைப்படும் என்று அறிவிக்கப்பட்டது. இதன்படி நாளை சனி காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணிவரை **யாழ். மாவட்டத்தில்,**

விளாத்தியடி உரும்பிராய், மருதனார்மடம் விவசாய பண்ணை, அண்ணா பண்ணை, இணுவில் அங்கிலிப்பாய், கொக்கன்வளவு, இணுவில் ஆச்சிரமம், பூவோடை இந்து மயானப் பிரதேசம், உரும்பிராய், இராஜ வீதி இருபாலை வீதி, இராஜ வீதி கோப்பாய், கோப்பாய் கல்வியியற் கல்லூரி, கோப்பாய் இராணுவ முகாம், கோப்பாய் கிருஸ்ணன் கோவிலடி, வடலியடைப்பு, தொல்புரம், வழக்கம்பரை, கள்ளவேம்படி, சுழிபுரம், பததனைக்கேணியடி, பிரான்பற்று, பண்டத்தரிப்பு, இடும்பன், சில்லாலை, சாந்தை, மாதகல், காஞ்சிபுரம், யம்புகோளப்பட்டினம், குசுமாந்துறை, காட்டுப்புலம், இளவாலை, பெரியவிளான், மரீசன்கூடல், சேந்தங்குளம், மெய்கண்டான் பாடசாலை, யம்புகோளப்பட்டின விடுதி ஆகிய இடங்களிலும்,

**வவுனியா மாவட்டத்தில்** கோவில் குளத்திலிருந்து சிதம்பரபுரம் வரை, வவுனியா நகரம் ஒருபகுதி, பஸரா் வீதி 1ம் குறுக்குத் தெரு, 2ம் குறுக்குத் தெரு, இலுப்பையடி, சூசைப்பிள்ளையார்குளம், கொறவப்பொத்தானை வீதி, றம்பைக்குளம், கொட்டல் ஓவியா, எஸ்.வி.ஆர். அரிசி ஆலை, இராணி அரிசி ஆலை, லங்கர் அரிசி ஆலை, கிறிஸ்தவ குளம், புளியங்குளம், அரசடிகுளம், காந்திநகர், வாரிக்குட்டியூர், சங்கரபுரம் ஆகிய இடங்களிலும், மேலும் **கிளிநொச்சி பிரதேசத்தில்** காலை 9.30 மணியிலிருந்து மதியம் 1 மணிவரை ஒலுமடு ஒருபகுதி, சின்னசாளம்பன், மணவாளப்பட்டு முறிப்பு ஆகிய இடங்களிலும் **மன்னார் பிரதேசத்தில்** சீனத் துறை முகம், வங்காலை ஒரு பகுதி, முள்ளிப்பழம், தள்ளாடி, கடலேரி வீதி, சாந்திபுரம், Southbar, தரவன் கோட்டை, தள்ளாடி இராணுவ முகாம், டயலொக் தொலைத்தொடர்பு நிலையம், மாந்தை உப்பு உற்பத்தி நிலையம் ஆகிய இடங்களிலும் 9 மணியிலிருந்து மாலை 3 மணிவரையும் மேலும் மன்னார் பிரதேசத்தில் சிறுநாவற்குளத்திலி ருந்து தலைமன்னார் வரை, தலைமன்னார் கடற்படைமுகாம், தலைமன்னார் Palmyra house, கூல்மென் ஐஸ் தொழிற்சாலை, அந்தோனிப்பிள்ளை ஐஸ் தொழிற்சாலை, பேசாலை ஐஸ் தொழிற்சாலை, வங்காலை ஐஸ் தொழிற்சாலை, Palmyrah house கரைசல், எருக்கலம்பிட்டி நீர்ப்பாசன சபை, New Silk Road, தோட்டவெளி, Timex ஆடைத்தொழிற்சாலை, Industrial Estate, மன்னார் வைத்தியசாலை, ஆவேமரியா ஐஸ் தொழிற்சாலை, கீரி ஐஸ் தொழிற்சாலை, இலங்கை போக்குவரத்துச் சபை, மன்னார் நீர்ப்பாசனத் திணைக் களம், இலங்கை தொலைத்தொடர்பு நிலையம், அரசாங்க அதிபர் அலுவலகம், பூட் சிற்றி, தள்ளாடி இராணுவ முகாம், டயலொக் தொலைத்தொடர்பு நிலையம், மாந்தை உப்பு உற்பத்தி நிலையம் ஆகிய பிரதேசங்களில் **காலை 6.00 மணியிலிருந்து மாலை 3.00 மணி வரையான காலப் பகுதியில் காலையில் இரண்டு மணித்தியாலங்களும் பிற்பகலில் இரண்டு மணித்தியாலங்களும்** மின்சாரம் தடைப்படும் என்று மின் பொறியியலாளர் அனுசா செல்வராசா அறிவித்துள்ளார்.

## இன்றைய நாள்

**மேடம்:** உஉத்யோகத்தர்களுக்கு உழைப்புக்கு ஏற்ற பலன் நிதானமாக கிடைக்கும். பெண்களுக்கு திடீர் செலவு உண்டாகலாம். வியாபாரத்தில் உங்களின் செல்வாக்கு உயரும்.

**இடபம்:** அலுவலக நண்பர்களை அனுசரித்துச் சென்றால் பலவகைகளில் நன்மைகளை பெறலாம். மனைவியின் பாசம் நிறைந்த அன்பில் மகிழ்வீர்கள்.

**மிதுனம்:** கடந்த சில நாள்களாக இருந்த மனச்சோர்வு நீங்கி புத்துணர்ச்சி பெருகும். பிள்ளைகளிடம் விட்டுக் கொடுத்துச் செல்வது நல்லது. பெண்கள் இஷ்ட தெய்வ வழிபாட்டை நடத்துவர்.

**கடகம்:** எந்த நேரத்தில் எதைப் பேச வேண்டும் என்பதை யோசித்துப் பேசுங்கள். குடும்பத்தினருடன் விரும்பிய உணவு உண்டு மகிழ்வீர்கள். கலைத்துறையினருக்கு மறைமுக விமர்சனங்கள் வரக்கூடும்.

**சிம்மம்:** கலைத் துறையினர் அனுபவ அறிவைப் பயன்படுத்தி வெற்றி காண்பர். சாதுர்ய பேச்சினால் அலுவலகத்தில் உள்ள நிலுவைப் பணிகளை முடிப்பீர்கள்.

**கன்னி:** தொழில் சார்ந்த விஷயங்களில் சாதகமான பலன்களை பெறுவீர்கள். குடும்பத்தில் கலகலப்பான சூழல் காணப்படும். உறவினர் மூலம் நல்ல தகவல் வரும்.

**துலாம்:** சிலருக்கு சரியான நேரத்தில் உதவிசெய்வீர்கள். தொழில், வியாபாரம் செழிக்க தேவையான மாற்றத்தை செய்வது நல்லது. பணவரவுடன் நன்மையும் அதிகரிக்கும்.

**விருச்சிகம்:** கடின உழைப்பால் நற்பெயர் எடுப்பீர்கள். ஆன்மிகத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். வியாபாரத்தைப் புது இடத்திற்கு மாற்றத் தீர்மானிப்பீர்கள்.

**தனுசு:** குடும்பத்தினருடன் வீண் விவாதங்கள் வந்து போகும். பழைய கடன் பிரச்னைகளை குறைப்பீர்கள். கலைத்துறையினருக்கு போட்டிகள் அதிகரிக்கும்.

**மகரம்:** வியாபாரத்தில் கூடுதலாக உழைத்து லாபம் பெறுவீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் நிம்மதி குறைந்தாலும் பெரிய பிரச்சினை இருக்காது.

**கும்பம்:** பெண்களுக்கு நற்செய்தி ஒன்று காத்திருக்கிறது. பணவரவு அதிகரிப்பதால் குடும்பத் தேவையை நிறைவேற்றுவீர்கள்.

**மீனம்:** அலுவலகத்தில் இதுவரை இருந்த தடைகள் அகலும். உறவினர்கள் மத்தியில் உங்களுக்கு இருந்த அவப்பெயர் நீங்கும். பெண்களுக்கு தாழ்வு மனப்பான்மை நீங்கி உற்சாகம் பிறக்கும்.

# சிறந்த நிர்வாகக் கட்டமைப்பிருந்தால் கூட்டுறவு கொடிகட்டிப் பறக்கும்

## வடக்கு ப.நோ.கூ.ச.சமாசத்தின் தலைவர் செல்வின் தெரிவிப்பு

**யாழ்ப்பாணம், ஜூலை 10**

**வடக்கு மாகாணத்தில் உள்ள கூட்டுறவுச் சங்கங்கள் தமது வளங்களைச் சரியான முறையில் பயன்படுத்தினால் அவை நட்டத்தில் செயற்பட வேண்டிய அவசியமில்லை. இவற்றிற்கு எல்லாம் தற்போதைய நிலையில் வினைத்திறன் மிக்க நிர்வாகக் கட்டமைப்பு மிக அவசியமானது என்று வடக்கு மாகாண பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் தலைவரும், இலங்கை நிர்வாக சேவையின் ஓய்வுபெற்ற அதிகாரியுமான இறேனியஸ் செல்வின் தெரிவித்தார்.**

யாழ்ப்பாணம், வீரசிங்கம் மண்டபத்தில் அண்மையில் நடைபெற்ற சர்வதேச கூட்டுறவாளர் தின விழாவில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கின் கூட்டுறவுத் துறையைப் பார்க்கும் போது மிகவும் கவலைக்குரிய விடயமாக இருக்கின்றது. ஏன் இந்த கூட்டுறவு அமைப்புக்கள் நட்டத்தில் செயற்பட வேண்டும். தற்போது பார்க்கப் போனால் எல்லாக் கூட்டுறவுச் சங்கங்களிலும் போதுமான வளங்கள் உள்ளன. அவ்வாறான வளங்களை உரிய முறையில் பயன்படுத்தினால் இந்த கூட்டுறவு கொடி கட்டிப் பறக்கும். இவற்றுக்கு எல்லாம் உரிய வினைத்திறன் மிக்க நிர்வாகக் கட்டமைப்புக்களை உருவாக்க வேண்டும். கூட்டுறவுச் சங்கங்களில் அங்கத்தவர்கள் போதுமான அளவு இணைந்திருக்கின்றனர். கல்வியில் தேர்ச்சி பெற்றவர் மற்றும் அறிந்தவர்கள் கூட்டுறவு நிர்வாகக் கட்டமைப்பில் இணைக்கப்பட வேண்டும். இவ்வாறு கல்வியில் தேர்ச்சி பெற்றவர்கள் இணைக்கப்படுவதன் ஊடாகவே கூட்டுறவின் வளங்களை உரிய முறையில் பயன்படுத்த முடியும். இவ்வாறான நிலையில் கூட்டுறவுப் பணியாளர்கள் மற்றும் பொது மக்கள் பாதிக்கப்படுகின்றனர். கூட்டுறவுச் சங்கங்கள் தமது வளங்களை எதிர்காலத்தில் சிறந்த வழிகாட்டல்கள் மூலம் பயன்படுத்துவன் மூலமே அவர்கள் அதிக நன்மைகளைப் பெற்றுக்கொள்ள முடியும். குறிப்பாக வன்னிப் பெரு நிலப்பரப்பில் அதிகளவில் நெல் பயிரிடப்படுகின்றன. முல்லைத்தீவில் கூடுதலாக கடலுணவு பிடிபடுகின்றன. யாழ்ப்பாணத்தில் மரக்கறி வகைகள் பயிரிடப்படுகின்றன. இந்த உள்ளூர் உற்பத்தி வளங்கள் எல்லாம் எங்கே செல்கின்றன. இவையெல்லாம் உரிய முறையில் சந்தைப்படுத்த வேண்டும். மக்களைச் சென்றடைய வேண்டும். வடக்கில் உள்ளூர் உற்பத்தி வளங்களுக்கு கூட்டுறவு முக்கிய இடம்கொடுக்க வேண்டும். இந்த உள்ளூர் உற்பத்தியை உரிய முறையில் சந்தைப்படுத்தவும் கூட்டுறவு முக்கிய ஆர்வம் காட்டுவது காலத்தின் கட்டாயமாகும் - என்றார். (ஐ-17)

## ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல்

பருத்தித்துறை, ஜூலை 10

முன்பள்ளிகளை மீளத் திறப்பது தொடர்பில் வடமராட்சி கல்வி வலய முன்பள்ளி ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல் நேற்றுமுன்தினம் பருத்தித்துறை பிரதேச சபை மண்டபத்தில் நடைபெற்றது.

பருத்தித்துறை வலயஅலுவலக முன்பள்ளிகளுக்கான உதவிக்கல்விப்பணிப்பாளரின் ஏற்பாட்டில் நடைபெற்ற கலந்துரையாடலில் 50 முன்பள்ளி ஆசிரியர்கள் கலந்துகொண்டனர்.

இதில் கருத்துரை வழங்கிய பருத்தித்துறை பொதுச் சுகாதார பரிசோதகர் ஆ.ஜென்சன் றொனால்ட் "முன்பள்ளிகளில் கோவிட் 19 முற்பாதுகாப்பை மேற்கொள்ளுவது மிகவும் சவாலான விடயம். எனவே ஆசிரியர்கள் முன்மாதிரியாக கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை முன்பள்ளிகளில் கடைப்பிடிக்கும்போதே அதை குழந்தைகளும் பார்த்து சரியாகப் பின்பற்றுவார்கள். ஆசிரியர்கள் பெற்றோரினதும் சமூகத்தினதும் கூடிய ஈடுபாட்டைப் பெற்று கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும். சரியான நேரத்தில் சரியான விதத்தில் முகக் கவசம் பாவித்தல், கைகளை இரண்டு மணித்தியாலங்களுக்கொரு தடவை சவர்க்காரமிட்டு இருபதுசெக்கன்கள் கழுவுதல் மற்றும் எந்த ஒரு வேளையிலும் ஒருமீற்றருக்கு குறையாமல் சமூக இடைவெளியைப் பேணவேண்டும்" என வலியுறுத்தினார்.

இதில் மேற்பரப்புகளை கிருமி நீக்கம் செய்தல் , தனிமைப்படுத்தும் அறையைப் பேணுதல், சமூக இடைவெளி, கைகளைக் கழுவுதல் மற்றும் அவசர நிலைமைகளின்போது தொழிற்படும் விதம் பற்றியும் விளக்கங்கள் வழங்கப்பட்டன. (ஐ-9)

## பயிற்சி பெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ்கள்

கொடிகாமம், ஜூலை 10

விடிவெள்ளி சமூக மேம்பாட்டு அமையத்தால் நடத்தப்பட்ட தையல் பயிற்சியை நிறைவு செய்த மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வு நேற்றுமுன்தினம் சாவகச்சேரி ஐயா கடையடியில் அமைந்துள்ள தையற்பயிற்சி ஆசிரியரின் இல்லத்தில் ஆசிரியர் சிவானந்தம் ராசாத்தி தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் ஐக்கிய மக்கள் சக்தியின் யாழ்ப்பாண, கிளிநொச்சி மாவட்ட வேட்பாளரும் ஊடகவியலாளருமான திருமதி உமாச்சந்திரா பிரகாஷ், விடிவெள்ளி சமூக மேம்பாட்டு அமையத்தின் முதன்மை இயக்குநர் க.அருந்தவபாலன், சாவகச்சேரி நகரசபை உபதவிசாளர் அ.பாலமயூரன் மற்றும் பயிற்சி பெற்ற மாணவர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

தையற்பயிற்சியை நிறைவுசெய்த 60 மாணவர்களுக்கான சான்றிதழ்கள் இதன்போது வழங்கப்பட்டன. (ஐ-159)



வதிரி தமிழ் மன்றத்தால் தேவரையாளி இந்துக் கல்லூரியின் கொரோனா பாதுகாப்பு அறைக்கு தேவையான 10 ஆயிரம் ரூபா பெறுமதியான உபகரணங்கள் நேற்று வழங்கப்பட்டன. (ஐ-422)



## தனிமைப்படுத்தப்பட்ட 164 பேர் விடுவிப்பு

வவனியா, ஜூலை 10

வெளிநாடுகளில் இருந்து இலங்கை திரும்பிய நிலையில் வவுனியா பெரியகட்டு மற்றும் பம்பைமடு தனிமைப்படுத்தல் முகாம்களில் தங்கவைக்கப்பட்ட 164 பேர் நேற்றுமுன்தினம் விடுவிக்கப்பட்டனர்.

கொரோனாத் தொற்றுக் காரணமாக வெளிநாடுகளில் சிக்கித்தவித்த இலங்கையர்களை நாட்டுக்கு அழைத்து வரும் செயற்பாடுகள் அரசினால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அந்தவகையில் கடந்த மாதம் 27 ஆம் திகதி அமெரிக்கா, பிரித்தானியா, சிங்கப்பூர், பங்களாதேஷ் போன்ற நாடுகளிலிருந்து அழைத்து வரப்பட்ட பலர் வவுனியா பெரியகட்டு, மற்றும் பம்பைமடு தனிமைப்படுத்தல் முகாம்களில் தங்கவைக்கப்பட்டனர்.

அவர்கள் 14 நாள்கள் தனிமைப்படுத்தல் காலத்தை நிறைவு செய்தநிலையில், பெரியகட்டு முகாமிலிருந்து 72 பேரும், பம்பைமடு முகாமிலிருந்து 92 பேருமாக மொத்தம் 164 பேர் அவர்களது சொந்த இடங்களான புத்தளம், காலி, மாத்தறை, களுத்துறை போன்ற பகுதிகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டனர். (ஐ-110)

## கொரோனா விழிப்புணர்வு நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 10

கொரோனாவைரஸ் தொற்றில் இருந்து பாதுகாக்க பொதுமக்கள் சுகாதார நடைமுறைகளைத் தொடர்ந்தும் கடைப்பிடிக்குமாறு அறிவிக்கப்பட்டு வருகின்றது.

யாழ்ப்பாண மாநகர சுகாதாரப் பகுதியால் யாழ். நகரப்பகுதியில் நேற்று முன்தினம் ஒலிபெருக்கி மூலம் அறிவிப்பு விடுக்கப்பட்டது.

கொரோனாத் தொற்றுத் தொடர்பில் மக்கள் அலட்சியமாக இருக்க வேண்டாம், கட்டாயம் அனைவரும் முகக் கவசம் அணிதல் வேண்டும், அடிக்கடி கைகளைக் கழுவுதல், சமூக இடைவெளியைப் பேணுதல் உள்ளிட்ட சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றுமாறும் அறிவிக்கப்பட்டது. (ஐ-17)

## யாழ்.கல்வி வலய ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜூலை 10

யாழ்ப்பாணம் கல்வி வலயத்துக்கு உட்பட்ட தரம் 11 இல் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல் இன்று வெள்ளிக்கிழமை தொடக்கம் எதிர்வரும் 31ம் திகதி வரை பிற்பகல் 2.30 மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் இன்று வெள்ளிக்கிழமை, கணித பாட ஆசிரியர்களுக்கும், 16ஆம் திகதி ஆங்கிலம் மற்றும் ஆங்கில இலக்கியப் பாட ஆசிரியர்களுக்கும் 17ஆம் திகதி சமய பாட ஆசிரியர்களுக்கும், 20ஆம் திகதி வணிகக் கல்வியும் கணக்கீடும் மற்றும் முயற்சியாண்மை பாட ஆசிரியர்களுக்கும், 21 ஆம் திகதி கர்நாடக சங்கீதம் மற்றும் நாடகமும் அரங்கியல் பாட ஆசிரியர்களுக்கும், 23 ஆம் திகதி பரத நாட்டியம் மற்றும் சித்திரப் பாட ஆசிரியர்களுக்கும், 24 ஆம் திகதி தகவல் தொடர்பாடல் மற்றும் சுகாதாரமும் உடற்கல்வியும் பாட ஆசிரியர்களுக்கும், 27ஆம் திகதி மனைப்பொருளியல் பாட ஆசிரியர்களுக்கும், 28 ஆம் திகதி விஞ்ஞான பாட ஆசிரியர்களுக்கும், 30 ஆம் திகதி வரலாறு, புவியியல் மற்றும் குடியியல் பாட ஆசிரியர்களுக்கும், 31 ஆம் திகதி தமிழ், தமிழ் இலக்கியம் மற்றும் இரண்டாம் மொழி சிங்கள பாட ஆசிரியர்களுக்கும் நடைபெறவுள்ளன.

(ஐ-422)

## வீதி விளக்குகள் பொருத்தல்

யாழ்ப்பாணம், ஜூலை 10
நல்லூர் பிரதேச சபைக்கு உட்பட்ட 12 வட்டாரங்களிலும் வீதி விளக்குகள் பொருத்தும் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு வட்டாரத்திலும் 16 விளக்குகள் என்ற அடிப்படையில் மொத்தம் 192 விளக்குகள் இவ்வாறு பொருத்தப்படவுள்ளன என்று சபைத் தவிசாளர் த.தியாகமூர்த்தி தெரிவித்தார். இதேவேளை திருநெல்வேலிச் சந்தைக்கு வலுக் கூடிய மின் விளக்குகள் பொருத்தப்படவுள்ளன (ஜ-17)

## மாமாங்கேஸ்வர ஆலயத்தில் 50 பேருக்கு மட்டும் அனுமதி

மட்டக்களப்பு, ஜூலை 10
மட்டக்களப்பு அமிர்தகழி மாமாங்கேஸ்வர ஆலய வருடாந்தப் பெருந்திருவிழாவின் போது இம்முறை ஆலயத்துக்குள் ஒரே தடவையில் 50 பக்தர்கள் உள்வாங்கப்படவுள்ளனர். கொரோனாத் தொற்றைக் கட்டுப்படுத்தும் நோக்கில் சுகாதாரத் திணைக்களத்தின் ஆலோசனைக்கு அமைய இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.
முதலில் உள்வாங்கப்படும் பக்தர்கள் தங்கள் நேர்த்திக்கடன்களை நிறைவேற்றி வெளிச் சென்ற பின்னர் அடுத்த 50 பக்தர்கள் கிரமமாக உள்வாங்கப்படவுள்ளனர் என்று ஆலய நிர்வாகம் அறிவித்துள்ளது. (ஐ)

# மஞ்சள் இறக்குமதி தடையை நீக்குங்கள்

### மஹிந்தவுக்கு யாழ். வணிகர் கழகம் கடிதம்

**யாழ்ப்பாணம், ஜூலை 10**

**மஞ்சளுக்கான இறக்குமதித் தடையை நீக்கித் தாராளமாக மஞ்சள் கிடைப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்யுமாறு தெரிவித்து யாழ்ப்பாணம் வணிகர் கழகத்தினரால், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு கடிதம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.**

அந்தக் கடிதத்தில் மேலும் உள்ளதாவது; நாட்டில் ஏற்பட்ட கொரோனாத் தாக்கத்துக்கு முன்பு மார்ச் மாதம் வரை, மஞ்சள் 400 ரூபாவாகவும், உழுந்து 300ரூபாவாகவும், விற்பனை செய்யப்பட்டு வந்தது. தற்போது அதன் விலைகள் மிக அதிகரித்து மஞ்சள் ஒருகிலோ 3ஆயிரம் ரூபாவாகவும், உழுந்து ஒரு கிலோ 600 ரூபாவாகவும் விற்கப்படுகிறது. அத்துடன் மஞ்சள் இறக்குமதி தடைசெய்யப்பட்டுள்ளதாகவும் அறிகிறோம். நாட்டில் தற்போது மஞ்சள் போதியளவு உற்பத்திசெய்யப்படவில்லை. மஞ்சள் உற்பத்தியில் தன்னிறைவை அடையும் வரை மஞ்சளைத் தடைசெய்யாது இறக்குமதிக்கு அனுமதிக்கும்படி தங்களைத் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம். தற்போது ஏற்பட்டுள்ள கொரோனாத் தாக்கத்தின் எதிரொலியாக பொதுமக்கள் நோய் எதிர்ப்பு சக்தியுள்ள மஞ்சளை அதிகளவில் பயன்படுத்துகின்றனர். ஆகவே இவ் விடயத்தையும் கருத்திலெடுத்து மஞ்சளுக்கான இறக்குமதித் தடையை நீக்கித் தாராளமாக மஞ்சள் கிடைப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்யுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

அதேவேளை உழுந்தும் தடைசெய்யப்பட்டுள்ளதாக அறிகிறோம். கடந்த மார்ச் மாதம் விற்பனை செய்த விலையிலிருந்து 100 வீதமாக அதிகரித்து சுமார் 600 ரூபா அளவில் விற்கப்படுகிறது. தற்போது நாட்டில் உழுந்து உற்பத்தி போதியளவில் இல்லை.
அத்துடன் தமிழர்களின் பாரம்பரிய உணவு வகையான வடை, தோசை, இட்லி போன்ற உணவுகளுக்கு அத்தியாவசியமானதாகும். சாதாரண ஏழை மக்கள் இதனால் பாதிக்கப்படுகின்றனர். ஆகையால் இதன் இறக்குமதித்தடையை நீக்கி பொது மக்களுக்கு இவை குறைந்த விலையில் கிடைக்கக் கூடியதான ஏற்பாடுகளைச் செய்துதருமாறு தங்களைக் கேட்டுக்கொள்கின்றோம். நாளுக்குநாள் இவற்றின் விலைகள் அதிகரித்துச்செல்வதனால் பொதுமக்கள் பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள். எனவே மேற்குறிப்பிட்ட இரண்டு விடயங்களையும், கவனத்தில் எடுத்து பொதுமக்களுக்கு தட்டுப்பாடின்றியும், குறைந்த விலையிலும் மஞ்சள் மற்றும் உழுந்து கிடைக்க தாங்கள் ஆவன செய்வீர்கள் என்று எதிர்பார்க்கிறேன் என்றுள்ளது. (ப)

## வீட்டில் கஞ்சா வியாபாரம் குடும்பஸ்தர் மறியல்

முல்லைத்தீவு, ஜூலை 10
ரொபிப் பக்கெற்போன்று சுற்றப்பட்டு வீட்டில் வைக்கப்பட்டிருந்த கஞ்சா மீட்கப்பட்டுள்ளதுடன். அந்த வீட்டில் கஞ்சா விற்பனையில் ஈடுபட்டார் என்று குற்றஞ்சாட்டப்பட்டு ஒருவர் கைது செய்யப்பட்டார்.
முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தேவிபுரம் கரித்தாஸ் குடியிருப்பு பகுதியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.
அந்தப் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் இருந்து கஞ்சா விற்பனை செய்யப்படுவதாக புதுக்குடியிருப்பு பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற தகவலையடுத்து புதுக்குடியிருப்புப் பொலிஸார் சந்தேகத்துக்குரிய குறித்த வீட்டைச் சோதனை செய்தனர். இதன்போது வீட்டுக்குள் தொலைக்காட்சிப் பெட்டிக்கு அருகில் ரொபிப் பக்கெற்போன்று சுற்றப்பட்டு சிறு குவளை ஒன்றிற்குள் போடப்பட்டிருந்த நிலையில் கஞ்சா மீட்கப்பட்டது.
கஞ்சா சுற்றப்பட்ட 11 ரொபிப் பக்கெற்கள் இவ்வாறு மீட்கப்பட்டன. அவற்றின் நிறை 10 கிராம் 820 மில்லிகிராம் எனத் தெரிவிக்கப்பட்டது. அந்த வீட்டில் வைத்து கஞ்சா விற்றார் என்ற சந்தேகத்தில் வீட்டின் உரிமையாளர் கைதுசெய்யப்பட்டார். அவர் முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டபோது, எதிர்வரும் 13 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டார். (ப-19)

## யாழ். மாநகரப் பகுதியை சுத்தமாக்கும் இராணுவம்

யாழ்ப்பாணம், ஜூலை 10
யாழ்ப்பாணம் மாநகரில் பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் கழிவுகளை அகற்றிச் சுற்றுச்சூழலைச் சுத்தப்படுத்தும் பணி எதிர்வரும் 12ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணி முதல் முன்னெடுக்கப்படவுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.
யாழ்ப்பாண மாவட்ட இராணுவக் கட்டளைத்தளபதி மேஜர்ஜெனரல் வணிகசூரிய தலைமையில் 250 படையினரின் பங்களிப்புடன் இவ்வாறு யாழ்.மாநகரை தூய்மைப்படுத்தும் பணி முன்னெடுக்கப்படவுள்ளது. ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு ஆரம்பமாகும் பணி காலை 9 மணிக்கு யாழ்ப்பாணம் கோட்டைக்கு முன்பாக இடம்பெறும் பிரதான நிகழ்வுடன் நிறைவுபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம் மாநகரில், தெரிவு செய்யப்பட்ட 9 பிரதான வீதிகள் மற்றும் பொதுமக்கள் பயன்படுத்தும் பொது இடங்களில் பிளாஸ்ரிக், பொலித்தீன் கழிவுப் பொருள்களை அகற்றி நகரைச் சுத்தப்படுத்தும் நோக்குடன் இந்தப் பணி சுழற்சி முறையில் முன்னெடுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ப)

# வடிகானில் கழிவு வீசினால் கடுமையாகச் சட்டம் பாயும்

### யாழ். மாநகர துணை முதல்வர் எச்சரிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 10
யாழ். மாநகரப் பகுதிகளில் பொறுப்பற்ற விதத்தில் கொட்டப்படும் கழிவுகளால் பொதுமக்கள் பெரும் சுகாதாரச் சீர்கேடுகளை எதிர்கொண்டுவருகின்றனர். இந்த விடயம் தொடர்பில் பொறுப்பற்ற விதத்தில் செயற்படுபவர்கள் இனங்காணப்பட்டு அவர்கள் மீது கடும் சட்டநடவடிக்கை எடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று யாழ்ப்பாண மாநகர பதில் முதல்வர் து. ஈசன் தெரிவித்தார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;
யாழ். நகரின் மத்தியில் தற்போது அனைத்து வடிகால்களும், துப்புரவு செய்யும் பணி இடம்பெற்று வருகிறது. இந்தப் பணியைத் துரிதகதியில் மேற்கொள்ளுமாறு மாநகர பொறியியலாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்கமைய மூன்று கட்டங்களாக துப்புரவுப் பணிகளை மேற்கொள்ள திட்டமிடப்பட்டு, இரண்டு கட்டங்கள் நிறைவடைந்துள்ளன. யாழ். நகரப் பகுதிகளிலும், அதனைச் சூழவுள்ள பகுதிகளிலும் ஒரு சில கடை உரிமையாளர்கள் தமது கழிவு சு... வடிகாலினுள் தள்ளி... தாக அறிகிறோம். இது தெ...முறைப்பாடுகளும் கிடைக்கப்பெற்றுள்ளன. இவ்வாறு பொறுப்பற்ற விதத்தில் கழிவுகளை வடிகாலினுள் போடுவதால் நீரோட்டம் தடைப்பட்டு உயிராபத்துக்களை ஏற்படுத்தும் நுளம்புகள் பெருக வழி ஏற்படுகிறது. இதேவேளை வடிகால்களில் உணவுக் கழிவுகள் கொட்டப்படுவதும், எமது பணியாளர்களால் இனங்காணப்பட்டுள்ளது. உணவுக் கழிவுகள் துர்நாற்றம் வீசுவதற்கு ஏதுவாக அமைவதோடு சுகாதாரச் சீர்கேடுகளையும் ஏற்படுத்தும். இந்த விடயம் கவனத்துக்கு கொண்டுவரப்பட்டுள்ளது. மாநகரப் பகுதியில் திண்மக் கழிவகற்றும் செயற்பாடு காலையும், மாலையும் இடம்பெறுகிறது. கழிவுகளை கண்ட இடங்களிலும் வீசாது உரிய முறைப்படி மாநகர சபையின் வாகனங்களில் ஒப்படைப்பது அனைவரது கடமையும், பொறுப்புமாகும்.
இனிவரும் காலங்களில் கழிவுகளை உரியமுறையில் கையாளாமல் வடிகாலுக்குள்ளேயும், பொது இடங்களிலும் கொட்டுபவர்கள் இனங்காணப்பட்டு அவர்களுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார். (ப)

# சட்டவிரோத மணல் அகழ்வு; முல்லையில் இருவர் கைது!

முல்லைத்தீவு, ஜூலை. 10
முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பிரதேசத்துக்குட்பட்ட சுதந்திரபுரம் ஆற்றுப்பகுதியில் சட்டவிரோதமாக மணல் அகழ்வில் ஈடுபட்டனர் என இருவர் கைது செய்யப்பட்டனர். அத்துடன் இரண்டு உழவு இயந்திரங்களும் கைப்பற்றப்பட்டன.
முல்லைத்தீவு, சுதந்திரபுரம் காட்டுப்பகுதியில் நேற்றுமுன்தினம் சிறப்பு அதிரடிப்படையினர் முன்னெடுத்த நடவடிக்கை ஒன்றின் போதே இவர்கள் கைதுசெய்யப்பட்டனர் என்றும், அவர்கள் புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. கைது செய்யப்பட்ட இருவர் மீதும் வழக்குப் பதிவு செய்த பொலிஸார் அவர்களை பொலிஸ் பிணையில் விடுவித்தனர். மணல் ஏற்றப்பட்ட இரண்டு உழவு இயந்திரங்கள் தொடர்ந்தும் தடுத்துவைக்கப்பட்டுள்ளன. குறித்த நபர்கள் மீதான வழக்கு விசாரணைகள் எதிர்வரும் 13ஆம் திகதி முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் மன்றில் விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்படவுள்ளன என்று புதுக்குடியிருப்புப் பொலிஸார் தெரிவித்தனர். (ப-19)



## 'யாழ்.நகர் 400' அட்டைப்பட ஓவியப் போட்டி

யாழ்ப்பாணப் பிரதேச கலாசாரப் பேரவை 2021ஆம் ஆண்டில் யாழ்ப்பாணம் நகரமாகி 400 ஆண்டுகள் நிறைவடைவதை சிறப்பிக்கும் வகையில், 'யாழ்.பாடி' கலாசார மலர் - 5 க்கான அட்டைப்படம் பெறுதல்தொடர்பாக 'யாழ்.நகர்-400' எனும் தொனிப்பொருளில் ஓவியப் போட்டியொன்றை நடத்தவுள்ளது.

கிடைக்கப்பெறும் ஓவியங்களிலிருந்து பரிசீலனைக் குழுவினரால் தெரிவு செய்யப்பட்டு முதலாம் இடத்தைப் பெறும் ஓவியம் 2021ஆம் ஆண்டில் வெளியிடப்படவுள்ள யாழ்.பாடி கலாசார மலர்- 5 க்கான அட்டைப்படமாக தெரிவு செய்யப்படுவதோடு மேலும் தரமான ஓவியங்கள் தெரிவு செய்யப்பட்டு பரிசில் மற்றும் சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன.

போட்டி நிபந்தனைகளாக 2021ஆம் ஆண்டில் யாழ்ப்பாணம் நகரமாகி 400 ஆண்டுகள் நிறைவடைவதையொட்டி நடத்தப்படும் ஓவியப் போட்டிக்கு 'யாழ்.நகர் 400' எனும் தொனிப்பொருளில் ஓவியங்கள் அமைவதோடு திறந்த பிரிவுகளாக நடைபெறும்.

நீங்கள் விரும்பிய வடிவத்தில் விரும்பிய மூலகத்தைக் கொண்டு ஓவியம் தீட்டலாம். ஓவியம் 18x14 அங்குலத்தைக் கொண்டிருத்தல் வேண்டும். ஒருவர் ஒரு ஓவியத்தை மாத்திரமே போட்டிக்குச் சமர்ப்பிக்க முடியும். போட்டியாளர் யாழ்ப்பாண மாவட்டத்தை நிரந்தர வதிவிடமாகக் கொண்டிருத்தல் வேண்டும். அனுப்பப்படும் ஓவியம் இதற்கு முன்னர் வேறு எந்தப் போட்டிக்காகவும் சமர்ப்பித்ததாக இருக்கக் கூடாது. போட்டியாளர் உரிய விண்ணப்பப் படிவத்தைப் முழுமைப் படுத்தி பாடசாலை மாணவராயின் பாடசாலை அதிபரிடமும் ஏனையோர் கிராம அலுவலரிடமும் உறுதிப்படுத்தி ஓவியத்தின் பின்புறத்தில் ஒட்டி அனுப்புதல் வேண்டும். சரியான முறையில் போட்டி நிபந்தனைகளுக்கு ஏற்ப சமர்ப்பிக்கப்படாத உரிய முறையில் விண்ணப்பப் படிவம் முழுமைப்படுத்தப் படாத ஓவியங்கள் போட்டியில் சேர்த்துக் கொள்ளப்படாது.

நிராகரிக்கப்படும். போட்டியாளரால் அனுப்பி வைக்கப்படும் ஆக்கங்கள் பிரபல நடுவர் குழுவினரால் பரிசீலனைக்குட் படுத்தப்பட்டு சிறந்த ஓவியங்கள் தெரிவுசெய்யப்படும்.

ஓவியப் போட்டிக்கு விண்ணப்பிப்போர் ஒக்ரோபர் மாதம் 29ஆம் திகதிக்கு முன்னதாக ஓவியத்தை சமர்ப்பிக்க வேண்டும். பிரதேச செயலாளர், பிரதேச செயலகம், யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்புமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (த)

### புதுக்குடியிருப்பு காணி விடயத்தில்

# படையினர் வழங்கியிருந்த வாக்குறுதிக்கு என்னவானது?

**முல்லைத்தீவு, ஜூலை 10**

**முல்லைத்தீவின் புதுக்குடியிருப்பில் 68 ஆவது படைப்பிரிவு கையகப்படுத்தி வைத்திருக்கும் பொதுமக்களின் காணியை விடுவிப்பது தொடர்பில் படையினர் கொடுத்த வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவில்லை என்று சுட்டிக்காட்டியுள்ள முல்லைத்தீவு மாவட்ட உண்மைக்கும் நல்லிணக்கத்துக்குமான மன்றம், இது பற்றி மாவட்டச் செயலருக்கு மனுக் கொடுத்துள்ளது.**



அந்த மனுவில் முல்லைத்தீவு செம்மலையில் இயங்கிக்கொண்டிருக்கும் சமுதாய அபிவிருத்தி நிறுவனத்தின் கீழ் உண்மைக்கும் நல்லிணக்கத்துக்குமான மன்றம் இயங்கிக்கொண்டிருக்கின்றது முல்லைத்தீவு மாவட்டத்துக்குள் நல்லிணக்கத்துக்கு பாதகமான செயற்பாடுகளை கண்டறிந்து அவற்றுக்குத் தீர்வு பெற்றுக்கொடுப்பதற்கு உதவுவதே இதன் பணி.

அந்தவகையில் புதுக்குடியிருப்பில் 7ஆம் வட்டாரம் இரணைப்பாலை வீதியில் 68ஆவது படைப்பிரிவினர் பொது மக்கள் 29 பேருக்குச் சொந்தமான 10 ஏக்கர் காணியில் நிலைகொண்டுள்ளார்கள்.

காணி உரிமையாளர்கள் மேற்கொண்ட போராட்டத்தின் போது அந்த இடத்துக்கு வருகைதந்த படைகளின் கட்டளை அதிகாரி மக்களின் நியாயபூர்வமான போராட்டத்தை ஏற்று மூன்று கட்டங்களாக காணிகளை விடுவிப்பதாக உறுதியளித்து 28.02.2017 ஆம் ஆண்டு பெப்ரவரி 28ஆம் திகதி மாவட்ட செயலாளருக்கு அறிவித்திருந்தார்.

முதலாவது கட்டமாக 20 பேரின் 7.75 ஏக்கர் காணி விடுவிக்கப்படும்.

இரண்டாவது கட்டமாக மேலும் 20 பேரின் 10 ஏக்கர் காணி விடுவிக்கப்படும். இந்தக் காணிகளிலுள்ள முகாம் அமைந்த கட்டடங்களை நீக்கி புதிய இடத்துக்கு கொண்டு செல்வதற்காக 3 மாதங்கள் தேவைப்படுகின்றமையால் மூன்று மாதங்களின் பின்னர் விடுவிக்கப்படும்.

மூன்றாம் கட்டமாக பொன்னம்பலம் மருத்துவமனை காணியை விடுவிக்க 6 மாதங்கள் தேவை என்று அன்று இருந்த படைகளின் கட்டளை அதிகாரி மாவட்டச் செயலருக்கு தெரியப்படுத்தி கடிதம் ஒன்றையும் புதுக்குடியிருப்பு பிரதேச செயலருக்கு கடிதம் மூலம் அனுப்பியிருந்தார்.

படைகளின் கட்டளை அதிகாரி குறிப்பிட்ட கட்டங்களின்படி முதலாவது கட்டமாக காணிகள் விடுவிக்கப்பட்டுள்ளன.

இரண்டாம் கட்டமாக காணிகள் எதுவுமே விடுவிக்கப்படவில்லை. அதனால் பாதிப்புக்குள்ளான மக்கள் பெரிதும் மனச்சோர்வுக்கு ஆளாகியுள்ளனர். சமாதானம் மற்றும் நல்லிணக்கத்தின் மீதான நம்பிக்கையையும் இழந்து காணப்படுகின்றனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் முதன்மை அரச அதிகாரி என்றவகையில் நாம் இந்தத் தகவலை தெரியப்படுத்துகின்றோம். இராணுவ கட்டளை அதிகாரியுடன் தொடர்பு கொண்டு இந்தப் பிரச்சினைக்குத் தீர்வை பெற்றுத்தருமாறு தங்களின் மேலான உதவியை நாம் நாடுகின்றோம். நாங்கள் மேற்கொள்கின்ற முயற்சிகளுக்கு நாம் எப்போதும் பக்கபலமாகஇருப்போம் பாதிப்புக்குள்ளான மக்களுக்கு நியாயம் பெற்றுத்தர நடவடிக்கை எடுக்கவும் என்றும் மனுவில் கோரப்பட்டுள்ளது. (த-19)

## விடத்தற்பளை நிலையத்தில் ஒரு கொரோனா

கொடிகாமம், ஜூலை 10

விடத்தற்பளை தனிமைப்படுத்தல் நிலையத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளவர்களில் ஒருவருக்கு கொரோனாத் தொற்று அறிகுறிகள் இருந்தமை உறுதிசெய்யப்பட்டது. அவர் சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெளிநாடுகளிலிருந்து வந்த ஒரு தொகுதியினர் நேற்று முன்தினம் கொடிகாமம் விடத்தற்பளை தனிமைப்படுத்தல் நிலையத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு நடத்திய பி.சி.ஆர். ப்ரிசோதனையிலேயே ஒருவருக்கு கொரோனாத் தொற்று ஏற்பட்டுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. (த-159)



## முகக் கவசங்கள் கையளிப்பு

வவுனியா, ஜூலை 10

கொரோனாத் தொற்றில் இருந்து பாதுகாக்கும் நோக்கில் பொதுமக்களுக்கு 3000 முகக்கவசங்கள் வவுனியாவில் இலவசமாக வழங்கப்பட்டன.

ஸ்ரீலங்கா டெலிகொம் பி.எல்.சி தொலைத்தொடர்பு நிலையத்தால் இலங்கை முழுவதும் ஒரு மில்லியன் முகக்கவசம் (மாஸ்க்) விநியோகிக்கும் திட்டத்தின் கீழ் இந்த நடவடிக்கை வவுனியாவில் முன்னெடுக்கப்பட்டது.

நிகழ்வில் பொலிஸ் உயர் அதிகாரிகள் , வர்த்தக சங்கத்தினர் , பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர். (ஐ-18)

## 298 பேர் தாயகம் திரும்பினர்

கொழும்பு, ஜூலை 10

ஐக்கிய அரபு எமிரேட்ஸிலிருந்து 298 இலங்கையர்கள் நேற்றுமுன்தினம் நாடு திரும்பினர். இலங்கை எயர்லைன்ஸ் விமான சேவைக்குச் சொந்தமான யு.எல் 226 என்ற சிறப்பு விமானத்தின் மூலமாக இவர்கள் ஐக்கிய அரபு எமிரேட்ஸிலிருந்து காலை 6.05 மணிக்கு மத்தள சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

அனைவரும் பி.சி.ஆர். பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். (ரி1)

## அத்தியட்சகர் தேவநேசன் மீதான விசாரணை நிறைவு

யாழ்ப்பாணம், ஜூலை 10

பருத்தித்துறை மந்திகை ஆதார மருத்துவமனை அத்தியட்சகர் மருத்துவர் தேவநேசனுக்கு எதிராக சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் பற்றிய விசாரணைகள் நிறைவுற்றுள்ளன.

அந்த விசாரணை அறிக்கை மேலதிக நடவடிக்கைக்காக மத்திய சுகாதார அமைச்சுக்கு அனுப்பப்பட்டுள்ளது என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

கொரோனா காலத்தில் தமக்கு ஒத்துழைப்பு வழங்க மறுப்பதால் நோயாளர்களுக்கு உரிய சேவைகளை வழங்க முடியவில்லையென்று அந்த மருத்துவமனையிலுள்ள சில மருத்துவர்கள் குற்றஞ்சாட்டியிருந்தனர். அவரை இடமாற்றம் செய்யத் தவறின் தாங்கள் பணியிலிருந்து விலகுவோம் என்றும் கூறியிருந்தனர். அதனால் அத்தியட்சகர் தற்காலிகமாக யாழ்ப்பாணப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைக்கு மாற்றப்பட்டார்.

பின்னர் மாகாண சுகாதார அமைச்சு மூவர் கொண்ட குழுவை நியமித்து குற்றச்சாட்டை விசாரிக்கக் கோரியிருந்தது. விசாரணை நிறைவடைந்து அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கையே மேலதிக நடவடிக்கைக்காக மத்திய சுகாதார அமைச்சுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணப் போதனா மருத்துவமனை பிரதிப் பணிப்பாளர் மருத்துவர் எஸ்.சிறிபவானந்தராஜா, யாழ்ப்பாணப் போதனா மருத்துவமனை மருத்துவர் பிறேமகிஸ்ணா மற்றும் நிர்வாக அதிகாரி செ.பிரணவநாதன் ஆகியோர் கொண்ட குழுவினரே குற்றச்சாட்டை விசாரித்திருந்தனர். (த-9)

# மரண அறிவித்தல்



மலர்வு
21 . 02 . 1936

உதிர்வு
09 . 07 . 2020

## திருமதி மீனாட்சி துரைராசா

பொன்னாலையைப் பிறப்பிடமாகவும் மூளாய் மேற்கை வதிவிடமாகவும் கொண்ட திருமதி மீனாட்சி துரைராசா நேற்று (09.07.2020) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கிருஷ்ணர் பறுவதம் தம்பதியரின் புதல்வியும், காலஞ்சென்றவர்களான வாரிக்குட்டி பார்வதி தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற துரைராசாவின் அன்பு மனைவியும், காலஞ் சென்றவர்களான தையல்முத்து சோமசுந்தரம், கிருஷ்ணர் சுப்பிர மணியம், மகாலட்சுமி வைரமுத்து, வள்ளியம்மை இராசா, தெய்வானை இராசா ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்ற நந்தினி சூரியகுமார் (கனடா), ரஞ்சினி (பிரதி பிரதம செயலாளர் அலுவலகம்- நிர்வாகம்) ஆகியோரின் அன்புத் தாயாரும், சூரியகுமாரின் (கனடா) மாமியாரும், திவ்வியாவின் (கனடா) பேர்த்தியும், தெய்வேந்திரராசாவின் பாசமிகு சிறிய தாயாரும், காலஞ்சென்ற சிவபாக்கியம் மற்றும் பொன்னுத்துரை, காலஞ் சென்றவர்களான வள்ளியம்மை, லட்சுமி, தர்மலிங்கம் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.07.2020) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூத வுடல் தகனக்கிரியைக்காக மூளாய் பித்தனை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"ஸ்ரீவைகுண்டம்"
மூளாய் மேற்கு, சுழிபுரம்.

தகவல்:
மகள்-ரஞ்சினி
077 8133 987

# மரண அறிவித்தல்



தோற்றம்
27 . 05 . 1930

மறைவு
05 . 07 . 2020

## கந்தையா வரோணிக்கம்

யாழ். சங்கானையைப் பிறப்பிடமாகவும், பிரான்ஸ் Drancy ஐ வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா வரோணிக்கம் அவர்கள் 05-07-2020 ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான அந்தோணி அன்னம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான நாகன் தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ் சென்ற கந்தையா அவர்களின் அன்பு மனைவியும், மேரிசுசீலா(சுவிஸ்), சால்ஸ் (சுவிஸ்), டோமினிக்(இலங்கை), றெஜினா(பிரான்ஸ்), செல்வதீஸ்(பிரான்ஸ்), வனிதா (பிரான்ஸ்), டொனால்ட்(அப்பன் - பிரான்ஸ்), லிவ்வரன்(பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், ஸ்ரனிஸ்லாஸ், காலஞ்சென்ற இரத்தினராஜா மற்றும் அலெக்ஸ்சாண்டர், ரஜனி, ஜொவிற்றா, செலின், சிவசங்கரி, மிரினா ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ் சென்றவர்களான ஞானம்மா, ஜோர்ஜ், மகேஸ்வரி, எட்வேட் மற்றும் மேரிராணி, ஜோசேப், ஆனந்தராஜா, மேரி மெற்றலின் ஆகியோரின் அன்புச் சகோதரியும், எமிலின், நிரோஜினி, யூட், டியானா, டெனிசியா, டானிலா, டொறிங்ஸ்ரன், கறிங்ஸ்ரன், கொலிங்ஸ்ரன், மறிங்ஸ்ரன், ஜெனிட்டா, தன்சிஸ்கா, நிதர்சன், அனோஜா, றேனுஜா, டிலோஜன், றொசாந், கெவின், டலின், நிவேதா, பிரதீப், பிரவீன், மதுசன், யனிஸ், றியான், லமிறன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், றிசிக்கா, லக்சனா, அஸ்சினா, அம்சன், அரோன், ஆர்யன், சுசானா, இலியானா, திசாரத், லிவிஸ் சால்ஸ் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் பிரான்ஸில் இன்று (10.07.2020) முற்பகல் 10 மணியளவில் (இலங்கை நேரம் 1.30 மணி) நடைபெறும் .

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள் ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
சங்கானை.
டொமினிக் குடும்பத்தினர்

ES Printers
357, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
021 492 7471, 021 492 7472
esprintersjaffna@gmail.com
450/=

# கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் முன்னாள்
ஆசிரியர்
**வைத்திலிங்கம் பேரம்பலம்**
அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும்
அவரது குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்ப
தோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
**பாடசாலைச் சமூகம்**
**யா/ யாழ் இந்து ஆரம்ப பாடசாலை**
(es.32911) (13.17)

# WALK – IN – INTERVIEW
## NIHR AF Project - Faculty of Medicine, University of Jaffna

**Post of Research Fellow forInformation Technology - 01Vacancy, Data Collectors - 15 Vacancies and Data Collecting Assistant -15 Vacancies (Full Time, on Contract Basis)**

**UNIVERSITY OF JAFFNA, SRI LANKA established a medical research on Global Health Research on Atrial Fibrillation Management Projectin partnership with University of Birmingham, UKFunded by National Institute for Health Research (NIHR), UK**

**Required qualifications and experience:**

1. **Research Fellow (Information Technology)**

**Requirements:**
- A bachelor degree in Information Technology/ Computer Science/ Computer Engineering / Software Engineering / relevant field from UGC approved University / HEI or equal qualification.
- At least 1 year experience in Information Technology based research field within a multidisciplinary team.

***Remuneration:*** *A monthly salary of LKR 60,000.00 inclusive of CLA and you will be contribute 8% of your salary towards the Employee's Provident Fund and the employer will contribute 12% of your salary towards Employees' Provident Fund and 3% towards Employees Trust Fund.*

2. **Data Collectors :**

**Requirements:**
- A bachelor degree from UGC approved University / HEI or other equal qualification
- Proven working experience in health research related data collection andstrong analytical skills with the ability to collect, organize, analyze, and disseminate significant amounts of information with attention to detail and accuracy.
- Ability to handle e- based data collections.
- Ability to work in any part of Northern Province.

***Remuneration:*** *A monthly salary of LKR 40,000.00 inclusive of CLA and you will be contribute 8% of your salary towards the Employee's Provident Fund and the employer will contribute 12% of your salary towards Employees' Provident Fund and 3% towards Employees Trust Fund.*

3. **Data Collecting Assistants :**

**Requirements:**
- 3 passes in G.C.E. Advance Level (A/L)
- Proven working experience in health research related data collection andstrong analytical skills with the ability to collect, organize, analyze, and disseminate significant amounts of information with attention to detail and accuracy.
- Ability to handle e- based data collections.
- Ability to work in any part of Northern Province.

***Remuneration:*** *A monthly salary of LKR 30,000.00 inclusive of CLA and you will be contribute 8% of your salary towards the Employee's Provident Fund and the employer will contribute 12% of your salary towards Employees' Provident Fund and 3% towards Employees Trust Fund.*

**General Conditions:**
- Should be a citizen of Sri Lanka

**Professional competencies required:**
- High level of proficiency in written and spoken English and Tamil
- High level of IT literacy, especially in the areas of Electronic mailing, Word and Excel for office environment, and project management platforms.
- Ability to communicate effectively in Tamil and in English with officials and different stakeholders.
- Ability to function effectively in a team environment inspiring trust and cooperation of other team members.
- Ability to achieve the targets in time align plan.

Walk in Interview for the above positions - On Contract Basis will be held on **20.07.2020 from 3.00 PM to 4.00PM**, at the **Board Room, Faculty of Medicine, University of Jaffna**.

Eligible candidates are requested to be present for an interview with self-prepared separate application for each post in the prescribed format available in the University website along with relevant original educational qualification certificates, birth certificate, experience certificates and National Identity Card on the date and the time mentioned above.

For further details please refer the University of Jaffna website – www.jfn.ac.lk

**Registrar**
**University of Jaffna**

# வலிகாமம் கிழக்கில் வரவேற்புத் தூண்கள்

வலிகாமம் கிழக்கு பிரதேச சபை எல்லைகளில் மும்மொழிகளிலான வரவேற்பு கொங்கிறீட் தூண்கள் அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று வலிகாமம் கிழக்கு பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்தார்.
இதனடிப்படையில் யாழ்.- பருத்தித்துறை வீதியில் யாழ் .- பலாலி வீதி, இருபாலை - கோண்டாவில் வீதி, கைதடி - மானிப்பாய் வீதி, புத்தூர் - சுன்னா கம் வீதி, இராச வீதி, அச்சுவேலி - பலாலி வீதி, தொண்டமனாறு - தெல்லிப்பழை வீதி, புத்தூர்- சாவகச்சேரி வீதி ஆகிய பிரதான வீதிகளில் வலிகாமம் கிழக்குப் பிரதேச சபையின் ஆட்சி எல்லைகளிலேயே குறித்த வரவேற்புத் தூண்கள் அமைக்கப்படவுள்ளன.
இதற்காக சபை நிதியில் 1.42 மில்லியன் ரூபா செலவில் மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு கேள்விக் கோரல்கள் மூலம் ஒப்பந்தங்கள் செய்யப்பட்டுள்ளன. வலிகாமம் கிழக்கு பிரதேச சபை 104 சதுர கிலோ மீற்றர் பிரதேசத்தையும், 74 ஆயிரம் வரையிலான மக்களையும் கொண்ட, யாழ்.குடாநாட்டில் உள்ள பரந்த பிரதேச சபை ஆகும். இந் நிலையில் பிரதேச எல்லைகளுக்கு வரவேற்புத் தூண்களை அமைப்பதன் வாயிலாக பிரதேசத்திற்குள் வருபவர்களை சிறந்த முறையில் வழிகாட்டவும் தமிழர் பண்புகளில் ஒன்றான வரவேற்கும் பாங்கை வெளிப்படுத்துவதாகவும் அமையும் என வலிகாமம் கிழக்கு பிரதேச சபைத் தவிசாளர் மேலும் தெரிவித்தார்.
இந்தத் தூண்களில் "வலிகாமம் கிழக்கு பிரதேச சபை" அன்புடன் வரவேற்கின்றது என்ற வாசகம் முதலில் தமிழிலும், அடுத்து சிங்களத்திலும் அதனைத் தொடர்ந்து ஆங்கிலத்திலும் அமையப்பெறவுள்ளன எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது. (ரி3)

**அரச மற்றும் தனியார் தொழில் வாய்ப்பொன்றினை இலகுவாக பெறக்கூடிய கற்கை நெறிகள் யாழ்ப்பாணத்தில் ஆரம்பமாகின்றன**

- GCE O/L, A/L தகைமை இல்லாத மாணவர்களுக்கு இலங்கை அரசின் NVQ ஊடாக GCE O /L, A/L தகைமையினை TVEC யின் NVQ 4 கற்கை நெறியின் ஊடாக பெற்றுக் கொள்ளலாம்.
- O/L, A/L முன்பள்ளி ஆசிரியர்கள் மற்றும் தொழில் வாய்ப்பொன்றினை எதிர்பார்த்திருக்கும் மாணவர்கள் ஆகியோர்களுக்கான தொழில்சார் கற்கை நெறிகளை அரச அங்கீகாரம் பெற்ற Pebbles Academy யினால் யாழ்ப்பாணத்தில் நடத்தப்படுகின்றன.
- Pre School Teachers Training முன்பள்ளி ஆசிரியர் பயிற்சி நெறி (NVQ) Level- 4
- 6 மாத கால கற்கை நெறியை பூர்த்தி செய்யும் மாணவர்களுக்கு 6 மாத முன்பள்ளி ஆசிரியர் பயிற்சியும் வழங்கப்படும்.
- அத்தோடு (TVEC) யின் அரச அங்கீகாரம் பெற்ற Pebbles Academy யினால் NVQ - 4 சான்றிதலும் வழங்கப்படும்.
- இக் கற்கை நெறிகளை நீங்களும் கற்பதன் ஊடாக அரச அங்கீகாரம் பெற்ற NVQ - 4 சான்றி தழ்களை பெற்று அரச மற்றும் தனியார் தொழில் வாய்ப்பொன்றினை இலகுவாக பெற்றுக் கொள்ளுங்கள்.
- இக் கற்கை நெறிகள் யாவும் எதிர்வரும் ஜுலை மாதம் 11ம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ்ப்பாண நூலகத்தில் ஆரம்பமாகின்றன.
- இக் கற்கை நெறிகளை நீங்களும் கற்க விரும்பினால் கீழ் காணும் தொலைபேசி இலக்கங் களுக்கு அழைத்து முன்கூட்டியே உங்களை பதிவு செய்துகொள்ளுங்கள்.

மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள்.

Pebbles academy
Do well in whatever you do.

Jaffna +94 77 5697 715/ +9477 17 79 170
Head Office +94 750 84 74 74 /+94 67 49 29 229
www.pebbles.academy/ Email: info@pebbles.academy
Facebook page: Pebbles Academy Address: Technical College Road.Akkaraipattu, Sri Lanka.

## வீடு வாடகைக்கு தேவை

சுன்னாகம், மருதனார்மடம், மல்லாகம், கந்தரோடை பகுதிகளில் களஞ்சிய அறையாக பயன்படுத்தக் கூடிய லேடன் லொறி சென்று வரக் கூடிய வசதியுள்ள வீடு வாடகைக்குத் தேவை.

தொடர்பு:077 436 2892

## பெண் உதவியாளர் தேவை

உடல் நலம் குன்றிய (74) எழுபத்து நான்கு வயதுடைய முதிய பெண் ஒருவரின் உடல் சம்பந்தமான - உணவு சம்பந்தமான பராமரிப்புக்கு மட்டும் பெண் உதவியாளர் ஒருவர் எம்முடன் தங்கியிருந்து பராமரிப்பதற்குத் தேவைப்படுகின்றார். ஊதியம் நேரில் பேசித்தீர்க்கலாம்.

தொடர்பு: கந்தசாமி விஜயகுமார் (குட்டித்தம்பி)
அம்பாள் ஸ்ரோர்ஸ்,
ஆலடி, அராலி தெற்கு,
வட்டுக்கோட்டை.
077 923 8976

Faculty of Management Studies & Commerce, University of Jaffna, Sri Lanka.

**Bachelor of Business Administration / Bachelor of Commerce**
**1st Year 2nd Semester Examinations – 2018**
**and**
**1st Year 1st Semester Examinations – 2018 Repeat (New / Old Syllabus)**

The above examinations cancelled due to unavoidable circumstances have been rescheduled as follows. Please find further details from our website, http://www.maco.jfn.ac.lk/.

| Examination | Date |
|---|---|
| 1st Examination in Business Administration 2nd Semester – 2018 | 20th July 2020 |
| 1st Examination in Commerce 2nd Semester – 2018 | 21st July 2020 |
| 1st Examination in Business Administration, 1st Semester - 2018 (Repeat) | 22nd - 30th July 2020 |
| 1st Examination in Commerce, 1st Semester - 2018 (Repeat) | 22nd -29th July 2020 |
| 1st Examination in Business Administration, 1st Semester - 2018 Repeat (Old Syllabus) | 24th July 2020 |

Registrar
University of Jaffna.
09/07/2020

**கலைப்பீடம்,யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் - இலங்கை**
**பட்டப்பின் கல்வியியல் டிப்ளோமா கற்கைநெறி பரீட்சைகள் 2018/2020**
**(பகுதிநேரம் I) இரண்டாம் அரையாண்டு**

09.03.2020 அன்று இடைநிறுத்தப்பட்ட மேற்படி பரீட்சையானது எதிர்வரும் யூலை 18ஆம், 19ஆம் திகதிகளில் நடைபெறும்.
மாணவர்கள் அனுமதி அட்டையுடன் பரீட்சைக்கு சமூகம் தருமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.
பரீட்சைக்கான நேரஅட்டவணையை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கல்வியியல் துறை அலுவலக விளம்பரப் பலகையில் பார்வையிடலாம்.
பதிவாளர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
07.07.2020

உ
சிவமயம்

# ஆச்சார்ய அபிஷேக அழைப்பு

தெளிவு குருவின் திருமேனி காண்டல்
தெளிவு குருவின் திருநாமம் செப்பல்
தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்
தெளிவு குருவின் திருஉரு சிந்தித்தல்தானே

அன்புடையீர் !
ஸ்வஸ்தி ஸ்ரீ நிகழும் மங்களகரமான சார்வரி வருடம் ஆனி மாதம் 28 ஆம் நாள் (12.07.2020) ஞாயிற்றுக்கிழமை ஸப்தமி திதியும் உத்தரட்டாதி நட்சத்திரமும் அமிர்த யோகமும் கூடிய காலை 6.24 முதல் 8.20 மணிவரையுள்ள மிதுனலக்ன சுபமுகூர்த்த வேளையில்
கீரிமலை நகுலேஸ்வர ஆதீனத்தை சேர்ந்த **கார்த்திகேயக்குருக்கள் - சாரதாம்பாள்** தம்பதியரின் பௌத்திரனும் மாவை ஆதீனம் **துரைச்சாமிக்குருக்கள் - விசாலாட்சியம்மா** தம்பதியரின் தௌஹித்திரனும் கோப்பாய் ப்ரம்மஸ்ரீ **மங்களேஸ்வரசர்மா இலட்சுமியம்மாள்** தம்பதியரின் மருகரும்

எமது ஜேஷ்ட புத்திரனுமாகிய

## ப்ரம்மஸ்ரீ சுப்பிரமணிய சர்மாவிற்கு

ஸ்ரீ நகுலேஸ்வரப்பெருமான், ஸ்ரீ மாவைக்கந்தன், ஸ்ரீ விஸ்வநாதப்பெருமான், ஸ்ரீ லங்னவ் விநாயகர், ஸ்ரீ கோப்பாய் முத்துமாரி அம்பாள் திருவருட் துணையுடனும் பெரியோர்களின் ஆசியுடனும் சமய, விஷேட, நிர்வாண தீக்ஷை ஆச்சார்ய அபிஷேகம் நடைபெற இருப்பதால் தாங்கள் தங்கள் குடும்ப ஸமேதராக வருகை தந்து ஆசி வழங்கி / ஆசி பெற்று கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்பாக அழைக்கின்றோம்.

**தீக்ஷா மண்டபம்**
நவாலி - அட்டகிரி
விசாலாட்சி அம்பாள் சமேத
ஸ்ரீ விஸ்வநாதீஸ்வரர்
தேவஸ்தானம்.

**தீக்ஷா குரு**
வேதசிவாகமஞானபானு
சிவஸ்ரீ மு.சோமசுந்தரக்குருக்கள்
உரும்பிராய்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்
சிவஸ்ரீ கா. துரைச்சாமிக்குருக்கள் அகிலாண்டேஸ்வரி
தம்பதியர் அட்டகிரி வீதி, நவாலி வடக்கு மானிப்பாய்.
+ 94778458448, + 41795510062
(cs 32908) (13.17)

## VACANCY

We are leading Media Sector Private Company and Head Office located in Colombo and included regional Offices Island-wide and looking for an experienced

**HUMAN RESOURCE EXECUTIVE**

**Should Possess:**

- Experienced on overall HR and Administrative functions of and Organization
- Passed G.C.E (A/L) and Diploma Holder in HRM or Equivalent.
- Minimum 2 years' experience in a similar capacity
- Preferable age 25 - 35

**An attractive remuneration package inclusive of excellent career development opportunity awaits to the right candidate.**

Please forward your Resume via email or by post with two names of non-related referees within 10 days to:

The Director
ASK MEDIA (PVT) LTD
2-218 BMICH Office Complex Colombo 07.
Email: info@dantv.tv
(cs 32912) (13.17)

## வெலே சுதாவுக்கு போதை தடுப்பு பிரிவால் தகவல் பரிமாற்றம்

கொழும்பு, ஜூலை 10
போதைவஸ்து கடத்தல் காரன்வெலே சுதாவுக்கு பொலிஸ் போதைப் பொருள் தடுப்புப் பிரிவில் உள்ள அதிகாரிகள், சோதனை நடவடிக்கை தொடர்பில் தகவல்களை பரிமாறியுள்ளனர் என்று நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. வெலிக்கடைச் சிறைச்சாலை கொலைகள் தொடர்பான வழக்கு நேற்றுமுன் தினம் கொழும்பு மேல்நீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டபோது பணியில் இருந்து இடைநிறுத்தப்பட்டுள்ள பொலிஸ் போதைத் தடுப்பு பிரிவின் முன்னாள் பணிப்பாளர் நாலக டி சில்வா இதனை தெரிவித்துள்ளார். இது தொடர்பில் ஏற்கனவே பொலிஸ் அதிகாரி ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் எனவும் அவர் குறிப்பிட்டார்.

நல்லாட்சி அரசு

# பழிவாங்கலைத் தவிர எதையும் செய்யவில்லை!



### பிரதமர் மஹிந்த சாடல்

கடந்த நல்லாட்சி அரசு வரையறையின்றி பழிவாங்கல் செயற்பாட்டில் ஈடுபட்டதே தவிர மக்களுக்காக எவ்விதத் தியாகங்களை யும் மேற்கொள்ளவில்லை என ஶ்ரீலங்கா பொது ஜனபெரமுனவின் தலைவரும், பிரதமருமான மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

கடுகம்பளை ஈரியகொல்ல பிரதேசத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற சந்திப்பொன்றின் போதே பிரதமர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த அரசாங்கம் பழிவாங்கல் செயற்பாட்டுக்காக கவனத்தைச் செலுத்தியதே தவிர மக்களின் பிரச்சினைகள் அல்லது அபிவிருத்தி பற்றி சிந்திக்காமையால் நாட்டின் எதிர்கால பயணம் தடைப்பட்டுள்ளது. முப்பது வருட கால யுத்தம் நிறைவடைந்து ஒரு நாடு என்ற வகையில் இலங்கையை சுயாதீனமாக முன்னோக்கிக் கொண்டு செல்வதற்குத் தடையாக சர்வதேசத்தின் தாக்கம் காணப்பட்டமையுடன், 2015ஆம் ஆண்டு அவர்களுக்குத் தேவையான அரசை ஏற்படுத்திக் கொண்டது. இந்த தீர்மானமிக்க தேர்தலில் தமது கடமையை நிறைவேற்றுவது தொடர்பில் மக்கள் ஏற்கனவே தீர்மானித்து விட்டனர். தற்போது சஜித் ஐக்கிய தேசியக் கட்சியை இரண்டாகப் பிளவடையச் செய்து சிறிகொத்தவின் ஆட்சியைப் பிடிப்பதற்குத் தமக்கு வாக்களிக்குமாறு நாடளாவிய ரீதியில் பிரசாரம் செய்து வருகிறார். சிறிகொத்தவின் ஆட்சியை பிடிப்பதற்கு உங்கள் மதிப்புமிகுந்த வாக்குகளை வழங்குவதை விடுத்து நாட்டின் அபிவிருத்தி, பிள்ளைகளின் எதிர்காலம் மற்றும் முழு தேசத்தையும் கட்டியெழுப்புவதற்கு உங்கள் வாக்குகளை வழங்குங்கள் என்று பிரதமர் தெரிவித்தார். (ரி1)



நேற்றுமுன்தினம் பொத்துவில் பிரதேசத்துக்குத் தனிப்பட்ட விஜயத்தை மேற்கொண்ட இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவரும், நட்சத்திர துடுப்பாட்ட வீரருமான குமார் சங்கக்கார பொத்துவில் ஆதார வைத்தியசாலைக்குச் சென்றதுடன், வைத்தியசாலையின் அத்தியட்சகர் ஐ.எல்.எம்.றிபாஸ் உட்பட வைத்தியர்களையும் சந்தித்துக் கலந்துரையாடினார். (ரி3)

## ஹெலிகொப்டர் கொள்வனவுக்கு அமைச்சரவை அனுமதி !

கொழும்பு, ஜூலை 10
இலங்கை விமானப் படை விமானிகளின் பயிற்சிக்காக 4 ஹெலிகொப்டர்களை கொள்வனவு செய்வதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள் ளது.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்றுமுன் தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே அமைச்சரவை இணைப்பேச்சாளர் பந்துல குணவர்தன இதனைத் தெரிவித்துள்ளார். (ரி1)



## முகக்...

தப்படுவார்களென ஏற்கனவே அறிவிக்கப்பட்டு இருப்பினும் வடமாகாணத்தின் பல இடங்களில் பொதுமக்கள் முகக் கவசம் அணியாது நடமாடுவது அவதானிக்கப்பட்டுமுறைப்பாடுசெய்யப்பட்டுள்ளது. இது தொடர்பாக இனிவரும் நாள்களில் மிகவும்இறுக்கமாககண்காணிக்கப்பட்டு சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு வடக்கு மாகாண சுகாதார சேவைகள்பணிப்பாளர்மருத்துவக்கலாநிதி ஆ. கேதீஸ்வரன் தெரிவித்தார்.

இதுதொடர்பில்அவர்விடுத்துள்ளஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

நமது நாட்டில்கொரோனா நோய்தொடர்பான அபாயம் தொடர்ந்தும் இருப்பதால் மக்கள் தங்கள் வீடுகளுக்கு வெளியே செல்லும்பொழுது முகக் கவசம் அணிவதும், குறைந்தது இருவருக்கிடையில் 1 மீற்றர் இடைவெளியை பேணுவதும், சரியான முறையில் கைகளை அடிக்கடி கழுவுவதும் பொதுச் சுகாதார பாதுகாப்பு நடைமுறைகளாக கைக்கொள்ளப்பட்டு வருகின்றன.

மேலும் தற்போது நமது நாட்டில் மக்கள் வீட்டுக்கு வெளியில் செல்லும்போதும், பொது இடங்கள் மற்றும் பொது நிகழ்வுகளுக்கு வருகை தரும் பொழுதும், முகக்கவசம் அணிவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

மக்கள் பொது இடங்களில் நடமாடும் போது கட்டாயமாக முகக்கவசம் அணிவதை உறுதிப்படுத்துவதன் மூலம் தங்களையும் தங்கள் சமூகத்தையும் கொரோனா நோய்த் தொற்றிலிருந்து பாதுகாத்துக்கொள்வதுடன் கட்டாய தனிமைப்படுத்தலுக்கு உள்ளாவதை தவிர்த்துக்கொள்ளுமாறும் கேட்டுக்கொள்கின்றோம், என்றுள்ளது. (ஒ,5)

## கோணேச்சரத்தை...

கூட்டமைப்பின்திருகோணமலைமாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான இரா. சம்பந்தன் தெரிவித்தார்.

'திருக்கோணேச்சரம்இந்துக்களின்புனித தலம் இலங்கையில் தேவாரப் பாடல் பெற்றதலம். இதற்குப்பௌத்தமதத்தவர்கள் உரிமை கோர முடியாது' எனவும் அவர் திட்டவட்டமாகக் கூறினார்.

'திருக்கோணேச்சரம் கோயில் என்பது கோகண்ண விகாரை என்றே கூறப்படுகின்றது' என்று ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவால் நியமிக்கப்பட்டுள்ள ஜனாதிபதிசெயலணியின்உறுப்பினரும்முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான எல்லாவல மேதானந்த தேரர் 'சுடர்ஒளி' பத்திரிகைக்குத்தெரிவித்திருந்தார். அதற்குப்பதிலளிக்கும்போதே இரா. சம்பந்தன் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, எல்லாவல மேதானந்த தேரர் கூறும் கருத்தை அடியோடு நிராகரிக்கின்றோம். தொல்பொருள்களைப் பாதுகாக்கின்றோம் என்றபெயரில்தமிழர்களின்பூர்வீகஇடங்களினதும் இந்துக்களின் புனித தலங்களினதும் வரலாற்றை மாற்றியமைக்கும் நடவடிக்கைகளை ஜனாதிபதி செயலணி முன்னெடுக்க முடியாது. அதற்கு நாம் ஒருபோதும் அனுமதிக்கவே மாட்டோம். இனவாத மதவாதப் போக்கில் ஜனாதிபதி செயலணிசெயற்பட்டால்அதுநாட்டுக்குத் தான் பாதக விளைவுகளை ஏற்படுத்தும், என்றார். (ஒ,எ,22)

## மேதானந்த...

பொருத்தமற்றது என்று இந்துசமயப்பேரவையின் தலைவர் சி. சக்திகிரீவன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்தக் கருத்தை புத்திசாலித்தனமானதாகவோ, அறிவியல் சார்ந்ததாகவோ கருதமுடியாது. தற்போதுள்ள நல்லூர் ஆலயத்தை சபுமல் குமர என்ற சிங்கள இளவரசனுடன் தொடர்புபடுத்துவதை வரலாற்று ஆய்வாளர்கள் ஏற்பார்கள் என நம்பமுடியாது.

இதன் உண்மைத்தன்மையைக் கண்டு, சபுமல் குமாரவுடன் தொடர்புபடுத்திக் கூறியநல்லூர்ஆலயத்தின்அடையாளத்தைக் காண முற்பட்டால் அதை வரவேற்கத்தயாராக உள்ளோம், என்றார். (ப)

## விஸ்வரூப...

கந்தக்காட்டிலுள்ள போதைப் பொருளுக்கு அடிமையானவர்களுக்கு புனர்வாழ்வளிக்கும்நிலையத்திலிருந்துஜூன் மாதம்27ஆம்திகதிவெலிக்கடைசிறைச்சாலைக்கு மாற்றப்பட்ட கைதியொருவர் கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகியிருந்தமைகடந்த6ஆம்திகதிஉறுதிப்படுத்தப்பட்டது.

அவர்தங்கியிருந்தகந்தக்காடுபுனர்வாழ்வளிக்கும் நிலையத்திலுள்ளவர்களும் வெலிக்கடைசிறைச்சாலையிலுள்ளவர்களும் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டனர். அதற்கமைய கந்தக்காடு புனர்வாழ்வளிக்கும் நிலையத்தில் 450 பேர் பி.சி.ஆர். பரிசோதனைக்கு நேற்று உட்படுத்தப்பட்டனர். அவர்களில்56பேர் கொரோனாவைரஸ்தொற்றுக்குஉள்ளாகியிருக்கின்றமைஉறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அதேவேளை, மாரவில பகுதியைச் சேர்ந்தபெண்ணொருவருக்கும்கொரோனாத்தொற்றுஉறுதிசெய்யப்பட்டுள்ளது என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவித்தார்.

கந்தக்காடுபுனர்வாழ்வுமத்தியநிலையத்தில்ஆலோசகராகப்பணியாற்றும்பெண்ணுக்கே வைரஸ் தொற்றுக் கண்டறியப்பட்டுள்ளது. மொத்தம் 57 பேருக்கு தொற்று உறுதிசெய்ப்பட்டுள்ளது. இதனையடுத்து அவருடன் நெருங்கிய தொடர்பிலிருந்து 7 குடும்பங்களைச் சேர்ந்தவர்கள்சுயதனிமைப்படுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர்.

இலங்கையில் நேற்று மாலை வரை 2 ஆயிரத்து151கொரோனாநோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். அவர்களில் ஆயிரத்து 979 பேர் குணமடைந்துள்ளனர். 104 பேர் தொடந்தும் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (ஒ,எ)

## கோணேச்சரம்...

இடிக்கப்பட்டேதிருக்கோணேச்சரம் ஆலயம் கட்டப்பட்டுள்ளது என்று எல்லாவல மேதானந்த தேரரால் விடுக்கப்பட்டிருந்த அறிவிப்பு தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயேமௌலவிமேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

என்னுடைய ஆய்வுகளின்படி இராவணன் முஸ்லிம் மன்னன் என்பதே எனது கருத்து. திருகோணமலை கன்னியா வெந்நீர் ஊற்றுப்பகுதியில் 40 அடியில் சமாதியொன்று உள்ளது. 40 அடி சமாதி என்பது இன்று நேற்று வாழ்ந்த மனிதர்களுடையது அல்ல. பல்லாயிரம் வருடங்களுக்கு முற்பட்டதாகவே அது இருக்க வேண்டும். சமாதியானது இராவணனுடையது என்றும், அதற்கு அருகில் இருப்பது அவரின் தாயாருடையது எனவும் இந்தியாவில் இருந்துவருகைதந்திருந்த சீக்கிய ஆய்வாளர்ஒருவர்குறிப்பிட்டிருந்தார்.

கோணேச்சரம் கோவிலில் இராவணன் வெட்டு என்ற ஒன்றும் உள்ளது. இலங்கைக்குபௌத்தமதம்வந்து2ஆயிரத்து 500 வருடங்களே ஆகின்றன. இந்தக் காலப்பகுதிக்குள்வந்த எந்தவொரு மனிதனுக்கும்7அடிநீளத்துக்கும்மேல்சமாதி இல்லை. எனவே, 40 அடி சமாதி என்பது கிட்டத்தட்ட30ஆயிரம், 40ஆயிம்ஆண்டுகளுக்கு முற்பட்ட மக்களுக்குரியதாகும். 2 ஆயிரத்து 500 ஆண்டுகளைக் கொண்ட பௌத்தர்களின் விகாரையாக எப்படி கோணேச்சரம் கோவில் இருந்திருக்கமுடியும்? வரலாற்று ரீதியாக பார்க்கும்போது 2 ஆயிரத்து 500 ஆண்டுகளுக்குமுன்பிருந்தேஅதுஇருந்துள்ளது. ஆரம்பத்தில் இலங்கையில் ஆதாமின் வாரிசுகள்தான் வாழ்ந்தனர் என்பதே எனது கருத்து. அதன்பிறகு 2 ஆயிரத்து 800ஆண்டுகளுக்குமுன்னர்தான்விஜயன் வந்தார். விஜயன் எந்த மதத்தை சார்ந்தவர்என்றவினாஎழக்கூடும். அவர் ஒருபௌத்தராகவரவில்லைஎன்பதுமட்டும் உறுதி. விஜயன் வரும்போது இங்கு குவேனி வாழ்ந்துள்ளார். 2 ஆயிரத்து 500 ஆண்டுகளுக்கு முன்னர்தான் பௌத்தமதம்வந்ததெனில்குவேனியும் பௌத்தராகஇருப்பதற்குவாய்ப்பில்லை. ஒன்று மதம் இல்லாமல் வாழ்ந்திருக்கலாம். இல்லையேல் இந்து, இஸ்லாமாக வாழ்ந்திருக்கலாம். என்னுடைய ஆய்வின்படி அவர்கள் எல்லாம் ஆதாம் வாரிசுகளாகும்.

அதேவேளை, ராமர்என்பவர்ரஹ்மான். சீதாஎன்பவர்சய்யிதா. மரபுரீதியாகபேச்சுவழக்கு மாறியபோதே பெயர் மாறியிருக்கும். அவை இஸ்லாத்துக்குரிய சொற்கள். ராமரைக்கூடநாம்இறைதூதுவராக இருக்கலாம் என்றே நம்புகின்றோம். இராவணன் முஸ்லிமாக வாழ்ந்தவர். அவர் சில தவறுகளை செய்திருக்கக்கூடும். அவரை நல்வழிப்படுத்துவதற்காக இறைவன் ராமரை, இறைதூதுவராக அனுப்பியிருக்கலாம்என்பதுதான்எனது வாதம். இராவணன் சம்பந்தமான கதைகளில் நிறைய கற்பனைகள் உள்ளன. அவருக்குநிறையஅறிவு, சக்திஇருந்துள்ளது. இதனையே 10 தலைகள் என வர்ணித்துள்ளனர், என்றார். (ஒ,எ,44)

## தமிழரின்...

றார்கள். இதை அவர்கள் உடன் நிறுத்த வேண்டும். இவ்வாறு கடும் சீற்றத்துடன் கருத்து வெளியிட்டுள்ளார் முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீர.

வடக்கு, கிழக்கு மாகாணங்கள் தமிழர்களின் பூர்வீக பிரதேச அல்ல என்று சில தினங்களுக்கு முன்னர் கருத்துத் தெரிவித்திருந்த கிழக்கு தொல்பொருள் மரபுரிமைகளைப் பாதுகாக்கும் ஜனாதிபதி செயலணியின் உறுப்பினர் எல்லாவல மேதானந்த தேரர், தற்போது திருகோணமலையிலுள்ள கோகண்ண விகாரை மீதே திருக்கோணேஸ்வரம் ஆலயம் கட்டப்பட்டுள்ளது என்பதற்கான ஆதாரங்கள் தம்மிடம் உள்ளன எனவும், யாழ்ப்பாணத்திலுள்ள நல்லூர் கந்தசுவாமி ஆலயம் சபுமல்குமார என்ற சிங்கள இளவரசரினால் கட்டப்பட்டது எனவும் புதுக்குண்டுகளைத்தூக்கிப்போட்டுள்ளார். தேரரின் இந்தக் கருத்துக்களைக் கடுமையாகக் கண்டித்துள்ள தமிழ் இந்து சமூகத்தினர், கவலையும் அடைந்துள்ளனர்.

இது தொடர்பில் முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீர கருத்துத் தெரிவிக்கும் போது,

இலங்கை ஓர் ஜனநாயக நாடு. இங்கு இன, மத, ஜாதி பேதமின்றி அனைவரும் ஒற்றுமையாக வாழவேண்டும். ஆனால், இதைக் குழப்பியடிக்கும் விதத்தில் சிலர் செயற்படுகின்றார்கள். இன நல்லிணக்கத்துக்கும், மத நல்லிணக்கத்துக்கும் பாதக விளைவுகளை ஏற்படுத்தும் வகையில் சிலர் கருத்து வெளியிட்டு வருகின்றார்கள். இந்தக் குழப்பவாதிகளில் பௌத்த தேர்கள் சிலரும் அடங்குகின்றார்கள். இந்தத் தேரர்கள் தமிழ், இந்து மக்களைக் குறிவைத்து இனவாத, மதவாதக் கருத்துக்களை கக்கி அவர்களின் மனதைப் புண்படுத்தி வருகின்றார்கள். இதை அவர்கள் உடன் நிறுத்த வேண்டும், என்றார். (ஒ,5,22)

## தமிழர்களை...

ரும் முன்னாள் பிரதமருமான ரணில் விக்கிரமசிங்க கடும் அதிருப்தி வெளியிட்டுள்ளார்.

'கிழக்கில் தமிழ், முஸ்லிம் மக்களே பெருமளவில் வாழ்கின்றார்கள். இந்தநிலையில், அவர்களை அடிமைப்படுத்தவா தனிச் சிங்கள பௌத்தர்களைக்கொண்ட செயலணியை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச நிறுவியுள்ளார்?' எனவும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

தமிழ், முஸ்லிம் மக்களின் சார்பில் பிரதிநிதிகள் உள்ளடக்காமல் கிழக்கில் ஜனாதிபதி செயலணி தமது நடவடிக்கைகளை முன்னெடுக்கக்கூடாது எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார். இந்தச் செயலணி ஏன் அவசரப்பட்டு நிறுவப்பட்டது எனவும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார். (ஒ,5,22)

## சுமந்திரனுக்கு...

எம்.ஏ. சுமந்திரனுக்குவழங்கப்பட்டிருந்த பொலிஸ் விசேட அதிரடிப் படையினரின் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது. அவரின் உயிருக்கு அச்சுறுத்தல் உள்ளது என்று தெரிவித்தே பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது.

சுமந்திரன்மீதுதாக்குதல்மேற்கொள்ளத் திட்டமிட்டனர் என்ற சந்தேகத்தில் முன்னாள் போராளிகள் சிலர் கைது செய்யப்பட்டு அதுதொடர்பான வழக்கு விசாரணைகள்இடம்பெற்றுவருகின்றன. இந்த நிலையில் கடந்த நல்லாட்சி அரசின் காலத்தில்சுமந்திரனுக்குபொலிஸ்விசேட அதிரடிப்படையினரின் பாதுகாப்பு வழங்கப்பட்டது. அவ்வாறு வழங்கப்பட்ட அதிரடிப்படையினரின் பாதுகாப்பு தற்போதைய அரசின் ஆரம்ப நாட்களில் நீக்கப்பட்டு, பின்னர் ஒரு சில நாள்களில் மீள வழங்கப்பட்டு வருகின்றது.

தேர்தல்நெருங்கிவரும்நிலையில், சுமந்திரனின்உயிருக்கு மேலும் அச்சுறுத்தல் உள்ளதுஎன்றுதெரிவிக்கப்பட்டுஅவருக்கானபாதுகாப்புபலப்படுத்தப்பட்டுள்ளது. சுமந்திரன் தமிழ் மக்கள் மத்தியில்கூட விசேடஅதிரடிப்படையினருடனேசென்று வருகின்றார் என எதிர்த்தரப்புக்கள் விமர்சனங்களை முன்வைத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-26)

## யாழ்...

டார் சைக்கிள் விற்பனை நிலையத்தில் பணியாற்றும் 41 வயதுடைய ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

அவரது மோட்டார் சைக்கிள் விற்ப[illegible]ன நிலையத்துக்குச் சென்ற மூன்று [illegible]ர், அவர்வெளியேவருமாறு அழைத்து[illegible]ளனர். அவர் வெளியே வந்ததும் கத்தி[illegible]ல் குத்தி விட்டுத் தப்பிச் சென்றுள்ள[illegible]ர். காயமடைந்த நபர் யாழ்ப்பா[illegible]ம் போதனா மருத்துவமனையில் சே[illegible]ப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்[illegible]கு முன்பாகநேற்றுமுன்தினம்காலை[illegible]ள் வெட்டுத்தாக்குதல் சம்பவம் இடம்[illegible]றிருந்த நிலையில், நேற்றைய தினம்[illegible]ல் வேளைகத்திக்குத்துத்தாக்குதல்சம்[illegible]ம் நகரப்பகுதியில் இடம்பெற்றுள்ள[illegible]க்களிடையே அச்சத்தை ஏற்படுத்[illegible]ர்ளது. (ஒ,5,2[illegible])



## பாக். இந்துக் கோயில்: தடை மனுத் தள்ளுபடி!

இஸ்லாமாபாத், ஜூலை 10

பாகிஸ்தானில் இந்துக் கோயில் கட்டுவதற்கு தடை விதிக்கக் கோரி இஸ்லாமாபாத் உயர்நீதிமன்றில் தாக்கல் செய்த மனு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமாபாத்தில் உள்ள எச்9 பகுதியில் 20,000 சதுர அடியில் முதல் இந்து கோயில் கட்டப்படுகிறது. இதற்காக கடந்த 2 வாரங்களுக்கு முன்பு அடிக்கல் நடப்பட்டது.

பிரதமர் இம்ரான்கான் தலைமையிலான கூட்டணி ஆட்சியில் அங்கம் வகிக்கும் பாகிஸ்தான் முஸ்லிம் லீக் காயித் கட்சியினர் கோயில் கட்டுவதற்கு தடை விதிக்கக் கோரி இஸ்லாமாபாத் உயர்நீதிமன்றில் மனுத்தாக்கல் செய்தனர்.

இந்த வழக்கை விசாரித்த இஸ்லாமாபாத் உயர்நீதி மன்று இந்துக் கோயில் கட்டுவதற்குத் தடை விதிக்க முடியாது எனக் கூறி அந்த மனுவை தள்ளுபடி செய்ததுடன், நிலத்தை யாருக்கு எதற்காக ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்பதை மூலதன மேம்பாட்டு ஆணையமே முடிவு செய்யும் என்றும் தீர்ப்பளித்தது. (ரி)

வெளிநாட்டு மாணவர்களை வெளியேற்றும் முடிவு

# பல்கலைக்கழகங்கள் வழக்குத் தாக்கல்

நியூயோர்க், ஜூலை 10

**அமெரிக்காவில் கல்வி கற்கும் வெளிநாட்டு மாணவர்களை வெளியேற்றும் அரசாங்கத்தின் முடிவை எதிர்த்து ஹார்வர்ட் மற்றும் எம்.ஐ.டி பல்கலைக்கழகங்கள் வழக்குத் தொடர்ந்துள்ளன.**

கொரோனா வைரஸ் தொற்றால் அமெரிக்காவில் அனைத்து வகுப்புகளையும் ஒன்லைன் முறைக்கு மாற்றவுள்ளதாக அமெரிக்கப் பல்கலைக்கழகங்கள் அறிவித்துள்ளன.

ஆன்லைன் மூலம் வகுப்புகள் நடத்தப்பட்டால் வெளிநாட்டு மாணவர்கள் அமெரிக்காவில் இருந்து வெளியேற வேண்டும் என ட்ரம்ப் அரசாங்கம் அதிரடியாக அறிவித்தது.

இந்நிலையில் புலம்பெயர் மாணவர்களை வெளியேற்றும் அமெரிக்காவின் முடிவை எதிர்த்து ஹார்வர்ட், எம்.ஐ.ரி பல்கலைக் கழகங்கள் பொஸ்டன் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்துள்ளன. மாணவர்களின் நலனைக் கருத்தில் கொள்ளாமல் அமெரிக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளதாக மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வெளிநாட்டு மாணவர்களுக்கு உரிய கால அவகாசம் தராமல் அவசரகதியில் நடவடிக்கை எடுத்துள்ளதால் அமெரிக்க அரசின் முடிவுக்கு தடைவிதிக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ரி)

## இந்தியாவில் ஒரே நாளில் 487 பேர் பலி

இந்தியாவில் கடந்த 24 மணிநேரத்தில் கொரோனா வைரஸுக்கு 487 பேர் உயிரிழந்தமையை அடுத்து பலியானோர் எண்ணிக்கை 21 ஆயிரத்தைக் கடந்துள்ளது. பாதிக்கப்பட்டவர்கள் எண்ணிக்கையும், 7.50 லட்சத்தைவிட அதிகரித்துள்ளது என்று மத்திய சுகாதாரத்துறையின் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

## பிரிட்டனில் கொரோனா பலி 44,517

லண்டன், ஜூலை 10

பிரிட்டனில் கடந்த 24 மணி நேரத்தில் 126 பேர் கொரோனாத் தொற்றுக்கு பலியாகியமையைத் தொடர்ந்து பலியானவர்களின் எண்ணிக்கை 44,517 ஆக அதிகரித்துள்ளது.

பிரிட்டனில் சுமார் 630 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. செவ்வாயன்று 581 பேருக்கு கொரோனா உறுதிப்படுத்தப்பட்டது. பிரிட்டனில் இதுவரை 2,86,979 பேர் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர். (ரி)

## அமெரிக்காவின் முடிவால் சீனா அதிருப்தி

உலக சுகாதார அமைப்பிலிருந்து வெளியுறும் அமெரிக்காவின் முடிவை சீனா கடுமையாக விமர்சித்துள்ளது.

இதுகுறித்து சீன வெளியுறவுத் துறை அமைச்சின் செய்தித் தொடர்பாளர் ஷாவோ லிஜியன் தெரிவித்துள்ளதாவது,

"ஒப்பந்தங்களை மீறுதல், அமைப்பிடமிருந்து விலகுதல் போன்றவை அமெரிக்காவின் ஒருதலைப்பட்சநடவடிக்கையைக் காட்டுகிறது.

உலக சுகாதார அமைப்பு அதிகாரபூர்வ அமைப்பாகும். அமெரிக்காவின் விலகல் எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்துகிறது" என்று தெரிவித்துள்ளார். (ரி)



## ஐவரிகோஸ்ட் பிரதமர் திடீர் உயிரிழப்பு!

ஜமோஸோக்ரோ, ஜூலை 10

ஆபிரிக்க நாடான ஐவரி கோஸ்டில் அமைச்சரவைக் கூட்டத்தில் கலந்துகொண்ட பிரதமர் அமாடோ கோன் கோலிபாலி உயிரிழந்தமை அந்த நாட்டில் கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இரண்டு மாதங்களாக பிரான்ஸில் தங்கியிருந்து இதய சிகிச்சை எடுத்துக் கொண்ட கோலிபாலி அண்மையில் நாடு திரும்பியிருந்தார். இந்நிலையில் வாராந்த அமைச்சரவை கூட்டத்தில் நேற்று முன்தினம் அவர் கலந்துகொண்டிருந்தார். இதன் போது நோய்வாய்ப்பட்டு வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட அவர் சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளார். 61 வயதான அமாடோ கோன் கோலிபாலி எதிர்வரும் ஒக்டோபரில் இடம்பெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில், ஆளுங்கட்சி வேட்பாளராக தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தார். அவரது மறைவு ஜனாதிபதித் தேர்தல் குறித்தும் பல கேள்விகளை எழுப்பியுள்ளது. (ரி)




## எதியோப்பிய பொப் பாடகர் கொலை எதிரொலி பலியானோர் எண்ணிக்கை 239ஆக உயர்வு!

அடிஸ், ஜூலை 10

எத்தியோப்பியாவில் ஓரோமோ இனத்தைச் சேர்ந்த பிரபல பொப் பாடகர் ஒருவர் கொல்லப்பட்டமையைத் தொடர்ந்து கடந்த வாரம் முதல் எதியோப்பியாவில் இடம்பெற்று வரும் ஆர்ப்பாட்டங்கள் மற்றும் இன வன்முறைகள் காரணமாக உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 239 ஆக உயர்வடைந்துள்ளது. ஓரோமோ இனத்தைச் சேர்ந்த பொப் பாடகர் 'ஹாகலு ஹூண்டீசா' எதியோப்பியாவில் கடந்த ஜூன் 29 ஆம் திகதி அடையாளம் தெரியாத தாக்குதல்தாரிகளினால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

அதைத் தொடர்ந்து பிராந்தியத்தில் ஏற்பட்ட இந்த அமைதியின்மை காரணமாக ஒன்பது பொலிஸ் அதிகாரிகள், ஐந்து போராளிகள் மற்றும் 225 பொது மக்கள் உயிரிழந்துள்ளதாக ஓரோமியா பொலிஸ் ஆணையாளர் முஸ்தபா கெதிர் தெரிவித்துள்ளார். (ரி)

## மரண அறிவித்தல்



### யோகராசா மோகனதாஸ்

தாவளை, இயற்றாளை வரணியை பிறப்பிடமாகவும், புதிய செம்மணி, கல்வியங்காட்டை வசிப்பிடமாகவும் கொண்ட யோகராசா மோகனதாஸ் நேற்று (09.07.2020) வியாழக்கிழமை அகாலமரணமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற தங்கராசா மற்றும் இரத்தினமணி, ஆறுமுகம் பார்வதிப்பிள்ளை ஆகியோரின் அருமைப் பேரனும் யோகராசா - ரஞ்சித மலர் தம்பதியரின் பாசமிகு மகனும் நிசந்தன், டிலோஜன், பாமிலா ஆகியோரின் பாசமிகு சகோதரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் புதியசெம்மணி வீதி, வேளாதோப்பு, கல்வியங்காட்டிலுள்ள அவரது இல்லத்தில் இன்று (10.07.2020) வெள்ளிக்கிழமை அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பிற்பகல் 04.00 மணியளவில் தகனக்கிரியைக்காக செம்மணி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

புதிய செம்மணி வீதி,
வேளாதோப்பு, கல்வியங்காடு.

தகவல்: குடும்பத்தினர்

## கொரோனா...

பேருந்துகளில் பயணித்த ஆலோசகருடன் தொடர்புடையோரை கண்டறியும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டு உள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ஒ.5)

## லட்சத்தை...

தெருதங்கநகை உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. 24 கரட் தங்கத்தின் நேற்றைய விலை ஒரு இலட்சம் ரூபாவாகக் காணப்பட்டது. 22 கரட் தங்கத்தின் பெறுமதி 88 ஆயிரம் ரூபாவாக உள்ளது. செய்கூலி மற்றும் சேதாரத்துடன் 22 கரட் தங்க நகையின் விலை 97 ஆயிரம்ரூபாவாகக்காணப்படுகின்றது. இவ்வாறான விலை அதிகரிப்பு இதற்கு முன்னர்ஏற்படவில்லைஎன்றுகூறப்படுகின்றது. (ஒ.எ)

## மரண அறிவித்தல்

தோற்றம்
13
.
01
.
1947



மறைவு
09
.
07
.
2020

### சின்னத்தம்பி கந்தையா

மட்டுவிலைப் பிறப்பிடமாகவும் நாவற்குழியை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி கந்தையா நேற்று (09.07.2020) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற சதீஸ்குமார் மற்றும் தினேஸ்குமார் (லண்டன்), கிருபாலினி (கனடா) ஆகியோரின் தந்தையும், யோகச்சந்திரன் (கனடா), நிதர்சினி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனும், கபிசன், கிருத்திக், விகாஷ் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.07.2020) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நாவற்குழி பிணமுருங்கை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கேரதீவு வீதி,
நாவற்குழி, கைதடி.

(cs 3294) (13.17)

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

தோற்றம்
21
.
07
.
1941



மறைவு
09
.
07
.
2020

### முத்துக்குமாரு கனகசபாபதி

வேலணையை பிறப்பிடமாகவும், கந்தர்மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட முத்துக்குமாரு கனகசபாபதி நேற்று (09.07.2020) வியாழக்கிழமை இயற்கை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்துக்குமாரு - இராசம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - சுந்தரம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் பாக்கியலட்சுமியின் (ஓய்வுபெற்ற கிராம உத்தியோகத்தர் **J/104**) ஆருயிர்க் கணவரும் காலஞ்சென்ற இரத்தின சபாபதியின் அருமைச் சகோதரரும் காலஞ்சென்றவர்களான அன்னலட்சுமி, மகாலட்சுமி மற்றும் ஸ்ரீஸ்கந்தராஜா (கொழும்பு), யோகலட்சுமி (பிரான்ஸ்), காலஞ்சென்ற நித்தியலட்சுமி ஆகியோரின் மைத்துனருமாவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.07.2020) வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

40/4, புகையிரத வீதி கிழக்கு ஒழுங்கை,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

தகவல்: மனைவி

## மரண அறிவித்தல்



### இலட்சுமணர் சின்னத்தம்பி

சுழிபுரத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட இலட்சுமணர் சின்னத்தம்பி நேற்று (09.07.2020) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் இலட்சுமணர் - சின்னத்தங்கம் தம்பதிகளின் இரண்டாவது மகனும் செல்வேஸ்வரியின் அன்புக் கணவரும் கந்தையா வேதவனம் தம்பதியரின் அன்பு மருமகனும் சேதுப்பிள்ளை, இலட்சுமி, வேலாயுதம், சுப்பையா, பொன்னம்மா, வடிவேல், ஆறுமுகம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் மகாலட்சுமி, உதயலட்சுமி, முருகானந்தன், சிவச்செல்வன், கலைச்செல்வன், தாமரைச்செல்வன் ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவபாலன், சூரியகுமாரன், தேவிகா, மாதங்கி, அருட்சக்தி, சிந்துஜா ஆகியோரின் அன்பு மாமனாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.07.2020) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் முற்பகல் 10.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சுழிபுரம் திருவடிநிலை இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சுழிபுரம்.

தகவல்:- குடும்பத்தினர்

021 225 0241, 076 172 8309

# டிப்பர் மோதியதில் 18 மாடுகள் இறப்பு

கிளிநொச்சி, ஜூலை 10

கிளிநொச்சி பரந்தன் ஏ35 வீதியின் வெலிக்கண்டல் சந்திப் பகுதியில் வாகனத்தில் மோதுண்டு 18 மாடுகள் உயிரிழந்துள்ளன. கிளிநொச்சி பரந்தன் முல்லைத்தீவு ஏ35 வீதியில் நேற்று அதிகாலை இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விசுவமடு பகுதியில் இருந்து ஏ35 வீதியூடாக வேகமாக வந்த டிப்பர் வாகனம் வீதியால் சென்ற மாடுகளை மோதியுள்ளது. மாடுகளை மோதிய டிப்பர் அங்கிருந்து தப்பிச் சென்றுவிட்டது என்று, அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர்.

கிளிநொச்சி இரணைமடு குளத்தின் கீழ் சிறுபோக செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில் கால்நடைப் பண்ணையாளர்கள் தமது கால்நடைகளை பயிர்ச் செய்கைக்கு உட்படாத பகுதியான வெலிக்கண்டல் பகுதியில் வைத்து பராமரித்து வருகின்ற நிலையில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது. (எ)

# கைக் குண்டு, இராணுவச் சீருடை வாள்வெட்டுக் குழு வீட்டிலிருந்து மீட்பு

யாழ்ப்பாணம் மாவட்டச் செயலக தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலகம் முன்பாக வாள்வெட்டுத் தாக்குதல் நடத்தியவர்கள் பயன்படுத்தி வீடொன்று பொலிஸாரால் சுற்றி வளைக்கப்பட்டதுடன், அந்த வீட்டில் இருந்து கைக்குண்டு, மோட்டார் சைக்கிள்கள், இராணுவச் சீருடைகள், தேசிய அடையாள அட்டைகள் என்பன மீட்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த வீடு நீர்வேலி, கரந்தனில் உள்ளது என்றும், அந்த வீட்டிலுள்ள வாழைத் தோட்டத்துக்குள் ஆயுதங்கள் மறைத்து வைக்கப்பட்டிருந்தன என்றும் பொலிஸார் கூறுகின்றனர்.

யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தில் கடமையாற்றும் மல்லாகத்தை சேர்ந்த சுற்றுச்சூழல் அதிகார சபை சிற்றூழியர் மீதே நேற்றுமுன்தினம் காலை தாக்குதல் நடத்தப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்ட யாழ்ப்பாணம் தலைமையகப் பொலிஸ் நிலைய பெரும் குற்றத் தடுப்புப் பொலிஸ் பிரிவினரின் நடவடிக்கையில் சந்தேக நபர்கள் நேற்றுமுன்தினம் இரவு கைது செய்யப்பட்டனர். அவர்களில் பிரதான சந்தேகநபராக் கருதப்படும் ஜெகன் அல்லது கைலாயம் என்பவர் வழங்கிய வாக்குமூலத்தின் அடிப்படையில் குற்றச்செய லுக்கு தயாராகும் வீடு முற்றுகையிடப்பட் டதாகப் பொலிஸார் கூறுகின்றனர்.

அந்த வீட்டில் நடத்தப்பட்ட சோதனையில் கைக்குண்டு, வாள்கள் மூன்று, மோட்டார் சைக்கிள்கள் இரண்டு, இராணுவச் சீருடைகள், தேசிய அடையாள அட்டைகள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, சந்தேகநபர்கள் 6 பேரும் யாழ்ப்பாணம் நீதிமன்றில் முற்படுத் தப்பட்டனர்.

'சந்தேக நபர்கள் 6 பேருக்கும் நேற்று காலை (நேற்றுமுன்தினம்) மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் வழக்கு இருந்தது. அதனைச் சாட்டாக வைத்து காலை 8 மணிக்கு யாழ்ப்பாணம் மாவட்ட செயலக ஊழியர் மீது தாக்குதல் நடத்திவிட்டு தப்பிச் சென்று மல்லாகம் நீதிமன்றுக்குச் சென்றுள்ளனர்' என்று யாழ்ப்பாணம் தலைமையகப் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் பிரசாத் பெர்னாண்டோ மன்றுரைத்தார்.

சந்தேக நபர்கள் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி, பிணை விண்ணப்பம் செய்தார். 'உயிரை மதிக்காது வன்முறைகளில் ஈடுபட்டால் உள்ளேதான் தொடர்ந்து இருக்கவேண்டும்' என்று எச்சரித்த நீதிவான் சந்தேக நபர்கள் 6 பேரையும் வரும் ஜூலை 23ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார். (ஒ.5,26)

## நவாலி...

மணியளவில் கடைப்பிடிக்கப்பட்டது. பொலிஸார் மற்றும் இராணுவத்தினரின் தடைகளைத் தாண்டி உணர்வுபூர்வமாக நினைவேந்தல் அனுஷ்டிக்கப்பட்டது.

இந்த நினைவேந்தலைத் தடை செய்ய வேண்டும் என்று பொலிஸாரால் மல்லாகம் நீதிமன்றில் மனுத்தாக்கல் செய்யப்பட்டிருந்தது. மனுவை விசாரித்த நீதிமன்று நினைவேந்தலுக்குத் தடை விதிக்க முடியாது என்று அறிவித்தது. அதையடுத்து நினைவேந்தலுக்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

நேற்றுக் காலை வாழை மரங்கள் கட்டப்பட்டு, கொடிகள் கட்டப்பட்டு நினைவுத்தூபியில் நினைவேந்தலுக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டபோது, பொலிஸார் அவற்றைப் பிடுங்கியெறிந்தனர். நினைவேந்தலை தேவாலயத்துக்கு உள்ளேயே நடத்தலாம் என்றும், நினைவுத் தூபியில் நினைவேந்தலை நடத்தமுடியாது, சுடரேற்ற முடியாது என்றும் பொலிஸார் மிரட்டினர்.

இந்த நிலையில் நேற்று மாலை 4.15 மணியளவில் தேவாலயத்தில் நினைவேந்தல் ஆரம்பமானது.

யாழ். மறை மாவட்ட குரு முதல்வர் பி.ஜெ.ஜெபரட்ணம் திருப்பலி ஒப்புக்கொடுத்தார். பெரிய குருமட அதிபர் எஸ். ஜெ. இமானுவேல், பங்கின் குரு எஸ்.ஜே.அருட்செல்வன், மறைமாவட்ட நீதி சமாதான ஆணைக்குழுவின் தலைவர் எஸ்.வி.பி.மங்களராஜா. சென்ற் பீற்றர்ஸ் ஆலய குரு அலின் கருணாகரன் மற்றும் வணக்கத்துக்குரிய 15 இற்கும் மேற்பட்ட குருவா னவர்கள் பங்குகொண்டு திருப்பலி ஒப்புக் கொடுத்தனர்.

உயிரிழந்தவர்களின் உறவினர்கள் மெழுகுதிரி ஏற்றியும், தீபங்கள் ஏற்றியும் அஞ்சலித்தனர்.

அதன் பின்னர் தேவாலயத்துக்கு முன்பாக அமைக்கப்பட்டுள்ள நினைவுத் தூபியில் அஞ்சலி செலுத்துவதற்கு முயற்சித்தனர். இதன்போது அருட்தந்தையர்கள் மாத்திரமே அஞ்சலி செலுத்த முடியும் என்று பொலிஸார் தெரிவித்தனர். அருட்தந்தையர்கள் அஞ்சலி செலுத்தி முடிக்கும் தருவாயில், வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் அஞ்சலி செலுத்த முயன்றார். பொலிஸார் அவரைத் தடுத்தனர். அவர் பொலிஸாரைத் தள்ளிவிட்டு அஞ்சலி செலுத்தச் சென்றார். 'நீங்கள் அஞ்சலி செலுத்த முடியாது' என்று பொலிஸார் சிங்களத்தில் கூற, சிவாஜிலிங்கமும் பதிலுக்கு, நீதிமன்றம் அஞ்சலி செலுத்துவதற்கு எனக்குத் தடை விதிக்கவில்லை' என்று சொல்லிவிட்டு பொலிஸாரின் தடையை மீறி மெழுகுதிரி ஏற்றி அஞ்சலித்தார்.

பொதுமக்கள் எவரும் அஞ்சலி செலுத்தமுடியாது என்று பொலிஸார் புது முட்டுக்கட்டை போட்டனர். அங்கிருந்த மக்கள் பொலிஸாருடன் தர்க்கப்பட்டனர். அஞ்சலி செலுத்துவதைத் தடுக்க முடியாது என்று முரண்பட்டனர். பொலிஸார், இராணுவத்தினரை வரவழைத்து மக்களை அடக்க முயன்றபோதும் அது பலிக்கவில்லை. மக்கள் தடைகளைத் தகர்த்தெறிந்து அஞ்சலி செலுத்தினர். பொலிஸார் இறுதி ஆயுதமாக, கொரோனாவுக்கான சமூக இடைவெளி இல்லை என்ற குற்றச்சாட்டை முன்வைத்து நினைவேந்தலை தடுக்க முயன்றனர். ஆனால் பொதுமக்கள் உரிய சமூகஇடைவெளியைப் பேணி நினைவேந்தலைக் கடைப்பிடித்தனர்.

(ஒ.5,26,50)

## மாத்தளன்...

முல்லைத்தீவு, ஜூலை 10

முல்லைத்தீவு மாத்தளன் கடற்கரைப் பகுதியில் கடற்தொழிலாளர்களின் வாடியொன்றை நேற்று அதிகாலை சுற்றிவளைத்த படையினர் அங்கிருந்த பெண்கள், மீனவர்கள் உள்ளிட்ட பலர் மீது தாக்குதல் நடத்தினர் என்று பொலிஸில் முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டுளள்து.

கடற்படையினரின் தாக்குதலில் காயமடைந்த வயோதிபர் ஒருவர் புதுக்குடியிருப்பு மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார். தாக்குதலுக்கு உள்ளான இரண்டு பெண்கள் முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவுசெய்துள்ளனர்.

'இன்று (நேற்று) அதிகாலைவேளை மாத்தளன் பகுதியில் உள்ள வாடி ஒன்றினை சுற்றிவளைத்த கடற்படையினர் அங்கு இருந்து கடற்தொழிலாளர்களை வெளியேற முடியாதவாறு முற்றுகையிட்டு பொல்லுகள் கொண்டு தாக்குதல் நடத்தியுள்ளதுடன் வாடியை உடைத்து வாடிக்குள் இருந்து மின்கலம், மின் பிறப்பாக்கி, பணம், இயந்திரங்களை எடுத்துச் சென்றுள்ளார்கள். அதிகாலைவேளை கடற்படையினரின் தாக்குதலில் காயமடைந்து வீழ்ந்த வயோதிபரைக்கூட மருத்துவமனை கொண்டுசெல்லவிடாமல் தடுத்து நிறுத்தினர்' என்று அந்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-19)

## வட...

தேர்தல் செயலகத்தில் ஊடக பிரதானிகளை நேற்றுச் சந்தித்த போதே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தேர்தலின் முக்கியத்துவம் தொடர்பில் மக்களுக்கு ஊடகங்கள் தெளிவுப்படுத்த வேண்டும். இதேவேளை எதிர்வரும் தேர்தலில் மக்கள் அச்சமின்றி வாக்களிக்க முடியும். கொரோனா அச்சம் நீங்கவில்லை என்பதை அனைவரும் மனதில் வைத்துக்கொள்ள வேண்டும். தேர்தலை விட மக்களின் உயிரே எமக்கு மேலானது. இதற்கு அமைவாகவே வாக்களிப்பு நிலையங்களில் அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

இம்முறை தேர்தல் பணிகளில் இராணுவத்தினரை ஈடுபடுத்தப்போவதில்லை. பொலிஸார் மற்றும் விசேட அதிரடிப்படையினரே பாதுகாப்பு மற்றும் தேர்தல் பணிகளில் ஈடுபடுவார்கள். பாதுகாப்பு தொடர்பில் யாரும் சந்கேமடையத் தேவையில்லை.

இம்முறை தேர்தல் வாக்களிப்பு நிலையங்களில் அதிக தடவை செனிடைசர் பயன்படுத்த உள்ளமையால் இதற்கு மாத்திரம் மில்லியன் கணக்கில் செலவிட வேண்டியுள்ளது.

வழமையாக நடைபெறும் தேர்தலை விட இம்முறை தேர்தல் முற்றிலும் வித்தியாசமானது. அதாவது தேர்தலில் வாக்களிப்பு நிலையங்களில் பின்பற்றப்படும் நடைமுறைகள் சற்று வித்தியாசமாகக் காணப்படும். இதனால் இம்முறை தேர்தலுக்கு வழமையை விட அதிக நிதி செலவிட வேண்டிய நிலை காணப்படுகின்றது. சர்வாதிகார நாடு என்றால் இவ்வாறான தேர்தல் செலவீனங்கள் ஏற்பட வாய்ப்பு இல்லை. அதுவே ஜனநாயக நாட்டில் தேர்தலை நடத்தும் போது தேர்தல் செலவீனங்களை தவிர்க்க முடியாது, என்றார். (ஒ.5)

New Batch Start
Sinhala
Diploma / Spoken
British College
of Higher Studies
021 222 4550, 076 2800 208
Sirampiyady lane,
Stanley road, Jaffna.

பணிநிலை வெற்றிடங்கள்
யாழ் நகர முன்னணி சைவ உணவகத்தில்
பின்வரும் வெற்றிடங்கள் உண்டு
01. உணவு பரிமாறுபவர்
02. Chinese உணவு தயாரிப்பு உதவியாளர்
03. சுத்திகரிப்பாளர்
சம்பளம் நேரில் பேசித்தீர்மானிக்கப்படும்
077 711 2269
(ஊ 32911) (13.17)

தேவை

போட்டோ ஷொப், இன் டிசைனிங் தெரிந்த பணியாளர்கள் அச்சகமொன்றுக்கு இரவுப் பணிக்காகத் தேவை.
தொடர்புக்கு:- 0774843158



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 10.07.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.